பாரதியார் பாடல்கள்

மகாகவி
சி.சுப்ரமணிய பாரதி

ஆளுநர் அறிவிப்பு

மேதகு தமிழக ஆளுநர் வாழ்த்துரைஆளுநர் அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வாழ்த்துரை

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் வாழ்த்துரை

உயர்திரு தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் வாழ்த்துரை

மாண்பமை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வாழ்த்துரை

மொழிபெயர்ப்பாளர் கவிஞர் யூஷியின் குறிப்புரை

பாரதியார் பாடல்கள் முன்னுரை

பொருளடக்கம்

1. கடவுள் வணக்கம் 26
1.1. அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி 26
1.2. புதிய ஆத்திசூடி 28

2. இந்திய நாடு 30
2.3. பாரத நாடு 30
2.4. பாரத மாதா 34
2.5. எங்கள் தாய் 38
2.6. பாரத சமுதாயம் 42
2.7. எங்கள் நாடு 46
2.8. நாட்டு வணக்கம் 48
2.9. மாதாவின் துவஜம் 50

3. தமிழ்நாடு 54
3.10. செந்தமிழ்நாடு 54

4.தமிழ் மொழி 60
4.11. தமிழ் 60
4.12. தமிழ் மொழி வாழ்த்து 64

5. சுதந்திர வேட்கை 66
5.13. சுதந்திரப் பெருமை 66
5.14. சுதந்திர தாகம் 70
5.15. சுதந்திரப் பள்ளு 72
5.16. விடுதலை 76
5.17. சுதந்திர தேவியின் துதி 78
5.18. சுதந்திரப் பயிர் 82

Index

1. The Praise of God 27
1.1. Petitioning Mahasakti 27
1.2. New Athichoody 29

2. India 31
2.3. Our Country Bharat 31
2.4. Bharat Mata 35
2.5. Our Mother 39
2.6. The Commonwealth of India 43
2.7. Enkal Nadu 47
2.8. Adoration of the Country 49
2.9. The Beauteous Flag of the Mother 51

3. Tamil Land 55
3.10. Good Old Tamil-Land 55

4.Tamil Language 61
4.11. Tamil 61
4.12. Floursih for Ever 65

5. Freedom Fervour 67
5.13. Liberty 67
5.14. Thirst for Freedom 71
5.15. Pallar Dance 73
5.16. Deliverance 77
5.17. Hymn to the Goddess of Liberty 79
5.18. Freedom Plant 83

6.வீர உணர்ச்சி 84
6.19. அச்சமில்லை 84
6.20. சத்ரபதி சிவாஜி 86
6.21. துடிக்கின்ற நெஞ்சம் 92
6.22. கிளிக் கண்ணிகள் 96

7. சீர்திருத்தப் பாடல்கள் 100
7.23. முரசு 100
7.24. அறிவே தெய்வம் 108

8. குழந்தைகளுக்கு 112
8.25. பாப்பா பாட்டு 112

9. பெரியோரைப் போற்றுதல் 118
9.26. திலகர் முனிவர் கோன் 118
9.27. லாஜபதி 120
9.28. ராஜா ரவிவர்மா 122
9.29. மகாத்மா காந்தி பஞ்சகம் 124
9.30. ஏசு பிரான் 128

10. பெண் விடுதலை 130
10.31. பெண்கள் விடுதலைக் கும்மி 130
10.32. பெண்கள் வாழ்க! 134

11. பல்வகைப் பாடல்கள் 138
11.33. சிட்டுக்குருவி 138
11.34. வேண்டும் 140
11.35. அக்கினிக் குஞ்சு 142

6. Patriotic Spirit 85
6.19. Fear We Not 85
6.20. Chatrapati Shivaji's 87
6.21. The Present Condition of the Indians 93
6.22. Pseudo-Patriots 97

7. Songs of New Change 101
7.23. Tom Tom 101
7.24. Knowledge Alone is God 109

8. Songs for Children 113
8.25. Child's Song 113

9. Adoring the Great 119
9.26. On Tilak Maharaj 119
9.27. Lajapathy 121
9.28. On Ravi Varma 123
9.29. To Mahatma Gandhi 125
9.30. Jesus Christ 129

10. Women Liberation 131
10.31. The Kummi of Women's Freedom 131
10.32. Hail Womanhood 135

11. Multifaced Muse 139
11.33. The Sparrow 139
11.34. Aspirations 141
11.35. Fire-chick 143

11.36. தொழில் 144
11.37. காணிநிலம் 146
11.38. நிலாவும், வான்மீனும், காற்றும் 148
11.39. பொய்யோ? மெய்யோ? 152
11.40. நான் 154

12. அயல் நாடுகள் 158
12.41. மாஜினியின் சபதம் 158
12.42. புதிய ருஷியா 168
12.43. பெல்ஜியத்திற்கு வாழ்த்து 172

13. நெடுங்கவிதைகள் 178
13.44. குயில் பாட்டு 178
1. குயில் 178
2. குயிலின் பாட்டு 184
3. குயிலின் காதற் கதை 188
4. காதலோ காதல்! 200
5. குயிலும் குரங்கும் 204
6. இருளும் ஒளியும் 218
7. குயிலும் மாடும் 226
8. நான்காம் நாள் 244
9. குயில் தனது பூர்வ ஜன்மக் கதையுரைத்தல் 254

13.45. கண்ணன் பாட்டு 294
1. கண்ணன் - என் தோழன் 294
2. கண்ணன் என் சீடன் 302
3. கண்ணன் - எனது சற்குரு 314

11.36. Labour 145
11.37. A Plot of Land 147
11.38. Moonlight, Star and Wind 149
11.39. Illusion or Reality? 153
11.40. The Song of Myself 155

12. Foreign countries 159
12.41. Mazzini's Vow 159
12.42. New Russia 169
12.43. Ode To Belgium 173

13. Long Poems 179
13.44. Kuyil Pattu 179
1. Kuyil 179
2. The Kuyil's Song 185
3. The Kuyil's Story of Love 189
4. Lovesick 201
5. The Kuyil and the Monkey 205
6. Darkness and Light 219
7. The Kuyil and the Bull 227
8. The Fourth Day 245
9. The Kuyil's Story of her Previous Birth 255

13.45. Kannan Pattu 295
1. Krishna - My Friend 295
2. Kannan - My Chela 303
3. Kannan - My Sad-Guru 315

4. கண்ணம்மா - என் குழந்தை 322
5. கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை 326
6. கண்ணன் - என் - காதலன் 330
7. கண்ணம்மா - என் காதலி 334

13.46. பாஞ்சாலி சபதம் 336

4. Sri Krishna, the Little Daughter ..323
5. Kannan My Playful Boy 327
6. Kannan My beloved 331
7. Kannamma - My Love 335

13.46. The Oath of Draupati 337

Total Songs : 370
Total Lines : 2716

1. கடவுள் வணக்கம்

1.1. அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின்மீது தனியர சாணை,
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!

-

1.The Praise of God
1.1. Petitioning Mahasakti

Clarity of intellect, firmness of heart,
An inwardly coursing flood of love,
Unique lordship over the senses,
Longing quest all the time after the way
Of Your grace and establishment
In Karma-Yoga; May you grant me these
O Supreme Ens that is without
Any mark or guna, but indeed is all.

-T.N.Ramachandran

1.2. புதிய ஆத்திசூடி

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபொற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

-1913

1.2. New Athichoody

As the All-White One in mystic silence
Crescent-crowned and wearing Atthi,
As the dark-hued one supine on the ocean of milk,
As the one that inspired Prophet Mohammed
And as the Father in Heaven of Jesus Christ,
The Supreme Ens that is one and the same
Though felt in symbols, yet unrealized,
In many forms and ways the religious seek.
Its nature is intelligence of effulgence.
They are rid of misery that know its state;
Its Grace we have for life everlasting.

-S.A.Sankaranarayanan

2. இந்திய நாடு

2.3. பாரத நாடு

ராகம் - இந்துஸ்தானி
தாளம் - தோடி

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

ஞானத்தி லேபர மோனத்திலே - உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

தீரத்தி லேபடை வீரத்திலே - நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

நன்மையி லேஉடல் வன்மையிலே - செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடும் மாதர்தம் கற்பின்
புகழினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே - புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

2. India

2.3. Our Country Bharat

Great indeed is our land of Bharat
Among the nations of this earth;

In wisdom and in supernal silence,
In honour, in deeds of beneficence,
In musical poesy nectarine,
Great is our Bharat, the nation divine. Great indeed...

In valour in war front, in tested courage,
In milk of human kindness and patronage,
In gift of scriptures that sense the essence,
In shines in unrivalled glory immense. Great indeed...

In utter goodness and strength of physique,
In wealth, multitudinous and unique,
In the chaste glory of golden damsels
And in courage, this land for every excels. Great indeed...

In production, spirit of enterprise,
In manual glory and vision wise,
In the sea of armies able-bodied,
Unsurpassed is this great country indeed. Great indeed...

வண்மையி லேஉளத் திண்மையிலே - மனத்
தண்மையி லேமதி நுண்மையிலே
உண்மையி லேதவ றாத புலவர்
உணர்வினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

யாகத்தி லேதவ வேகத்திலே - தனி
யோகத்தி லேபல போகத்திலே
ஆகத்தி லேதெய்வ பக்திகொண் டார்தம்
அருளினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

ஆற்றினி லேசுனை யூற்றினிலே - தென்றல்
காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபயன் ஈந்திடுங் காலி
இனத்தினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே - கனி
ஈட்டத்தி லேபயிர் ஊட்டத்திலே
தேட்டத்தி லேஅடங் காத நதியின்
சிறப்பினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

-1922

In munificence, in stoutness of heart,
In loving mind and brain - subtle and smart,
In poets wedded to ever - during truth,
Beyond compare is this country in south. Great indeed...

In tapas and ritual sacrifice,
In yoga great and joys of paradise,
In abounding grace of true devotees,
Without a peer this divine country is. Great indeed...

In river and spa and southerly wind
In mountainous range, elsewhere rare to find,
In bulls that draw the ever-fruitful plough,
Is this great Bharat endowed with endow. Great indeed...

In garden and grove with stately trees dense,
In abundant fruitage and crops immense,
In limitless wealth immeasurable,
Mother Bharat is incomparable. Great indeed..

-T.N.Ramachandran

2.4. பாரத மாதா

தான தனந்தன தான தனந்தன
தானனத் தானா னே.

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்? - எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில். 1

இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடைய வில்? - எங்கள்
மந்திரத் தெய்வதம் பாத ராணி
வயிரவி தன்னுடை வில். 2

‘ஒன்று பரம்பொருள் நாம்அதன் மக்கள்
உலகின்பக் கேணி’ என்றே - மிக
நன்று பல்வேதம் வரைந்தகை பாரத
நாயகி த?ன்திருக் கை. 3

சித்த மயமிவ்வுலகம் உறுதிநம்
சித்தத்தில் ஓங்கிவிட் டால் - துன்பம்
அத்தனை யும்வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல். 4

சகுந்தலை பெற்றதோர் பிள்ளைசிங் கத்தினைத்
தட்டி விளை யாடி - நன்று
உகந்ததோர் பிள்ளைமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை. 5

காண்டிவம் ஏந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோள்எவர் தோள்? - எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரிய தேவியின் தோள். 6

2.4. Bharat Mata

Whose bow was it that was strung in the past
To destroy the Asuras of Lanka?
It was Mother’s Bow, the Queen of Aryas
The fearsome Mother, Bharat Devi. 1

Whose bow was it that was truely bent to split
The body of Indrajit into two?
It was indeed the bow of Bhairavi
The mantric Goddess, great Queen of Bharat. 2

“The Supreme Ens is one only; we are
Its children; life on earth is a delight.”
Thus spoke he whose hand wrote many Vedas.
Whose is it but that of Bharat-Devi’s? 3

“This world is what the mind means it to be;
If this be firmly resolved in the mind
Troubles and sorrows can all be ended.”
Whose words are these but those of the Aryan Queen!4

The Child that Sakuntala gave birth to
Had for his playmate the lion itself;
That happy infant - a thing of lustre-
Was in truth borne by the Queen of Bharat. 5

Whose shoulder was it that bore the Gandiv,
The rocky shoulder that vanquished the world?
It is Hers - the great Goddess of Aryas,
She that bore us, reared us and reigns in grace. 6

சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்த தெவர் கொடைக்கை? - சுவைப்
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை. 7

போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடை வாய்? - பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய். 8

தந்தை இனிதுறத் தான்அர சாட்சியும்
தையலர் தம்முறவும் - இனி
இந்த உலகில் விரும்புகி லேன்என்றது
எம்அனை செய்த உள்ளம். 9

அன்பு சிவம்உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகுமென்றே - இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழியெங்கள் அன்னைமொழி. 10

மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் மதி - தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்லநம் அன்னை மதி. 11

தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர் கவிதை? - அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி அருட் கவிதை. 12

-1922

Whose magnificient hand were they that gave
A way ear-pendants at his hour of death?
They are those of the Empress of Bharat
Praised by poets in melliferous words. 7

Whose tongue was it that in the battle -field
Spoke the Gita of true Supernal wisdom?
It is Bharat-Devi's flower -soft tongue
Surcharged with power to quell enmity. 8

"For my father's delight I do forsake
Sceptre and crown, and damsels' company;
Never will I covet these, in this world."
Who could fashion such a soul save Mother? 9

"God is Love; all the worries of the World
Will be destroyed by Love." Thus in the past
The Buddha spake and ruled the world.
These words are indeed the Mother's own words. 10

His city was on fire; but Janaka
Was calmly poring over the Vedas,
He but emulated the Mother's way
The strong-willed and ever-victorious. 11

Whose is the Muse that could in verse compose
The most divine drama - sakuntala?
It is the gracious Muse of Bharat-Devi
Which could sense the essence of Creation. 12

-T.N.Ramachandran

2.5. எங்கள் தாய்

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்! 1

யாரும் வகுத்தற்கு அரிய பிராயத்தள்
ஆயினுமே எங்கள் தாய் - இந்தப்
பாருள் எந்நாளும் ஓர் கன்னிகை என்னப்
பயின்றிடுவாள் எங்கள் தாய். 2

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் - இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள். 3

நாவினில் வேதமுடையாள் கையில்
நலந்திகழ் வாளுடையாள் - தனை
மேவினர்க்கு இன்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடையாள். 4

அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய் - தனைச்
செறுவது நாடி வருபவரைத் துகள்
செய்து கிடத்துவள் தாய். 5

பூமியினும் பொறை மிக்குடையாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய் - எனில்
தோமிழைப்பார் முன் நின்றிடும் கார் கொடும்
துர்க்கை அனையவள் தாய். 6

2.5. Our Mother

When was our Mother born-
Who can hazard a guess?
Not even the learned that discern
What happened in the days of yore. 1

Though our Mother's age
No one can compute,
Alone on earth does she shine
For ever in virgin bloom. 2

Three hundred million Her faces
But all, all of them Throb with one vibrant life.
Eighteen are the languages That she speaks;
But animating them all is only on thought 3

Vedas are the speech
Of this sword-wielding Lady;
Merciful to her votaries,
She extirpates evil men, 4

Six hundred million Her hands are;
All of them perform only righteous deeds.
If vile wretches there are that seek to subdue her,
She routs them all and reduces them to pulp. 5

More patient than Earth
Is our Holy Mother;
But before wicked men
She is Durga, the destroyer. 6

கற்றை சடைமதி வைத்த துறவியைக்
கைதொழுவாள் எங்கள் தாய் - கையில்
ஒற்றைத் திகிரி கொண்டு ஏழுலகாளும்
ஒருவனையும் தொழுவாள். 7

யோகத்திலே நிகரற்றவள் உண்மையும்
ஒன்றென நன்றறிவாள் - உயர்
போகத்திலேயும் நிறைந்தவள் எண்ணரும்
பொற்குவை தானுடையாள். 8

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய் - அவர்
அல்லவர் ஆயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள். 9

வெண்மை வளர் இமயாசலன் தந்த
விறன்மகளாம் எங்கள் தாய் - அவன்
திண்மை மறையினும் தான் மறையாள் நித்தம்
சீருறுவாள் எங்கள் தாய். 10

She adores the ascetic God
That wears the horned moon on the matted locks.
She worships as well the discus - bearer
That protects the seven Worlds. 7

Peerless in mystic meditation,
She perceives that Truth is one;
She also revels in worldly joys-
This lady of immense riches. 8

Rulers reputed for
Justice seasoned with mercy
She blesses with boons in plenty
Others she devours and dances in delight. 9

Heroic daughter she is
Of the snow-clad Himavant;
Even if his might should melt away
She will grow from strength to strength. 10

-S.Ramakrishnan

2.6. பாரத சமுதாயம்

ராகம் - பியாக்
தாளம் - திஸ்ர ஏகதாளம்

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே! ஓ வாழ்க! வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! -- ஜய ஜய ஜய! (பாரத)

அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை - வாழ்க! (பாரத)

சரணங்கள்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்க இனியுண்டோ? -- புலனில்
வாழ்க்கை இனியுண்டோ? -- நம்மி லந்த
வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு -- இது
கணக்கின்றித் தரு நாடு -- நித்தநித்தம்
கணக்கின்றித் தரு நாடு -- வாழ்க (பாரத) 1

2.6. The Commonwealth of India

The Commonwealth of India, hail! for ever hail!
The Commonwealth of India, may she never fail!

For thirty crores of people
A commonwealth
A state beyond compare
A novelty most rare
Here's to her health!

Shall man deprive another man
Of his food?
Shall he look on as means he has none
Of livelihood?
Shall such things be again?
Even in thought be again?
Amongst us be again?
Of large fields and timely rains
No dearth in our land;
Fruits and roots and grains
Unnumbered she can give,
Yes, unnumbered she can give,
Daily unnumbered she can give! 1

இனியொரு விதிசெய் வோம் -- அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் - வாழ்க (பாரத) 2

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத்தான் கண்ண பெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும் -- ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் -- ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் -- வாழ்க (பாரத) 3

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் -- நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் -- ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-வாழ்க (பாரத) 4

-1920

A new law will we make
And ever keep;
If a single man goes without food
All earth this outrage shall make good
Or fall in one fell sweep! 2

"In every life do I exist;"
'T was Kannan our Lord said so.
The way all men may turn divine
India to the world will show,
Yes, India to the world will show,
Indeed India to the world will show. 3

All are of one caste, all are of one kind
All are India's children.
All have the same pull, all have the same place,
All are this country's kings,
Yes, all are this country's kings,
Indeed, all are this country's kings! 4

-P.S.Sundaram

2.7. எங்கள் நாடு

ராகம்-பூபாளம்

பல்லவி

மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இதுபோலே!
பொன்னொளிர் பாரதநா டெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே. 1

மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு.
பூரண ஞானம் பொலிந்தநன் ?னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே. 2

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திருநாடெனில் இனிக்கையை விரியோம்.
கன்னலும் தேனும் கனியும் இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே. 3

-1907

2.7. Enkal Nadu

Himachal is our mountain
The world hath not its fellow;
Ganga is our fountain
Pellucid, sweet and mellow.
Our Upanishads are twelve-
Unknown to any other clime-;
Deep into our minds they delve,
And soar aloft sublime,
Praise we Bharat, golden fair,
Our own dear land beyond compare;

Land of the heroic free
Where sages have lived at peace,
Soothed by the poesy
Of Narad's melodies;
Where Buddha came to birth,
The embodiment of grace-
And showed to men on earth
Divine Compassion's face;
Sing we Bharat ancient, fair
Our own dear land, Beyond compare!

Evil shall not daunt us
Though poor, we will be proud;
The world shall no more taunt us
With being a self-seeking crowd;
Here Nature's bright and sunny
And yields us every good,
Including milk and honey,
As our unfailing food.
Land of noble Aryans fair
Repeat we: 'Bharat is beyond Compare!'

-T.N.Ramachandran

2.8. நாட்டு வணக்கம்

ராகம்-காம்போதி தாளம்-ஆதி

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே-அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே-இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ-இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? 1

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து, அருள்
ஈந்ததும் இந்நாடே- எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே- அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே-தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே-இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? 2

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே-அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே-மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே-பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே-இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? 3

-1907

2.8. Adoration of the Country

This is our motherland, Bharat;
It's here our parents dear loved and lived
In joyous wedlock pure.
Our forebears too in ages past
Had lived for centuries, ere they died.
A myriad noble thoughts they had
To enrich the land and make it great
Shan't I enthrone you in my heart,
While my grateful tongue doth sing thy praise;
'Salutations to thee! Mother! Salutations!' 1

This our land gave us life
And sustenance, and blessed us too;
This is the land of our mothers dear;
It fostered them in their infancy
When as babes they lisped their words;
It saw them grow into tender maids
And sport and dance in the moonlit night;
Their golden limbs gladdened the waters
As they swam and bathed in pure delight,
Ere they returned to the quiet of their homes.
I shall sing thy praise in grateful tunes,
'Salutations to thee! Mother! Salutations!' 2

In time they loved and wives became
And learnt to manage households great;
They fondled and fed their golden babes
And raised and fostered righteous homes;
Here all around were temples tall
That soared aloft to bless the lands;
When our forefathers died, their flow'ry dust
Became part of the country's rich humus;
Shan't I sing thy praise in grateful tunes,
'Salutations to thee! Mother! Salutations!' 3

-K.G.Seshadri

2.9. மாதாவின் துவஜம்

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்! - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

சரணங்கள்

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

பட்டுத் துகிலென லாமோ? - அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும் - அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணங்க்கப் படலம் (தாயின்)

இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற்க் குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார். (தாயின்)

அணியணி யாயவர் நிற்கும் - இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும் - விறல்
பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர்! (தாயின்)

2.9. The Beauteous Flag of the Mother

Behold the gem, the banner of mother!
Come and humbly adore it and extol.

Tall stands the mast, and from its crest
The flag of red silken luster wafts
With the well-printed dazzling words
Proclaiming 'Vande Matharam.' Behold the gem...

Is it a piece of mere silk? Into it
Blows and twirls a mighty cyclone;
Even when it rages excessively
It wafts serene a ruby-drift. Behold the gem...

Indra's thunder-bolt and young crescent
Of our Muslims bedeck the flag;
At its midst is Mother's mantra;
Its majesty is ineffable. Behold the gem...

Behold them beneath the mast
An immense throng of peerless heroes;
Tried and trusted and brave are these;
They may yield their life, but not the flag. Behold the gem...

Behold the phalanxes! Is not
This noble sight a joy forever?
Behold their bedecked chests and forms -
The abode of divine valour. Behold the gem...

செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
    தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
    சேவடிக் கேபணி செய்திடு துளுவர். (தாயின்)

கன்னடர் ஒட்டிய ரோடு - போரில்
    காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்,
பொனகர்த் தேவர்க ளொப்ப - நிற்கும்
    பொற்புடையார் இந்துஸ் தானத்து மல்லர் (தாயின்)

பூதலம் முற்றிடும் வரையும் - அறப்
    போர்விறல் யாவும் மறுப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும் - பாரில்
    மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர் (தாயின்)

பஞ்ச நதத்துப் பிறந்தோர் - முன்னைப்
    பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்,
துஞ்சும் பொழுதினும் தாயின் - பதத்
    தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும் (தாயின்)

சேர்ந்ததைக் காப்பது காணீர்! அவர்
    சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத - நிலத்
    தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

-1909

Soldiers of Tamil-land, Maravas
Whose eyes blaze with raging fire,
Cera Warriors, stout-hearted Andras
And Tuluvas devoted to Mother's feet   Behold the gem...

Kannadas, Odyas and Maratas
Whose might will put to fright even Death
And Righteous wrestlers of India
In form very like the supernal lords.   Behold the gem...

Rajput heroes whose fame will not fade
Till the end of the entire world
Or as long as martial prowess lasts
Or as long as chaste women breathe.   Behold the gem...

The natives of Punjab and those of great realms
Whence heroes from Arjun onward took birth,
They of Bengal who even when they slumber
Forget not their devotion to the feet of Mothers
Behold the gem...

These have gathered here to guard it; behold this!
May their strong-willed bravery thrive forever!
May the banner of Mother - Bharat
By these adored, flourish in fame forever!   Behold the gem...

-T.N.Ramachandran

3. தமிழ்நாடு
3.10. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே (செந்தமிழ்)

வேதம் நிறைந்த தமிழ்நாடு - உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு - நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல் - இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (செந்தமிழ்)

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு (செந்தமிழ்)

3. Tamil Land
3.10. Good Old Tamil-Land

When the words resound,
'Good old Tamil-Land!'
Dulcet streams of honey
Flow into our ear;
When the words resound,
'Land of all our sires!'
A potent power indeed
Is born in our breath. When the words...

Filled with Vedic lore,
Is our Tamil-Land;
Packed with Chivalry
Is our Tamil-Land;
Maidens making love
Like celestial nymphs
Team on every side
In our Tamil-Land. When the words...

The Kavery, the South Pennar,
And the Palar river,
And the Vaikai, witness of gloried Tamil
And the Porunai river,
All these famous streams
Flow through and nourish
The rich and fair terrain
Of our Tamil-Land. When the words...

முத்தமிழ் மாமுனி நீள்வரையே - நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு - செல்வம்
எத்தனையுண்டு புவிமீதே - அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை -வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு (செந்தமிழ்)

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு (செந்தமிழ்)

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

The lofty mountain range
Of Triple-Tamil's sage
Stands as a mighty guard
Of our Tamil-Land,
The various riches which abound
Upon this spacious earth
Are all found together
In our Tamil-Land. When the words...

One border is the edge
Of the blue ocean's wave,
Where the virgin Goddess stands
Ever in penance rare;
At the north is Vishnu's Hill;
Between these borders two
Compact of boundless fame
Is our Tamil-Land. When the words...

It gave Valluvar the Great
For all the world to have;
And the fame rose sky high
Of our Tamil-Land.
It made a necklace of gems,
Named 'The Lay of the Anklet'
Which grips enraptured hearts

சிங்களம் புட்பகம் சாவக - மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி - அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் - நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு (செந்தமிழ்)

விண்ணை யிடிக்கும் தலையிமயம் - எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் - சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் - தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு (செந்தமிழ்)

சீன மிசிரம் யவனரகம் - இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் - மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு (செந்தமிழ்)

-1919

In our Tamil-Land. When the words...

Of those that went to Ceylon,
And to Pushpaka, and Java,
And many other islands too,
And settled as dwellers there
Planting their countries' flags
Blazoned with the Tiger, and the Fish,
And made them stand supreme,
This is the Mother land. When the words...

They are the men of might
Who dared to dash against
The hills of the Himalayan range
whose heads knock at heaven;
They once waged a fierce war
Shattering kalinka's might,
They the stable Tamil Kings
Of our Tamil-Land. When the words...

The fame spread far and wide
Among the Chinese, and the Egyptians,
And in the Greek and Arab homelands,
And in other lands as well,
Of their Arts, and Mystic Wisdom,
And techniques of War and Trade,
For these were nurtured well indeed
In our Tamil-Land. When the words...

-P.N.Appuswami

4.தமிழ் மொழி

4.11. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை,
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும். 3

4.Tamil Language

4.11. Tamil

Of all the tongues that I have sampled,
For sweetness Tamil’s unexampled;
But now become illiterate mutes
Our lives are worse than those of brutes;
Grown recreant to our ancient trust
Our treasures in a heap have gone to rust.
Tamil’s mellifluous sounds
Must reach the world’s utmost bounds,
If we are to lift our heads again,
Instead of wasting our time in vain. 1

Of all the bards that I’ve explored
None in the world are richer-ored
Than Kamban, Valluvar, Ilankovan,-
Immortal trinity - our own
This is the truth unvarnished, plain, -
Free from all vainglorious strain.
Deaf, dumb and blind wretches we live,-
We can’t our greatness e’er revive
So long as our native virile speech
Is not allowed much wider reach. 2

To enrigh, refine and modernise
Our tongue, new writers must arise;
Translations too we must produce
From foreign classics for our use.
What boots it if we idly prate
Of our glorious past in our present state?
The world will recognize our worth
If genious midst us gain takes birth. 3

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார். 4

Unless our hearts by truth are lighted,
Our speech with wings will not be flighted.
Self-purified we then may strive
Our arts and poetry to revive.
Then our renascence in a flood,
Will lead us into a world of good.
The blind long fallen in the ditch
Will be blessed with vision strange and rich,
And rise with the rise of Tamil strains
Chronicling our varied gains,
Like gods assuming human birth
We'd then live glorious on earth. 4

-P.Mahadevan

4.12. தமிழ்மொழி வாழ்த்து (பாடசாலை கீதம்)

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே! 1

வானம் அளந்ததனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே! 2

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே! 3

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே! 4

சூழ்கலி நீங்க தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே! 5

தொல்லை வினை தரு தொல்லையகன்று
சுடர்க தாய் நாடே! 6

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே! 7

வானம் அளந்ததனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே! 8

4.12. Floursih for Ever

Flourish for ever! May Tamil flourish!
Aye, flourish for ever! 1

What the heavens have measured, Tamil hath;
Thrive Tamil bounteous! 2

May its fame and fragrance waft through world
Bounded by seven seas! 3

Our Tamil language, our Tamil language!
May it ever flourish! 4

May Kali perish, may Tamil flourish,
May earth in splendour shine! 5

Rid of ancient Karma troublesome
May tamil-land, glow bright! 6

May Tamil flourish, may Tamil flourish,
May Tamil ever flourish! 7

May Tamil own celestial knowledge,
Grow and prosper for ever! 8

-T.N.Ramachandran

5. சுதந்திர வேட்கை

5.13. சுதந்திரப் பெருமை

(தில்லை வெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ? என்னும் வர்ணமெட்டு)

வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? - என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவா ரோ? (வீர)

புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல் - அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பா ரோ? (வீர)

பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல் - மானம்
துறந்தரம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பா ரோ? (வீர)

மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் - அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர)

விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கை கட்டிப் பிழைப்பாரோ? (வீர)

5. Freedom Fervour

5.13. Liberty

Those that set their brave hearts on liberty,
Will they take aught else thereafter?
Thirsting for the nectar of gods,
Would they think of today? 1

Dharma alone lives; All else is transient;
Those that have seen this truth,
Would they seek to live thereafter
In servitude dishonourable? 2

Every one that is born must surely die;
Those that have realised this law,
Would they deem to pleasure to live,
Disregarding honour and duty? 3

To be born as man is rarest privilege;
Those that realise this truth;
Would they agree to enslave their souls,
Even if their bodies be thrown in the fire? 4

Would you barter the sun that shines in the sky
For a glow-worm to play with?
Losing freedom dearer than eyesight

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
    மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரெண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
    கைகொட்டிச் சிரியா ரோ? (வீர)

வந்தே மாதரம் என்று வணங்கியபின்
    மாயத்தை வணங்கு வாரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
    என்பதை மறப்பாரோ? (வீர)

-1908

Can you live in servitude bowing? 5

Thinking to enjoy comforts
Would you give up freedom?
Is it not foolish to buy a picture,
Selling both your eyes for the price? 6

Having said Vande Mataram and bowed to the mother,
Can you offer worship to Maya?
How can you ever forget that Vande Mataram
Is the true song of solvation? 7

-C.Rajagopalachariar

5.14. சுதந்திர தாகம்

ராகம் கமாஸ் ஆதி தாளம்

என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே
வென்றி தருந்துணை நின்னருள் அன்றோ
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ? 1

பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்சம டைந்தபின் கைவிட லாமோ?
தாயும்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சல் என்றருள்செயும் கடமையில் லாயோ?
ஆரிய நீயும்நின் அறமறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே
வீர சிகாமணி, ஆரியர் கோனே. 2

-1909

5.14. Thirst for Freedom

When will this thirst for freedom slake?
When will our love of slavery die?
When will our Mother's fetters break?
When will our tribulations cease?
Lord! Architect of the Bharat War,
And sustainer of Aryan life!
Lead, lead us, to victory!
Is it right we remain slaves? 1

Are famine and disease alone our share?
For whom, then, are the laurels and fruits?
Would you abandon us, your suppliants?
Could the mother cast her child aside?
Brave Warrior! Aryan Lord!
Destroyer of the demon-race,
Where's your dharma? Is not your duty
To revive us, and chase Fear away? 2

-Dr.Prema Nandakumar

5.15. சுதந்திரப் பள்ளு

ராகம் - வராளி
தாளம் - ஆதி

பல்லவி

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று (ஆடு)

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே - பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும் காலமும் போச்சே (ஆடு)

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்
தரணிக்கெல் லாமெடுத்து ஓதுவோமே. (ஆடு)

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே - இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே - கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே. (ஆடு)

5.15. Pallar Dance

Chorus
Come, that we may sing,
For Freedom's bliss is ours;
Come, that we may dance,
For Liberty is ours!

A Brahmin no more will be hailed
As "Lord, Lord," again;
No more a white man in our land
As "Master" shall remain;
No more to those who would receive
Of such their alms, we bow,
Or bend to those who us deceive;
Never from now!

Hail Freedom! Freedom! everywhere
The word is trumpeted!
That we are brethren, equals born,
For certainty is said,
Come, take the gleaming ivory shells
And breathe, "The strife is done!"
That earth may listen, and earth may know
That we have won!

O joy! the time is come when one
Is only as his neighbour;
The cheats of pomp and foppery
who are the great? only the good;
And these shall great remain;
The evil men in fall have shown
Their strength is vain;

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோ ம் - வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம். (ஆடு)

நாமிருக்கும் நாடு நமதுஎன்ப தறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம் - இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம். (ஆடு)

-1909

The sweated labour and the plough
Of us shall honoured be;
Vain revelers a target stand
Unto our mockery;
Shall we the fat unwholesome weed
Labour to water and save?
Or waste, in serving greedy drones,
Our life-blood brave?

This land beneath our feet, we know,
Sure, is our very own;
Its proud possession could belong
To us and us alone;
Nor would we slave to any soul.
Come from the whole wide earth and hoar;
The Perfect only, we would serve
Fore evermore.

-Hephzibah Jesudasan

5.16. விடுதலை

ராகம் - பிலகரிவிடுதலை

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவருக்கும்
மறவ ருக்கும் விடுதலை!
திறமை கொண்டதீமை யற்ற
தொழில் புரந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

ஏழை யென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் கர்ச
மானமாக வாழ்வமே! (விடுதலை)

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

5.16. Deliverance

Deliverance! deliverance! Deliverance!

To the Pariahs, the Tiyas, the Pulayas
Deliverance!
To the Paravas, the Kuravas, the Maravas
Deliverance!
Come one, Come all
Let us all become learned and wise
Let us do useful and skilful work.
Deliverance! Deliverance! Deliverance! 1

No more penury! No more slavery!
None is low-born in India.
Learning and wealth, each and all shall attain.
Soul shall flow to soul in joy;
We'll live together as equals,
As persons of the same status,
Deliverance! Deliverance! Deliverance! 2

We will burn the folly
that despises womenfolk.
No more subservience or slavery
In any walk of life.
Men and Women shall equal be
In this land of ours.
Deliverance! Deliverance! Deliverance! 3

-S.Ramakrishnan

5.17. சுதந்திர தேவியின் துதி

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி,
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்,
அன்னவர் வாழ்க்கை பாழாம்,
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நிந்தன்
பாலனம் படைத்தி லாதார்?

5.17. Hymn to the Goddess of Liberty

Bereft of the comforts of home
Were I to be gaoled in woe,
Altered, both in estate and wealth
Shame-rife, to fall in disgrace low;
Or a million misfortunes varied
Transpiring were to rout me,
Goddess Liberty! even then,
I will not forget to worship thee.

Those unblessed of thy divine grace
Be they rich beyond all compare
Be they exalted, versed in lores
Taught and heard, numerous and rare
Besides in innumerable
Virtues others let them excel.
Of what use the life such as theirs?
A deed carcass adorned in jewel.

Goddess! the land shorn of thy light
Do we call that a nation? Say,
Will there be life? Have they knowledge
And uprightness? And wealth, have they?
Are there epics? Have they the arts
Scientific, the Vedas? Nay.
To forgo the ministrations
Of thy grace, sinners, aren't they?

ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்,
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்
இழிவுறு வாழ்க்கை தேரார்,
கனவிலும் இன்பங் காணார்,
அழிவுறு பெருமை நல்கும்
அன்னை! நின் அருள் பெறாதார்.

They will die of incurable sickness
Willness to ken a zest for life;
Insulted even by the brutes
Infamous, they'll stand last in strife;
They know not the life free from blame
Eyeless to joys even in dream;
They, who, devoid of thy grace,
Mother! who gifts immortal fame.

-S.Raman

5.18. சுதந்திரப் பயிர்

தண்ணீர்விட் டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ?

எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ?

ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?

தர்மமே வெல்லுமேனும் சான்றோர்சொல் பொய்யாமோ?
கர்ம விளைவுகள் யாம் கண்டதெலாம் போதாதோ?

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?

எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?

மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர் கருத்தழிதல் காணாயோ?

நீயும் அறமும் நிலத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுனர் எங்களுக்கிவ் ஓர்வரம் நீ நல்குதியே.

-19-12-1908

5.18. Freedom Plant

With tears, not water, this plant we reared;
Is it your pleasure, Lord, it should be seared? 1

A lustrous lamp with our life's ghee fed:
Is it your pleasure it should be dead? 2

After years a thousand there came on a day
A diamond most dazzling; shall we throw it away? 3

Virtue will win - is it a lie of the sages?
Our suffering not enough through all these ages? 4

Can't you see heroes and men of letters
Slaving at mills, rotting in fetters? 5

Countless good ones, their hearts stifled,
Blinded, bewildered, of all things rifled? 6

By baleful tyranny kept separated
Fathers from families, lovers ill-fated? 7

If virtue and you abide as they say
Grant us this one gift in our day! 8

-T.N.Ramachandran

6.வீர உணர்ச்சி

6.19. அச்சமில்லை

உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்டே பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே 1

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே. 2

-1914

6. Patriotic Spirit
6.19. Fear We Not

Fear we not, fear we not, fear we not at all!
Though all the world be ranged against us,
Fear we not, fear we not, fear we not at all!
Though we are slighted and scorned by others,
Fear we not, fear we not, fear we not at all!
Though fated to a life of beggary and want,
Fear we not, fear we not, fear we not at all!
Though all we owned and held as dear be lost,
Fear we not, fear we not, fear we not at all! 1

Though the corset - breasted cast their glances,
Fear we not, fear we not, fear we not at all!
Though friends should feed us poison brew,
Fear we not, fear we not, fear we not at all!
Though spears reeking flesh come and assail us,
Fear we not, fear we not, fear we not at all!
Though the skies break and fall on the head,
Fear we not, fear we not, fear we not at all! 2

-K.G.Seshadri

6.20. சத்ரபதி சிவாஜி
(தன் சைனியத்திற்குக் கூறியது)

ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!
ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

மாற்றலர் தம்புலை நாற்றமே யறியா
ஆற்றல்கொண் டிருந்ததில் வரும்புகழ் நாடு!

வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?
வீரரும் அவரிசை விரித்திடு புலவரும்
பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு!
தர்மமே உருவமாத் தழைத்த பே ரரசரும்

நிர்மல முனிவரும் நிறந்த நன் னாடு!
வீரரைப் பெறாத மேன்மைநீர் மங்கையை
ஊரவர் மலடியென் றுரைத்திடு நாடு!
பாரதப் பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர், இந் நினைவகற் றாதீர்!

பாரத நாடு பார்க்கெலாம் திலகம்;
நீரதன் புதல்வர், இந் நினைவகற் றாதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடு நாடு! கங்கையும் சிந்துவும்

தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
பைந்நிறப் பழனம் பசியிலா தளிக்க
மைந்நிற முகில்கள் வழங்கும் பொன்னாடு!

6.20. Chatrapati Shivaji's (Address to His Warriors)

Hail, hail Bhavani! Hail, all hail Bharat
Hail, all hail Mother! Hail, all hail Durga!
Vande Mataram! Praise be to Mother!

This is the famous nation that suffered not
The stinking odour of enemies base!

Will Bharat-Devi brook of unblest feet
Of Barbarians - revilers of Veda?
This is the nation whence wafted to the world
The fame of heroes through minstrels matchless!
This is the nation where flourished mighty kings

And saints blemishless, dharma incarnate!
This nation dubbed the ignoble woman
Who bore not heroes, as nullipara!
'Ancient is Bharat and you her children'!
Forget not; 'Bharat is the tilak of earth;
You her children'; forsake not this thought.

Bharat is the deity of the whole world;
You are her children; forsake not this thought.
On the north, sky-piercing Himachal
And on other sides the great seas, protect her,
Ganga, Sindhu, Jamna of pure billows,
Spas, Waters, rare gardens sweet, fertile fields
Peerless, and lofty mountains here abound!
That ever-green fields may stave off hunder
The pitch dark rainclouds for ever pour here!

தேவர்கள் வாழ்விடம், திறலுயர் முனிவர்
ஆவலோ டடையும் அரும்புகழ் நாடு!
ஊனமொன்றறியா ஞானமெய் பூமி,
வானவர் விழையும் மாட்சியார் தேயம்!
பாரத நாட்டிசை பகரயான் வல்லனோ?

நீரதன் புதல்வர் நினைவகற் றாதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்
பேய்த்தகை கொண்டோர் பெருமையும் வன்மையும்
ஞானமும் அறியா நவைபுரி பகைவர்
வானகம் அடக்க வந்திடும் அரக்கர் போல்

இந்நாள் படை கொணர்ந்து இன்னல்செய் கின்றார்!
ஆலயம் அழித்தலும் அருமறை பழித்தலும்
பாலரை விருத்தரைப் பசுக்களை ஒழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறைவர் வேள்விக்கு
ஏதமே சூழ்வதும் இயற்றிநிற் கின்றார்!

மொக்குகள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்.

தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமென் றிலாது மாற்றலர் தொழும்பாய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவ னாகி
நாயென வாழ்வோன் நமரில்இங் குளனோ?

Divine home of angels! Glorious land
Eagerly sought by the holy Munis!
No imperfection mars this Land of Wisdom!
Majestic land by celestials sought!
Is Bharat's glory by me effable?

You are her children, never forget this.
Ruthless barbarians, men demon-like.
Enemies dead to glory, hardihood
And knowledge, doers of evil, the Turks,
Like Asuras that came to war against

The realms of heaven, have come with armies
And cause endless woes to our Motherland.
Temples and scriptures sacred, they defame;
Infants, people old and kine they destroy;
Women they rape and do acts that undo
The performance of holy sacrifices.

Like a bubble now born and burst anon
Men that are born on earth, are bound to die,

Call you theirs a life, who seek not to quell
The vile aliens that blast our Motherland?
Will ever men shed their honour and consent
To live base, as slaves of barbarians?
Is there amidst us any, living dog-like
When his dear mother is by aliens held?

பிச்சைவாழ் வுகந்து பிறருடை யாட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்,
புன்புலால் யாக்கையைப் போற்றியே தாய்நாட்டு
அன்பிலா திருப்போன் ஆரிய னல்லன்.

ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவர் சிலரே
நெஞ்சகக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம்யாம்
வேள்வியில்இதுபோல் வேள்வியொன் றில்லை!
தவத்தினில் இதுபோல் தவம்பிறி தில்லை!

-17-1-1906, 25-11-1906, 1-12-1906, 8-12-1906

Under alien rule, a willing beggar
He lives fear-ridden; he is not an Arya!
He that fosters his body vile with nought
Of love for Motherland, is not an Arya!

A few desire the Heaven to attain
By sacrificing goats in the yaga.
Well, let us perform the great sacrifice
By shedding blood and killing deception.
There is no sacrifice to match this one;
There is no tapas to equal this one.

-T.N.Ramachandran

6.21. துடிக்கின்ற நெஞ்சம்

நெஞ்சு பொறுக்கு திலையே! - இந்த
    நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
    அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த
    மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுது முகட்டில் என்பார் - மிகத்
    துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)

மந்திர வாதி என்பார் - சொன்ன
    மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்,
யந்திர சூனி யங்கள் - இன்னும்
    எத்தனை ஆயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே - ஜனம்
    தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம
அந்த அரசியலை - இவர்
    அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார். (நெஞ்சு)

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்
    சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்,
துப்பாக்கி கொண்டு ஒருவன் - வெகு
    தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிவார்,
அப்பால் எவனோ செல்வான் - அவன்
    ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்,
எப்போதும் கைகட்டுவார் - இவர்
    யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப்பார். (நெஞ்சு)

6.21. The Present Condition of the Indians

It is beyond heart's endurance
    When thought hovers on these debased,
They fear, they dread and they perish;
    This world for them is full of fear.
"Vile demons haunt this tree - nay, haunt
    That tank - nay, nay, are deep asleep
On the hill - top." Thus they assert
    And grieve much, thinking fear-breeding thoughts. 1

They will say: "Lo, the necromancer!"
    This said, gripped by fear they will quake.
Mumbo-jumbo! Thaumaturgy!
    How many are the troubles of these!
Kings after all govern their subjects
    With taxes collected from people;
But to these, the very government
    Is dreadful as a fearful ghoul. 2

The sight of soldiers puts fear in them;
    Village menials affright them;
When at great distance they see one
    With a gun, they will hide in the house.
Someone goes somewhere; eyeing his dress
    These stand up and shake in fear.
Before all men, with folded hands,
    They ever behave like cringing cats. 3

நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்? - ஒரு
கோடிஎன் றால் அது பெரிதா மோ?
ஐந்துதலைப் பாம்பென் பான் - அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லி விட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

நெஞ்சு பொறுக்கு திலையே - இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே,
கஞ்சி குடிப்பதற் கிலார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின் றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே. (நெஞ்சு)

எண்ணிலா நோயுடையார் - இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல் - பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்,
நண்ணிய பெருங்கலைகள் - பத்து
நாலாயிரங் கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே - இவர்
பொறியற்ற விலங்குகள்போல வாழ்வார். (நெஞ்சு)

-13-3-1909

It is beyond heart's endurance
When thought hovers on these debased.
Are their factions but a very few?
Shall we say: 'Ten million!' Nay, more,
The father says: "A five-headed snake!"
Should his son call it "six-headed"
They are at once sundered, alas!
For years they will remain as foes. 4

It is beyond heart's endurance
Yet my thought is untinged by hate,
They do not even have conjee to drink;
They know not the reason therefor.
They wallow in famine and daily
Tremble and suffer in distress
And perish in misery; there is
No way to ward off their sorrows. 5

Their maladies are legion;
They have no strength to stand or walk;
Like eyeless babes led by others
These too fare forth and get ensnared.
In this country that once fostered
Billions and billions of great arts,
In this very country holy
These vegetate like senseless brutes. 6

-T.N.Ramachandran

6.22. கிளிக் கண்ணிகள்

நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ!-கிளியே!
வாய்ச் சொல்லில் வீர ரடீ 1

கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டித்திற் கொள்ளா ரடீ!-கிளியே!
நாளில் மறப்பா ரடீ! 2

சொந்த அரசும் புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகுமோ!-கிளியே
அலிகளுக் கின்ப முண்டோ? 3

யந்திர சாலை யென்பர் எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும்-கிளியே!
மாங்கனி வீழ்வதுண் டோ? 4

உப்பென்றும் சீனி என்றும் உள் நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ!-கிளியே!
செய் தறியா ரடீ! 5

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்!-கிளியே
நம்புத லற்றா ரடீ! 6

6.22. **Pseudo-Patriots**

Neither stoutness of heart
Nor nonest skill have they;
Oh parrot, these are cheats
And verbal heroes all. 1

They join the crowd and add
To its noise; nothing great,
Oh parrot, perceive they,
These wilful forgetters. 2

Can the blind hope to have
Autonomy? Comforts?
Greatness? Oh parrot!
Can the sexless dream of joy? 3

“Our textile mills, our own
Garments” they would loud cry.
Oh parrot, did ever
Mantras produce mangoes? 4

“Salt, sugar and sarees
Home - spun”, loud will they vaunt,
Oh parrot, and vanish;
They know not how these are wrought. 5

“Women’s honour, bhakti
To God”; Thus blab their tongues
Oh parrot, they are all
The utterly faithless. 6

தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்!-கிளியே!
அஞ்சிக் கிடந்தா ரடீ! 7

அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறும தியும்
உச்சத்திற் கொண்டா ரடீ!-கிளியே!
ஊமைச் சனங்க ளடீ! 8

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும்-கிளியே!
வாழத் தகுதி யுண்டோ? 9

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்-கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ? 10

-1-6-1907, 15-6-1907

In the Mother's Temple
When others wrought evil
Oh parrot, fear-ridden
They deemed life more precious. 7

Fear and sheer impotence
And petty vassal-mind
Oh parrot, were lofty
To them, the dead and dumb. 8

Do these beasts, oh parrot,
Deserve to live at all
With no passion for truth
Vigour and inner strength? 9

Can one be, oh parrot
Amidst the heinous gang
Who think that life sullied
Is greater than honour? 10

-T.N.Ramachandran

7. சீர்திருத்தப் பாடல்கள்

7.23. முரசு

வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்களன்று கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ணனோடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று கொட்டு முரசே! 1

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக் கெல்லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும். 2

வேத மறிந்தவன் பார்ப்பான், பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்.
நீதி நிலைதவ றாமல் - தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன். 3

பண்டங்கள் விற்பவன் செட்டி - பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை, - தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை. 4

நாலு வகுப்பும்இங் கொன்றே; - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி. 5

ஒற்றைக் குடும்பந் தனிலே - பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே - மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை; 6

7. Songs of New Change

7.23. Tom Tom

Tom-tom the victory
making the welkin ring,
Tom-tom that the Vedas
will thrive for ever
Tom-tom devotion to Mother
who danced with the forehead-eyed God. 1

Let me speak of good to the people,
of the truth I've perceived.
May the First Cause of all good
render aid to me. 2

The Brahmin is he
who knows the Vedas and sciences;
The Naik is he
who chastises the guilt justly. 3

The Vaisya is he
who sells goods and relieves other's hunger.
None are slaves here;
nothing more infamous than idleness. 4

The four varnas are one;
if one of the four isn't there
Work will be wrecked;
society will be doomed. 5

In any family father
exerts and earns wealth;
Doing other jobs, mother
makes the home prosper; 6

ஏவல்கள் செய்பவர் மக்கள்! - இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய் - நல்ல
வீடு நடத்துதல் கண்டோம். 7

சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்.
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார். 8

சாதிக் கொடுமைகள் வேண்டாம்; - அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்; - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 9

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார். 10

கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை யற்றிடுங் காணீர். 11

தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொருளானது தெய்வம். 12

Children run errands.
Aren't they all one family?
They all strive in unison
and ensure a happy home. 7

Wretches there are
who speak of castes high and low,
Adopt discriminatory codes
and kindle constant conflicts. 8

Down with the cruel caste system!
Mankind will prosper in love.
Let's toil in concord;
We'll excell in a thousand trades. 9

God's external providence
endowed women with wisdom;
But some fools on earth
have blighted their perception. 10

Would any put out one of the eyes
and obscure the view?
If women become learned and wise
the world will be rid of ignorance. 11

Fools talk of several gods
and stoke the fires of enmity,
God is one Essential principle;
He permeates one and all. 12

தீயினைக் கும்பிடும் பார்ப்பார், - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்,
கோவிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மதத்தார். 13

யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம். 14

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை, - அவை
பேருக் கொருநிற மாகும். 15

சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி. 16

எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ? 17

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர். 18

Brahmins worship the fire;
Christians adore the Cross;
Turning towards Mecca
Muslims offer their prayers; 13

They all worship one and the same God
Who pervades the whole universe.
God is one, over the wide world.
No need for conflicts on this score. 14

We have in our home
  a pet, a white cat,
She gave birth to kittens,
  each of a different hue. 15

Ash - coloured was on kitty,
Jet - black was another;
A third vivid like a viper;
Milky - white was a fourth. 16

Skin - colours do vary
  but they are of the same stock,
Can you call one colour superior
  and another inferior? 17

Complexions may vary
  but all men are one.
We are all uniformly human
  in our thoughts and deeds. 18

நிகரென்று கொட்டு முரசே! - இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே - பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம். 19

அன்பென்று கொட்டு முரசே! - அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும் - வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால். 20

அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்
அத்தனைப் பேரும் நிகராம்.
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால். 21

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும். 22

ஒன்றென்று கொட்டு முரசே!-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!இந்த
நானில மாந்தருக் கெல்லாம். 23

-1917

Proclaim by tom-tom
that all men are equal,
That all false caste divisions
be demolished. 19

Let the drum beat love! love!
and proclaim its creative power.
If crafty divisions vanish
all ills will end. 20

Let the tom-tom thunder love!
All men are equal.
If we esteem all as equals
Joys will multiply. 21

The hunger of one and all on earth
we must appease;
Train them all in many arts
For the whole world to advance. 22

Let the drum beat “we’re all one”
Let it beat, “thrive in love”
Let it proclaim propitious times
for all mankind. 23

-S.Ramakrishnan

7.24. அறிவே தெய்வம்

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்
டாமெனல் கேளீரோ? 1

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் - எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ? 2

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ? - பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ? 3

வேடம்பல் கோடியொர் உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே - ஆங்கோர்
வேடத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே. 4

நாமம்பல் கோடியொர் உண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே - ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே. 5

7.24. Knowledge Alone is God

Ye, foolish folk, who roam about
In search of myriad of fancied gods,
Have you not heard the myriad scriptures
Declare knowledge alone is God?

Why worship Bull-God, Wood-God, Hunter-God
When you have been told that the Awareness
Which pervades the Universe,
This and this alone is God?

Why stumble and fall into creeds insane?
Why not listen to the Shrutis
That say that Shiva is Pure Awareness?
The Vedas say a million forms
With a million names are manifestations
Of one sole Being. But you mistake
Appearances for Reality.

போந்த நிலைகள் பலவும் பராசக்தி
பூணு நிலையாமே - உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே. 6

கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டும் மறைகளெல்லாம் - நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு
அவங்கள் புரிவீரோ? 7

உள்ள தனைத்திலும் முள்ளொளி யாகி
ஒளிர்ந்திடும் ஆன்மாவே - இங்குக்
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ? 8

மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப் - பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ? 9

ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெலாம் - என்றும்
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே. 10

-1914

All states and moods are states and moods
Of one sole Sakti, Power Supreme.
The highest vedantic state discovered
By the sages is Shanti. Heaven is
But a good life lived here on this earth
Free from all care. Why must you think
Of rice and munch dry husk? The self,
The light that shines within all beings,
Is the Brahman you deem inaccessible.
Why go collecting gods and stories
And spreading false beliefs? One, one
Sole Brahman is the Awareness in you.
The one eternal Brahman, the one
True Being, is the Awareness in you.

-K.Swaminathan

8. குழந்தைகளுக்கு

8.25. பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா!-நீ
ஓய்ந்திருக்க லாகாகது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!-ஒரு
குழந்தையை வையாதே பாப்பா! 1

சின்னஞ் சிறுகுருவி போலே-நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வன்னப் பறவைகளைக் கண்டு-நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா! 2

கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய்-அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா! 3

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!-அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்-அது
மனிதர்க்கு தோழனடி பாப்பா! 4

வண்டி இழுக்கும்நல்ல குதிரை,-நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை,ஆடு,-இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா! 5

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு-என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா! 6

8. Songs for Children

8.25. Child's Song

Run about and play my sweet little chile
And idle not sweet little child;
In game and sport have many mates
And revile not any one child. 1

Sweet and pretty like a love-bird
You wing and soar my little child;
Behold the birds of iris hues
And be happy like them oh child! 2

The bantam struts and pecks and eats,
Join that and play with it oh child!
The crow in a swoop steals its food,
Be kind to it, my little child. 3

The cow, she gives abundant milk,
Know her to be good, my dear child;
The dog it comes wagging its tail,
Know that to be a friend of man. 4

The goodly horse that pulls a cart,
The bull that ploughs the village-fields,
The goat that does depend on us;
Foster all these, my little child. 5

Rise at dawn to learn your lesson,
Then sing such airs that are soothing,
To games devote the whole evening,
Get habituated thus, oh child! 6

பொய்சொல்லக் கூடாது பாப்பா!-என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!-ஒருன
தீங்குவர மாட்டாது பாப்பா! 7

பாதகஞ் செய்பவரைக் கணடால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா! 8

துன்பம் நெருங்கி வந்த போதும்-நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வ முண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா! 9

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா!-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி யழுங்குழந்தை நொண்டி,-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா! 10

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!-நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 11

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்-அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா! 12

Abstain from lies my little child
And also from vile back-biting;
God is our help, my little child,
Never will evil beset us. 7

Fear not at all my little child
When you meet with evil-doers;
Smite them and kick them, oh my child!
And lo, at their face you shall spit. 8

When thronging sorrows assail us
We should droop not, my little child;
God is there full of compassion
To quell all troubles oh my child! 9

Idleness is bad, vey bad;
Mother you should ever obey;
Peevish crying doth lame a child;
Stand firm and fight with all you might. 10

Adore the divine Tamil Nadu
As your own mother, oh my child!
Than nectar itself is more sweet
This land of Aryas, oh my child! 11

Tamil is sweet amongst all tongues,
Adore it and cultivate it;
Hindustan is full of riches;
Hail it as God, my little child. 12

வடக்கில் இமயமலை பாப்பா!-தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய்-இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்ப! 13

வேத முடையதிந்த நாடு,-நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு;
சேதமில் லாத?ிந்து ஸ்தானம்-இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா! 14

சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி உயர்ந்த மதி,கல்வி-அன்பு
நிறை உடையவர்கள் மேலோர். 15

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;-இது
வாழும் முறைமையடி பாப்பா! 16

-மார்ச், 1915

On the north the Himalayas,
On the south abiding Kumari
The cape, on the east and the west
The seas: India's boundaries these! 13

This is the land of the Vedas
Where great and good heroes were born;
Truely flawless is Hindustan;
Adore this as God, my dear child. 14

There's no such thing as caste-glory;
Make not castes great or low, and sin,
Those are the lofty who possess
Justice, clear intellect and love. 15

Foster love for all lives, my child,
Know Truth to be God, my sweet-child,
As adamant, be firm in heart;
Know these to form the way of life. 16

-T.N.Ramachandran

9. பெரியோரைப் போற்றுதல்

9.26. திலகர் முனிவர் கோன்

நாம கட்குப் பெருந்தொண் டியற்றிப்பல்
நாட்டி னோர்தம் கலையிலும் அவ்வவர்
தாம கத்து வியப்பப் பயின்றொரு
சாத்தி ரக்கடலென விளங்குவோன்,
மாம கட்குப் பிறப்பிட மாகமுன்
வாழ்ந்திந் நாளில் வறண்டயர் பாரதப்
பூம கட்கு மனந்துடித் தேயிவள்
புன்மை போக்குவல் என்ற விரதமே.

நெஞ்ச கத்தோர் கணத்திலும் நீங்கிலான்
நீத மேயோர் உருவெனத் தோன்றினோன்,
வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனத்திற் கொதிக்கின்றோன்,
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டிழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோ தும் பெயருடை யாவரின்.

வீர மிக்க மராட்டியர் ஆதரம்
மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆர வைத்த திலகமெனத் திகழ்
ஐயன் நல்லிசைப் பாலகங் காதரன்,
சேர லர்க்கு நினைக்கவுந் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
சீர டிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே.

-1908

9. Adoring the Great
9.26. On Tilak Maharaj

To saraswati he had service great
Rendered and mastered other nations' arts
At which the great masters are struck with awe;
verily he is the sea of sastras.
Our Bharat, once Saraswati's birth-place
Is this day a barren desert become;
Heart-sore at Her plight, he has bound himself
To a vow, to chase the meanness away.

In the heart of Bharat ever shrined is he
Who of justness is an embodiment;
An eternal foe to deception vile,
To extirpate it his heart doth ever rage,
They that have resolved to serve Bharat-land
Till the very last movement of their life,
Hold fast to this Arya's name and chant it
In love, as Saivites the sacred pentad.

Dear are the heroic Marathis
To Bharat-Devi who wears the Tilak.
Like that very Tilak is he, the famed one,
Bal Gangadhar Tilak, the Maharaj,
A flaming fire is he to the hostile,
Our Tilak the peerless Prince of Munis.
I hail his glorious lotus-feet twain
That I may come by Thought immaculate.

-T.N.Ramachandran

9.27. லாஜபதி

விண்ணகத்தே இரவிதனை வைத்தாலும்
அதன்கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளிதருதல் காண்கிலமோ?
நினையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலாம் மறக்கொ ணாதெம்
எண்ணகத்தே, லாஜபதி! இடையின்றி
நீவளர்தற் கென்செய் வாரே

ஒருமனிதன் தனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவர்க்கு ஊறு செய்தல்
அருமையில்லை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனிதர் எண்ணற்றார் இவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே?

பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரர்ம் பிழைத்து நின்றார்?
ஆரன்பு நாரணன்பால் இரணியன்சேய்
செய்ததனால் அவனுக் குற்ற
கோரங்கள் சொலத் தகுமோ? பாரதநாட்
டிற்பக்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்றோ?

-1908

9.27. Lajapathy

Even if the Sun be in the skiey expanse
Do we not behold its rays flowing down
Grow, to mingle with the light of eyes
Thus endowing them with lustre of light?
Even if they, in wrath, have exiled you
Away from that soil, if you get established
In our thought that knows no forgetfulness,
And if you do flourish there without let
O Lajapathy! what can they for this do?

It seplls no good to haunt a man and him
Exile from country to country; they might
Have wrought this with ease; but myriads there are
Instinct with the knowledge of his glory;
In them is he well enshrined; how can they
Ever hope to expel these and live in peace?

Who among them that practised universal love
Was ever spared (of punishments)? Hiranya's child
Showed utmost love unto Narayana;
Who could ever relate the vile horrors
He underwent; is it then a wonder
To witness the miseries of patriots
Courageously devoted to Bharat!

-T.N.Ramachandran

9.28. ராஜா ரவிவர்மா

சந்திரன் ஒளியை ஈசன் சமைத்தது அதுபருக வென்றே
வந்திடு சாத கப்புள் வகுத்தனன்; அமுதுண் டாக்கிப்
பந்தியிற் பருக வென்றே படைத்தனன் அமரர் தம்மை;
இந்திரன் மாண்புக் கென்ன இயற்றினன் வெளிய யானை. 1

மலரினில் நீல வானில் மாதரர் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை ஈசன் இயற்றினான், சீர்த்தி இந்த
உலகினில் எங்கும் வீசி ஓங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால் அனைத்தையும் நுகரு மாறே. 2

மன்னர்மா ளிகையில் ஏழை மக்களின் குடிலில் எல்லாம்
உன்னருந் தேசு வீசி உளத்தினைக் களிக்கச் செய்வான்
நன்னரோ வியங்கள் தீட்டி நல்கிய பெருமான் இந்நாள்
பொன்னணி யுலகு சென்றான் புவிப்புகழ் போதும் என்பான். 3

அரம்பைஊர் வசிபோ லுள்ள அமரமெல் லியலார் செவ்வி
திரம்பட வகுத்த எம்மான் செய்தொழில் ஒப்பு நோக்க
விரும்பியே கொல்லாம் இன்று விண்ணுல கடைந்துவிட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக்கு அழிதலங் கறிவை திண்ணம். 4

காலவான் போக்கில் என்றுங் கழிகிலாப் பெருமை கொண்ட
கோலவான் தொழில்கள் செய்து குலவிய பெரியோர் தாமும்
சீலவாழ் வகற்றி ஓர்நாட் செத்திடல் உறுதி யாயின்,
ஞாலவாழ் வினது மாயம் நவின்றிடற் கரிய தன்றோ? 5

-6-10-1906

9.28. On Ravi Varma

The Lord-God created the rays of the moon
To serve as food for the Chakor; He made
Nectar the food of the celestials
And the tusker white for Indra to ride. 1

In blossoms, in blue sky, and visages
Of women, God deigned to create beauty
That the world-renowned Ravi Varma might
Relish them with his eye of endless wisdom. 2

Glowing with inconceivable lustre
His pictures which adorn mansions and huts
Delight all hearts; gone is he to the heaven
Deeming it enough, his glory on earth. 3

Rambha, Urvasi and dames heavenly
Breathed alive on his canvas; to compare
His copies with originals, he is gone.
The dames divine are bound to wilt in shame. 4

If even great men whose divine works of beauty
That will with everlasting glory endure
Should aye, one day quit their glorious life,
What are we to say of world's Mayic nature? 5

-T.N.Ramachandran

9.29. மகாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்க நீ எம்மான்

வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி ம?ாத்மா நீ வாழ்க, வாழ்க!

அடிமை வாழ்வ கன்றிந் நாட்டார் விடுதலை யார்ந்து, செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய, புவிக்குள்ளே முதன்மை யுற்றாய்!

வேறு

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவன் என்கோ?
இடிமின்னல் தாங்கும் குடை செய்தான் என்கோ?
என்சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

9.29. To Mahatma Gandhi

Long may you live, Gandhi Mahatma
You who have brought new life to Bharat,
The land which of all lands on earth
Lay most degraded, poverty-stricken,
Ruined, forsaken, of freedom bereft. 1

Endless glory, yea, a crown
Universal you have gained
Devising a simple plan whereby
Our people can shake off slavery.
Breathe free, grow rich and learned and wise,
And show to all the world the way
Of true, enlightened citizenship. 2

Are you the monkey-god who brought,
As an antidote to ophidian noose,
The healing herb from the high Himalaya?
Or are you Shri Krishna who held up
The hill to ward off thunder and lightning?
Simple, Simple, new and Simple
Is the cure that you have found 3

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்
அதனி லுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ அறிந்தாய்
நெருங்கிய பயன்சேர் ஒத்துழை யாமை!
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே!

For heteronomy, painful and chronic
Malady: "Count as your own life
The life of him who comes to kill you.
Know that every human being
Is an image of God, a Child of God."
This wisdom bold and true you dared
To thrust into grim politics
Rife with sordid murder and strife. 4

Shunning the way of war which is
But murder on a massive scale,
You chose a method much more effective,
The path of dharma prepared by seers
And servants of God, Satyagraha,
Unfailing, fruitful, for bringing to Bharat
A future bright, and to the world
Forgetfulness of deeds of hate.
May this good dharma live for ever. 5

-K.Swaminathan

9.30.ஏசுபிரான்

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்;
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்;
நேச மா மரிய மக்தலேனா
நேரிலே இந்த செய்தியைக் கண்டாள்;
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தம் காப்பார்,
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்.

அன்பு காண் மரியாள் மக்தலேனா,
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்,
பொன் பொலிந்த முகத்தினிற் கண்டே,
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை,
அன்பெனும் மரியா மக்தலேனா
ஆ?ா!சாலப் பெருங்களி யிஃதே.

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்,
வண்மைப் பேருயிர்- யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்.
பெண்மை காண் மரியாள் மக்தலேனா,
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து.
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும்.

9.30. **Jesus Christ**

The Lord descended and died on the Cross;
Rose up on the third day.
Mary Magdalene witnessed in person.
People of all nations!
Listen to the implication thereof.
The Lord enters our selves
To protect us for ever from the doom,
If only we kill our ego.

Mary Magdalene is but love;
Jesus Christ is but the soul.
When first the evil is dispensed with,
Resurrection occurs on day three.
Looking at the resurrected,
On the face bright as gold,
Mary Magdalene praised the Lord.
Aha! Great indeed is the delight!

Crucify the senses on the cross of Truth
With nails of tapas.
Thence revealed is the heavenly form
Of Jesus Christ thereon.
Mary Magdalene is but womanhood.
Jesus Christ is but virtue preserved.
Such is the subtlety of the episode
As can be understood in a moment.

-P.N.Appuswami

10. பெண் விடுதலை

10.31. பெண்கள் விடுதலைக் கும்மி

காப்பு

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேயொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம் நற் காப்பாமே.

கும்மி யடி!தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார்,அதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலைகொண்டு நாயை விற்பார்,அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார். (கும்மி)

10. Women Liberation
10.31. The Kummi of Women's Freedom

We sing the joys of freedom;
In gladness we sing.
And He that shineth in the soul as Light shines.
In the eye, even He is our strength. 1

Dance the Kummi, beat the measure;
Let this land of the Tamils ring with our dance;
For now we are rid of all evil shades;
We've seen the Good. 2

Gone are they who said to woman: 'Thou shall not
Open the Book of Knowledge.'
And the strange ones who boasted saying:
"We will immure these women in our homes" -
Today they hang down their heads. 3

The life of the beast that is beaten,
Tamed and tied down,
Fain would they lay it on us in the house,
But we scornfully baffled them.
Dance the kummi, beat the measure. 4

The dog they sell for a price, nor ever consult his will,
Nigh to his state had they brought us - would
rather they had killed us at a blow -
But infamy seized them.
Dance the kummi, beat the measure. 5

கற்பு நிலையென்று சொல்ல வந்தார்,இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வ்ற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்;தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி)

காத லொருவனைக் கைப்பிடித்தே,அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி! (கும்மி)

And they talk of wedded faith;
Good, let it be binding on both;
But the custom that forced us to wed we've
Cast it down and trampled it under foot.
Dance the Kummi, beat the measure. 6

To rule the realms and make the laws
We have arisen;
Nor shall it be said that woman lags behind
Man in the knowledge he attaineth.
Dance the kummi, beat the measure. 7

To know the Truth and do the Right,
Willing we come;
Food we'll give you; we'll also give
A race of immortals.
Dance the kummi, beat the measure. 8

-Mahakavi C.Subramania Bharati

10.32. பெண்கள் வாழ்க!

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும்.

அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்.
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்.
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென் றும் போற்றுவோம்.

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலிய ழிப்பது பெண்க ளறமடா!
கைகள் கோர்த்துக் களிப்பதுநின் றாடுவோம்.

பெண்ண றத்தின ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா!

சக்தி யென்ற மதுவையுண் போமடா!
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே,
ஒத்தி யல்வதொர் பாட்டும் குழல்களும்
ஊர்வி யக்கக் கவித்துநின் றாடுவோம்.

உயிரைக் காக்கும்,உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்;
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள்,ஆடு களிகொண்டே

10.32. Hail Womanhood

Let us dance hailing womanhood!
Let us dance wishing them success!
Utter the words mother and wife,
Feel the comfort, happiness and punya.

Let us dance quietyly hailing love
Let us hail desirous love clapping hands.
Womanhood dispels distress
Let us hail the mother of the valourous.

Milk from the mother's breasts brings strength.
The words of the wife bring honour.
The virtue of woman destroys the evil of the exigent.
Let us join hands and dance in delight.

When the valour of man
Takes care of the virtue of woman,
Abjectivity there is none.
Let us preserve the delight of love,
As do the eyelids the eyes.

Let us consume the nectar of Shakthi,
Beating th drums thundering all around,
Harmonising song and music,
Let us dance to the awe of the world.

Womanhood preserves life,
Brings life,
Becomes the pleasure of life to life,
Womanhood is sweeter than life.
Let us blow the trumpets and dance in delight.

‘போற்றி தாய்’ என்று தோள்கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே,
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணொருத்தி பணியிலே.

‘போற்றி தாய்’ என்று தாளங்கள் கொட்டடா!
‘போற்றி தாய் என்று பொற்குழ லூதடா!
காற்றி லேறியவ விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே

அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்;
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்.

Dance hailing the mother!
Sing the praise of loving parrots.
In the service of a narrow-waisted dame,
Let us surmount a hundred peaks.

Keep beats hailing the mother!
Play on the golden flute hailing the mother.
In the service of the loving dame
With an oblong glance,
We shall ride the winds and win the heavens.

At the behest of the mother who fed us
We shall swallow the flames.
Even when the kiss on the check is welcome,
Lo, the arms push away in pretence,
We will sing in praise of the arms.

11. பல்வகைப் பாடல்கள்

11.33. சிட்டுக் குருவி

பல்லவி

விட்டு விடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டு குருவியைப் போலே

சரணங்கள்

எட்டு திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னும் மதுவின் சுவையுண்டு (விட்டு)

பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்று
பீடையி லாததோர் கூடு கட்டிக்கொண்டு
முட்டைதருங் குஞ்சைக் காத்து மகிழ்வெய்தி
முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு (விட்டு)

முற்றத்தி லேயுங் கழனி வெளியிலும்
முன்கண்ட தானியம் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுது கதைசொல்லித் தூங்கிப்பின்
வைகறை யாகுமுன் பாடி விழிப்புற்று. (விட்டு)

11. Multifaced Muse

11.33. The Sparrow

O may you escape all shackles
and revel in liberty like this sprightle sparrow!

Roam about in endless space,
swim across the whirling air,
drink the measureless wine of the light
that flows for ever from the azure sky!
O may you escape...

Happily twittering and making love,
building a nest beyond danger's reach,
guarding the fledgeling hatched from the egg
and giving if feed and wholesome care
O may you escape...

Gather and feast on the remnant corn
from backyards and harvested fields;
then tell strange stories and sing and rest
and rise again at dawn with a song!
O may you escape...

-Dr.Prema Nandakumar

11.34. வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம் ஓம் ஓம் ஓம்.

11.34. Aspirations

A breave heart
sweet speech
good thoughts
ripe fruit
quick dividends
dreams fulfilled
wealth and happiness
and fame on earth. 1

Clear vision
willed action
woman free
a fecund land
the Lord's grace
Truth triumphant
a new heaven
a new earth.
Om Om Om Om. 2

-Dr.Prema Nandakumar

11.35. அக்கினிக் குஞ்சு

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு;-தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்ரிகிட தித்தோம்.

11.35. Fire-chick

I found a fire-chick, and that
I placed in a hole in a forest;
The forest smouldered clean away,
In fiery valour, is there anything like
Fledgeling or age-worn?
Tatththarikita tatththarikita Titththom.

-Mrs.Koppedrayer

11.36. தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள் களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்துட வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!

-1919

11.36. Labour

Ye that heat and melt iron
Ye makers of machinery
Ye squeesers of juice from sugarcane
Ye divers into the sea for pearl-oysters
Ye that drip sweat in a thousand trades-
I praise and glorify you all;
You do Brahma's work on earth. 1

Ye that mould clay and make pots
Ye that hew wood and build homes
Ye the givers of fruit, ripe and green,
Ye that till the wet lands and grow crops
Ye spinners and weavers of fine fabrics-
Good protect us from Heaven;
Ye protect us on earth. 2

Ye reators of songs and poems
Ye artists of the classical dance
Ye observers of the truth of material world
and architects of sciences therein
Ye that guide us in virtue's way
Ye that enable us in Virtue's way
Ye that enable us to experience the joys we seek-
We behold the Divine in you, unsought. 3

-S.Ramakrishnan

11.37. காணி நிலம்

காணி நிலம் வேண்டும்-பராசக்தி
காணி நிலம் வேண்டும்;-அங்கு,
தூணில் அழகியதாய்-நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்-அந்தக்
காணி நிலத்திடையே-ஓர் மாளிகை
கட்டித் தரவேணும்;-அங்கு,
கேணி யருகினிலே-தென்னைமரம்
கீற்று மிளநீரும் 1

பத்துப் பன்னிரண்டு-தென்னைமரம்
பக்கத்திலே வேணும்;-நல்ல
முத்துச் சுடர்போலே-நிலாவொளி
முன்புவர வேணும்?அங்கு
கத்துங் குயிலோசை-சற்றே வந்து
காதிற்பட வேணும்;-என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே-நன்றாயிளந்
தென்றல்வர வேணும். 2

பாட்டுக் கலந்திடவே-அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்;-எங்கள்
கூட்டுக் களியினிலே-கவிதைகள்
கொண்டுதர வேணும்;-அந்தக்
காட்டு வெளியினிலே,-அம்மா!நின்தன்
காவலுற வேணும்;என்தன்
பாட்டுத் திறத்தாலே-இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். 3

11.37. A Plot of Land

A plot of land - great Deity!
A plot of land I beg of thee;
With pillars beautiful and bright
And rising storeys gleaming white,
Build thou for me a castle there;
May palm-trees wave their green leaves fair,
And their delicious milk supply
While springs refreshing gurgle by. 1

Green palm-trees, these I do require,
Some ten or twelve beside me there;
And like a soft and pearly shower
Bright moonbeams send thou me, great Power!
And cause within my ears to fall
The distant cuckoo's gentle call;
Do thou send me the evening breeze,
That softly fans, my heart to please, 2

A faithful wife give thou to me,
In all my songs to mingle free;
And bring us poetry divine,
That our delights it may refine;
In that most solitary space.
Great Mother, guard us with thy grace!
And grant that by my gift of song
My sceptre over the world be strong. 3

-Hephzibah Jesudasan

11.38. நிலாவும் வான்மீனும் காற்றும் (மனத்தை வாழ்த்துதல்)

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோலவெறி படைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ!

தாரகை யென்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போமனமே,
சரச் சுவையதி லூறி வருமதில்
இன்புறு வாய்மனமே!
சீர விருஞ்சுடர் மீனொடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓரழ காக விழுங்கிடும் உள்ளத்தை
ஒப்பதொர் செல்வமுண்டா'

பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியிவ் வானத்தில் ஓட
விரும்பி விரைந்திடுமே;
முன்றலில் ஓடுமோர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும்வி மானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்.

11.38. Moonlight, Star and Wind

A joyous frenzy seizes us
as we drink the nectarean wine,
the splendid concoction
of moonlight, star and wind.
Let us allow our mind-bird
to roam the world over;
is it a wonder that the bee hums
from a cart full of jackfruit? 1

O mind! roam about to join
the far star-cluster
and enjoy the sweetness
dripping from them!
The heart's rich granary
that treasures in joy
the starry skies above
and the radiant moon. 2

Must you grovel in the mire
like a dirty pig?
Rather sweep the blue across
in search of victory!
Let the mind, like a car air-borne
speed across space-
not like a slow-moving wagon
linger behind. 3

தென்னையின் கீற்றுச் சலசலச வென்றிடச்
செய்துவருங் காற்றே!
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமொர்
உள்ளம் படைத்துவிட்டோம்.
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற் காற்றே!
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
வெட்டொலி யேன் கொணர்ந்தாய்?

மண்ணுல கத்துநல் லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டுவந்தான்;
பண்ணி விசைத்தவ வொலிக ளனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்.
நண்ணி வருமணி யோசையும்,பின்னங்கு
நாய்கள் குலைப்பதுவும்,
எண்ணுமுன்னே‘அன்னக் காவடிப் பிச்சை’யென்
றேங்கிடு வான் குரலும்,

வீதிக் கதவை அடைப்பதும் கீழ்த்திசை
விம்மிடும் சங்கொலியும்,
வாதுகள் பேசிடு மாந்தர் குரலும்
மதலை யழுங் குரலும்,
ஏதெது கொண்டு வருகுது காற்றிவை
எண்ணி லகப்படுமோ?
சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேனுண்ணு வாய், மனமே!

Like the wind that rattles along
the leaves of coconut palms,
our heart would ride you, mind,
as a careering horse.
O wind who can gently convey
the chirping of the birds,
must you also bring along
lightning and thunder? 4

It's the Wind God who transmits strains
auspicious for the earth;
and reproducing their music,
we shall lave in delight.
The jingling of the bells, the barking
of the dogs behind,
the beggar's despairing appeal
for a mouthful of food; 5

The noise of doors being shut,
of conches blowing in the East,
of people in loud argument,
of the cries of children;
the varied sounds the wind carries
are not to be reckoned.
O mind! look up at the moon's bright rays
and drink the honey of delight! 6

-Dr.Prema Nandakumar

11.39. பொய்யோ? மெய்யோ?

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ?-பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ?-உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ?-வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?-இந்த ஞாலமும் பொய்தானோ?

கால மென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ?-அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ?-இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம்
காண்ப மன்றோ?
வீண்படு பொய்யிலே - நித்தம் விதி தொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதில்லை
காண்பது சக்தியாம்-இந்தக் காட்சி நித்தியமாம்.

11.39. Illusion or Reality?

You that stand, and walk, and fly,
Are you but dreams? And dry streams?
You that we learn, and hear, and ponder,
Are you but illusion? A shallow delusion? 1

Groves, and sunshine, and sky,
Are you a snare? A castle in the air?
Since all that is past is a tale that is told,
Am I too inanity? And this world a vanity? 2

Time and Space, and the things that we see,
Are they all ideal, their nature unreal?
If a seed may within it a forest contain
Are trees mere tropes? Literary dopes? 3

If all we see are bound to pass,
All that are past were once seen; Can Fate Pursue what never has been?
That which we see is reality,
What is unseen hypothesis; Sakti survives metathesis. 4

-P.S.Sundaram

11.40. நான்

இரட்டைக் குறள் வெண் செந்துறை

வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்,
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;
கானில் வளரும் மரமெலாம் நான்,
காற்றும் புனலும் கடலுமே நான் 1

விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்,
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்;
மண்ணில்கிடக்கும் புழுவெலாம் நான்,
வாரியினுள் உயிரெலாம் நான், 2

கம்பனிசைத்த கவியெலாம் நான்,
காருகர் தீட்டும் உரவெலாம் நான்;
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழில்நகர் கோபுரம் யாவுமே நான், 3

இன்னிசை மாதரிசையுளேன் நான்,
இன்பத்திரள்கள் அனைத்துமே நான்;
புன்னிலை மாந்தர்தம் பொய்யெலாம் நான்,
பொறையருந் துன்பப் புணர்ப்பெலாம் நான். 4

மந்திரங்கோடி இயக்குவோன் நான்,
இயங்கு பொருளின் இயல்பெலாம் நான்;
தந்திரங் கோடி சமைத்துளோன் நான்.
சாத்திர வேதங்கள் சாற்றினோன் நான். 5

11.40. The Song of Myself

I'm all the birds that fly in the sky;
I'm all the beasts that roam the earth;
I'm all the trees that grow in the wood;
I'm the wind, the rain and the sea. 1

I'm all the stars that shine on high;
I'm the vast expanse of widening space;
I'm all the worms that crawl on earth;
I'm all the life in the vasty deep; 2

All the poetry of Kamban am I;
And all the figures that artists draw;
The halls and bowers men wonder at
And all the beauteous towers am I. 3

In the music melodious of maidens I am;
And all the teeming pleasures I am;
I'm all the lies of the unworthy base;
I'm all the misery that endurance tests. 4

Master I am of a million mantras;
And Essence I am of all that moves;
Maker I am of a million tantras;
And He that proclaimed the Vedic Sastras. 5

அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்,
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்,
கண்டல் சக்திக் கணமெலாம் நான்
காரணமாகிக் கதித்துளோன் நான். 6

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்,
ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்;
ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற்சோதி நான். 7

I'm He that created the Universes all;
And made them revolve in their orbits true,
Unswerving from their appointed paths;
I'm all the beneficent bands of power;
I'm the Cause and the End of all! 6

I'm He that works the lie called 'I',
And swims through Wisdom's flaming sky;
I'm the intelligence shining bright,
Oned with all, as the Primal Light! 7

-K.G.Seshadri

12. அயல் நாடுகள்

12.41. மாஜினியின் சபதம்

பொருட் கடவுள் திருவடி யாணை,
பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
தவபெய ரதன் மிசை யாணை.
பாரவெந் துயர்கள் தாய்த்திரு நாட்டின்
பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர்,நம்நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெய ராணை. 1

ஈசனிங் கெனக்கும் என்னுடன் பிறந்தோர்
யாவர்க்கும் இயற்கையின் அளித்த
தேசமின் புறுவான் எனக்கவன் பணித்த
சீருய ரறங்களி னாணை.
மாசறு மென்நற் றாயினைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கும் இயற்கையா மன்றோ?
அத்தகை யன்பின்மீ தாணை. 2

தீயன புரிதல், முறைதவி ருடைமை,
செம்மைதீர் அரசியல் அநீதி
ஆயவற்றென்னெஞ் சியற்கையின் எய்தும்
அரும்பகை யதன்மிசை யாணை
தேயமொன் றற்றேன் நற்குடிக் குரிய
உரிமைகள் சிறிதெனு மில்லேன்
தூயசீ ருடைத்தாம் சுதந்திரச் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன் 3

12.Foreign countries

12.41. Mazzini's Vow

I swear by the feet divine of the God
Of great grace; I swear by the austere name
Of my nation - a lamp unto the world -
That gave birth to us and nourished us all;
I swear by the lofty ones who perished
Hailing divine motherland of heroes,
In whose cause they did in a thousand ways
Suffer excruciating curelties. 1

I swear by those lofty dharmas famous
Ordained on me by God that the nation
Which He gave so naturally to me
And my brethren may exult in delight.
Is it not but nature that one doth love
The nation that gave one, one's own mother
And serves as the home of one's progeny?
By such love I do take this solemn oath. 2

I swear by the hostility I bear
By nature, towards evil - doing vile,
Improper acquisition, misrule base,
Injustice and wrongs of similar kind.
Deprived of nation and the least of rights
To noble clanship and citizenship
I am condemned to be born in a country
Bereft of the banner pure, of freedom. 3

மற்றைநாட் டவர்முன் நின்றிடும் போழ்து
        மண்டுமென் வெட்கத்தி னாணை.
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்று
        அச்செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனில்
        ஆர்ந்தபே ராவலி னாணை,
நற்றவம் புரியப் பிறந்த தாயினுமிந்
        நலனறு மடிமையின் குணத்தால் 4

வலியிழந் திருக்கும் என்னுயிர்க் கதன்கண்
        வளர்ந்திடும் ஆசைமீ தாணை.
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
        மாண்பதன் நினைவின்மீ தாணை.
மெலிவுடன் இந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
        வீழ்ச்சியி னுணர்ச்சிமீ தாணை.
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
        புன்சிறைக் களத்திடை யழிந்தும் 5

வேற்று நாடுகளில் அவர்துரத் துண்டும்
        மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்றகி லாராய் எம்மரு நாட்டின்
        அன்னைமார் அழுங்கணீ ராணை.
மாற்றல ரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
        வகுக்கொணாத் துயர்களி னாணை.
ஏற்ற இவ்வாணை யனைத்துமேற் கொண்டே
        யான்செயுஞ் சபதங்கள் இவையே; 6

I swear by the shame that wells up in me
When I stand before other countrymen;
I swear by the great longing of my life
Which languishes without strength to achieve
The Bliss of Release to Seek which alone
My life was with an embodiment blest.
Though born to perform the goodly tapas
By reason of the slave's mentality 4

My life is grown effete; but its desire
Doth swell; by that soaring desire I swear,
I swear by the memoried majesty
Of my forbears of abundant renown.
I swear by the very downfall to which
We are this day so weakly subjected.
Glorious sons perish at the gallows;
They wallow in vile incarcerations; 5

They are alas exiled to other lands
Where they perish utterly mortified.
At this the Mother of our dear country
Weeps and weeps; I swear by her sacred tears.
I swear by the unexampled sorrows
Caused by our enemies to us - millions.
You have heard me swear and to these I add
These, my further solemn obligations. 6

கடவுளிந் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டளை தன்னினும் அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே பிறந்தவர்க் கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென் பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்.
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைக்கெனப் பணிப்பனேல் அதுதான். 7

சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும்,
அமையுமத் திறமை ஜனங்களைச் சாரும்
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையு மில்லாத
தம்அருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செயத்தீனுக் கதுவே
சூழ்ச்சியாம் என்பதை யறிந்தும் 8

கருமமும் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமாம் என்றும், ஒற்றுமை யோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியாம் என்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற் கொண்டும்,
அருமைசால் சபதம் இவைபுரி கின்றேன்
ஆணைகளனைத்து முற்கொண்டே 9

Greater than the holy commandment of God
Issued to this country, and greater than
The indispensable duties cast on
All men born in this country to perform
God's fiat, is the knowledge that if God should
Order the creation of a race - firm
In faith and resolute - o'er this strong earth,
That race can flourish only if it is 7

Fully aware of the divine will which
At its creation infused it with skill
To Flourish; it should again know further
That its stability depends upon
Its people and that they themselves, without,
From others seeking help, should ply their skill,
Bearing well their responsibility,
Which alone, be it known, will spell success. 8

To perform duty and to give freely
Not caring a little for petty self
Are dharma; a spirit of union fired
By unflagging resolution marks strength
That is glorious; with these principles
Indelibly imprinted in my mind,
I hereby swear these oaths, solemn and rare,
Well remembering all the vows I have made. 9

என்னுட னொத்த தருமத்தை யேற்றார்.
இயைந்த இவ்‘வாலிபர் சபை‘க்கே
தன்னுடல், பொருளும், ஆவியு மெல்லாம்
தத்தமா வழங்கினேன், எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன் றதா யிலக, 10

இவருடன் யானும் இணங்கியே யென்றும்
இதுவலாற் பிறதொழில் இலனாய்த்
தவமுறு முயற்சி செய்திடக் கடவேன்.
சந்ததஞ் சொல்லினால், எழுத்தால்,
அவமறு செய்கை யதனினால், இயலும்
அளவெலாம் எம்மவ ரிந்த
நவமுறு சபையி னொருபெருங் கருத்தை
நன்கிதின் அறிந்திடப் புரிவேன். 11

உயரும் இந்நோக்கம் நிறைவுற‘இணக்கம்’
ஒன்றுதான் மாக்கமென் பதுவும்,
செயம்நிலை யாசச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்க மென்பதுவும்,
பெயர்வற எங்கள் நாட்டினர் மனத்திற்
பேணுமா றியற்றிடக் கடவேன்;
அயலொரு சபையிலின்றுதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன். 12

To this “Society of the Young” wrought by
The youths who are wedded to my dharma,
I dedicate in truth and gift away
My life, my body and possessions all,
That our golden country may by power
Of union and freedom ever flourish
As a republic, truly pursuing
The great policy of non-alignment. 10

Companied with these lads, let me always
Work, with no fault to mar my endeavours;
I will never think of any other work.
For sure, always, by word of mouth, by writing,
And by deed from blemish totally free,
To the extent which is possible for me,
I will explicate the great ideal
Of this novel society to our men. 11

For fruition of this lofty ideal
The only way is unity; to stablish
Triumph and to make it endure for e’er,
Dharma alone is the goodly way true;
I will strive to imprint these indelibly
In the tablets of the hearts of our men.
Any society other than this - ours -
Never will I at any point of time join. 12

எங்கள் நாட் டொருமை என்னொடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்களாக் கினைக ளனைத்தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன்;
இங்கெனது ஆவி மாய்ந்திடு மேனும்
இவர்பணி வெளியிடா திருப்பேன்;
துங்கமார் செயலாற் போதனை யாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன். 13

இன்றும் எந்நாளும் இவைசெயத் தவறேன்;
மெய்யிது,மெய்யிது,இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனேல் என்னை
ஈசனார் நாசமே புரிக;
அன்றியும் மக்கள் வெறுத்தெனை இகழ்க;
அசத்தியப் பாதகஞ் சூழ்க;
நின்றதீ யெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தம்யா னுழலுக மன்னோ! 14

வேறு

பேசி நின்ற பெரும்பிர திக்கினை
மாசி லாது நிறைவுறும் வண்ணமே
ஆசி கூறியருளுக! ஏழையேற்கு
ஈசன் என்றும் இதயத் திலகியே. 15

-1908

This society marks our land's unity;
I will e'er abide by all the behests
Of its leaders in strict obedience
And aye, in wilful veneration.
Even if I were to forfeit my life
I will not publish their secret commands.
By righteous practice and precept also
I will render them my very best help. 13

From this day and always, I'll not omit
To do these; I swear, I swear, if ever
I should from this course deviate at all,
May the Almighty annihilate me!
May people to condemn and contemn me!
May evil false surround me for ever!
May I into flaming inferno fall
And suffer perdition everlasting! 14

May the Lord - God abide in me
And keep me steadfast by His Grace
In these solemn obligations
To which I have willingly sworn. 15

-T.N.Ramachandran

12.42. புதிய ருஷியா

ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி

மாகாளி பராசக்தி உருசியாநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள்,அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி!
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்!
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெ லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்த மடிந்தனவாம்;
வையகத்தீர்,புதுமை காணீர்! 1

இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெ னும்பே ரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்;தருமற் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்;
பொய்சூது தீமையெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில் 2

உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள் பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு;உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
தூக்குண்டே இறப்ப துண்டு;
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவ துண்டு. 3

12.42. New Russia

The Magna Mater towards Russia
Turned her benign glance;
Lo! tornado-like whirled
The epoch-making Revolution;
The tyrant screamed as he crashed below.
An event of cosmic import it was;
The heavenly gods' shining shoulders
Swelled with joy and pride;
While the devils, their eyes drowned in tears,
Went blind and died.
Ye men of the earth, Behold this wonder. 1

Like Hiranya of the old the tyrant ruled-
The accursed known as the Czar;
Good men and saintly souls writhed without refuge;
Justice and Virtue.
The idiot Czar treated as of no account;
Lies, deceits, and a myriad evils,
Like snakes in the dark jungle,
Teemed and flourished in that land. 2

Hunger gnawed at the vitals
Of those who ploughed, sowed and reaped;
Fell disease abounded.
Servile votaries of falsehood
Amassed lucre;
Those who dared to speak the truth
Underwent unheard-of tortures in prison-cells
Or died on the gallows.
Many of them in ghoulish Siberian wasteland
Languished and perished. 3

இம்என்றால் சிறைவாசம்;ஏனென்றால்
வனவாசம்,இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்,
அம்மைமனங் கனிந்திட்டாள்;அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள்;முடிந்தான் காலன். 4

இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன்;இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்வறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர்சட சடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே! 5

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார் குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ! 6

-1917

Even for a murmer people were jailed,
For a protest banishment and in this wise
Virtue was shattered,
Vice reigned in her place.
The Great Mother's heart was touched;
The compassionate glance
By which she protects her truth-loving devotees,
She turned on that land
And the tyrant fell. 4

Like the Himalayas crashing
The wicked Czar fell with a bang;
One and all of those around him
Who cringed and uttered lies to suit his whims,
Who conspired to murder Virtue-
All of them were smashed to smithereens,
Even as the stormy whirlwind in a forest
Knocks down all the trees
And makes fuel out of it. 5

The people are masters of their lives,
Their welfare advanced by their own laws.
Lo! in a trice has it arisen.
This is people's state, they proclaimed,
So that the whole world might know.
"Gone are the slaves' shackles,
know ye all,
No more shall man be a slave,"
said they.
Like a thunder-riven wall
Collapsed the Iron-Age
Arise oh, the Golden Age. 6

-S.Ramakrishnan

12.43. பெல்ஜியத்திற்கு வாழ்த்து

அறத்தினால் வீழ்ந்து விட்டாய்!
அன்னியன் வலிய னாகி
மறத்தினால் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்வாய்:
முறத்தினாற் புலியைத் தாக்கும்
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்! 1

வண்மையால் வீழ்ந்து விட்டாய்!
வாரிபோற் பகைவன் சேனை
திண்மையோடு அடர்க்கும் போதில்
சிந்தனை மெலித லின்றி
ஒண்மைசேர் புகழே மேலென்று
உளத்திலே உறுதி கொண்டாய்;
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றாய்! 2

மானத்தால் வீழ்ந்து விட்டாய்!
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்.
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய்! 3

12.43. Ode To Belgium

Righteousness it was that laid you low!
When the stranger, swollen with arrogant might,
Came with fell intent to do cruel wrong,
You did not meekly suffer it - No!
But, like the lass of yore of the highland tribe
who with a winnow beat a fierce tiger off,
Though poor indeed you were in strength,
Yet by your deeds did you to glory rise. 1

Generosity it was that laid you low!
When the enemy came down like a heavy flood
And rushed on you with massive might,
You did not waver, did not quail
But, firmly within your heart believing
That glorious fame alone is noblest, best,
You boldly dared to guard the rights
Of the true patriots of your beautiful land. 2

Honour it was which laid you low!
Immeasurable in might was the enemy king;
His strength was as limitless as the sky;
Though you were ravaged, undaunted was your heart.
And you scorned to step aside;
But, eager to do all the that you could,
Right across his path you bravely stood,
Barring the mighty, overwhelming foe. 3

வீரத்தால் வீழ்ந்து விட்டாய்!
        மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே ஒதுங்கித் தன்னை
        ஒளித்திட மனமொவ் வாமல்,
பாரத்தை எளிதாக் கொண்டாய்;
        பாம்பினைப் புழுவே யென்றாய்;
நேரத்தே பகைவன் றன்னை
        'நில்'லென முனைந்து நின்றாய் 4

துணிவினால் வீழ்ந்து விட்டாய்!
        தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னோடும்
        பெரும்பகை எதிர்த்த போது
பணிவது கருத மாட்டாய்;
        பதுங்குதல் பயனென் றெண்ணாய்;
தணிவதை நினைக்க மாட்டாய்
        'நில்'லெனத் தடுத்தல் செய்தாய். 5

வெருளுத லறிவென் றெண்ணாய்;
        வித்தையோர் பொருட்டாக் கொள்ளாய்;
சுருளலை வெள்ளம் போலத்
        தொகையிலாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன்
        வலிமையாற் புகுந்த வேளை
"உருளுக தலைகள், மானம்
        ஓங்குகெ"ன் றெதிர்த்து நின்றாய். 6

Chivalry it was which laid you low!
        When heaviest rocks rolled down on you,
You disdained with all your noble heart
        To step aside, or to screen yourself.
The burden that bore you down you held as naught;
        You declared that the serpent was a mere worm;
And when the moment came, you cried 'Halt' to the foe,
        And ready for battle resolute stood. 4

Courage it was which laid you low
        With the serried host of his countless armies.
And in his pride which like a cnaker grew,
        Your mighty enemy most fully attacked you,
Never did you think of any surrender;
        No thought had you of weak submission; 5

You did not hold that wisdom lay in fear;
        All thought of danger you cast aside.
Like the rolling waves of a mighty flood
        Came the countless legions of his army's van;
And intoxicated with his resistless might
        The enemy thrust his way into your own domain
But you dared to oppose him, shouting,
        'Let heads roll down, so honour be held hight!'6

யாருக்கே பகையென் றாலும்
யார்மிசை இவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்தர வெண்ணி டாமல்,
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில் லாமல்
வெட்டுவேன் என்று நின்றாய், 7

வேள்வியில் வீழ்வ தெல்லாம்
வீரமும் புகழும் மிக்கு
வீள்வதுண் டுலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கும் என்பார்;
ஆள்வினை செய்யும் போதில்
அறத்திலே இளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக்
கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல். 8

விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்று மட்டும்,
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனகமா ளிகையு முண்டாம்;
அளக்கருந் தீதுற் றாலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்,
துளக்கற ஓங்கி நிற்பர்;
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே? 9

'I care not whose enemy he may be;
O care not whom he seeks to attack;
Into my cities, my borders crossing,
And setting at naught my issued commands,
He has dared to enter with the panoply of war.
The forest of his audacious pride
I shall cut down; nor leave one root behind,
Thus did you declare, and challenging stood. 7

They say, 'All Holy Books declare
That noble man who as martyrs die
Are reborn again upon this earth
With greater valour, nobler fame;
And if those who engage themselves in manly enterprise
Die, overpowered in doing the right,
They quickly return from the world beyond
To live exalted upon the earth.' 8

When lamps grow dim, and then die out;
Till the dawn comes in sun-lit glory,
Golden mansions vanish in the gloom
Of dark, and foul, and wicked night,
Though untold suffering may now be theirs,
Those gallant men with fearless hearts
Shall rise again with unshakable might-
Never did hero pine in grief! 9

-P.N.Appuswami

13. நெடுங்கவிதைகள்

13.44. குயில் பாட்டு

1. குயில்

காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய

செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின்
மேற்கே, சிறுதொலையில் மேவுமொரு மாஞ்சோலை,
நாற்கோணத் துள்ளபல நத்தத்து வேடர்களும்
வந்து பறவைசுட வாய்ந்த பெருஞ்சோலை; -
அந்தமாஞ் சோலை யதனிலோர் காலையிலே,

வேடர் வாராத விருந்துத் திருநாளில்,
பேடைக் குயிலொன்று பெட்புறவோர் வான்கிளையில்
வீற்றிருந்தே, ஆண்குயில்கள் மேனி புளகமுற,
ஆற்ற லழிவுபெற, உள்ளத் தனல் பெருக,
சோலைப் பறவையெல்லாம் சூழ்ந்து பரவசமாய்க்

காலைக் கடனிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடை எங்குங் கலந்ததுபோல்,
மின்னற் சுவைதான் மெலிதாய் மிகவினிதாய்
வந்து பரவுதல்போல், வானத்து மோகினியாள்
இந்தவுரு வெய்தித்தான் ஏற்றம் விளங்குதல்போல்,

13. Long Poems
13.44. Kuyil Pattu

1. Kuyil

The Ocean was a piece of jade
set against fire,
set against the newborn sun,
set in the magic of dawn;
with her breakers crashing,
each one right in rhythm,
she sang the truth
of all scripture.

There was a city there,
a Tamil City, with
beaches and a breeze;
just west
was a grove
of mango trees,
where hunters
from all the villages
around came
to shoot birds.

One sacred morning
no hunters came,
and a little kuyil
sat herself way up
in a tree
-near the sky-
and mixed, it seemed,
a sweet ambrosia through the breeze
into everywhere.

இன்னிசைத் தீம்பாடல் இசைத்திருக்கும் விந்தைதனை
முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே - கண்டேன் யான்.
கன்னிக் குயிலொன்று காவிடத்தே பாடியதோர்

இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்,
''மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாரோதோ?
இனிதிக் குயிற்பேட்டை என்றும் பிரியாமல்,
காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ?
நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ?''

என்றுபல வெண்ணி ஏக்கமுறப் பாடிற்றால்.
அன்றுநான் கேட்டது அமரர்தாங் கேட்பாரோ?
குக்குக்கூ வென்று குயில்பாடும் பாட்டினிலே
தொக்க பொருளெல்லாம் தோன்றியதென் சிந்தைக்கே;
அந்தப் பொருளை அவனிக் குரைத்திடுவேன்;
விந்தைக் குரலுக்கு, மேதினியீர், என்செய்கேன்!

The birds all gathered
and listened; they forget
themselves, sunk
in the music,
The 'he-kuyils'
feathers stood on end
from sheer excitement, their strength
drained, and, inside, small
fires burned. Her song spread,
thin and very sweet,
like a taste of
lightning.
It was as though an enchantress
had come from paradise
as a bird, to show off.

As i pondered the wonder of her music,
a poetic lunacy kindled in me,
my sight fogged, and I was standing
in the glow of a tall dream - like
what happens to poets in broad daylight.

Much caught me off guard
as I revelled in the song the virgin
kuyil sang that day in that groove.
If I dismissed my human body,
would I gain a kuyil's body,
Why couldn't I live forever united
to that sweet little bird, making love, to die
in the flames of her music?
Could even the immortals have heard
what I heard that day?

All my secret thoughts rose up
into consciousness, thorugh the song
that kuyil sang.
I am going to tell
her truths, now,
to the whole world...
What can I do, though,
for a voice like hers,

2. குயிலின் பாட்டு
ராகம் - சங்கராபரணம் தாளம் - ஏக தாளம்)

ஸ்வரம்: ''ஸகா - ரிமா - காரீ
பாபாபாபா - மாமாமாமா
ரீகா - ரிகமா - மாமா''

சந்த பேதங்களுக்குத் தக்கபடி மாற்றிக் கொள்க.

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல். (காதல்)

1.

அருளே யாநல் லொளியே;
ஒளிபோ மாயின், ஒளிபோ மாயின்,
இருளே, இருளே, இருளே. (காதல்)

2.

இன்பம், இன்பம், இன்பம்;
இன்பத் திற்கோ ரெல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம். (காதல்)

3.

நாதம், நாதம், நாதம்;
நாதத் தேயோர் நலிவுண் டாயின்,
சேதம், சேதம், சேதம். (காதல்)

4.

தாளம், தாளம், தாளம்;
தாளத் திற்கோர் தடையுண் டாயின்,
கூளம், கூளம், கூளம். (காதல்)

O people of the world?

2. The Kuyil's Song

Refrain: love, love, love,
if love leave,
when love goes
death, death, death.

1.

grace, good light,
if light leave,
when grace goes;
black, black, black. (love, love, love...)

2.

bliss, bliss, bliss.
if you see
an end to bliss;
pain, pain pain. (love, love, love...)

3.

music, music, music.
if music
perish;
ruin, ruin, ruin. (love, love, love...)

4.

rhythm, rhythm, rhythm.
if rhythm
stop short;
futile, futile, futile. (love, love, love...)

5.

song, song, song.
were song
sung flat;

5.

பண்ணே, பண்ணே, பண்ணே;
பண்ணிற் கேயோர் பழுதுண் டாயின்.
மண்ணே, மண்ணே, மண்ணே. (காதல்)

6.

புகழே, புகழே, புகழே;
புகழுக் கேயோர் புரையுண் டாயின்,
இகழே, இகழே, இகழே. (காதல்)

7.

உறுதி, உறுதி, உறுதி;
உறுதிக் கேயோர் உடைவுண் டாயின்,
இறுதி, இறுதி, இறுதி. (காதல்)

8.

கூடல், கூடல், கூடல்
கூடிப் பின்னே குமரன் போயின்,
வாடல், வாடல், வாடல். (காதல்)

9.

குழலே, குழலே, குழலே;
குழலிற் கீறல் கூடுங்காலை,
விழலே, விழலே, விழலே. (காதல்)

mud, mud, mud. (love, love, love...)

6.

honour, honour, honour.
if honour
turn hollow;
scorn, scorn, scorn. (love, love, love...)

7.

strength, strength, strength.
if strength
snap;
the end, the end, the end. (love, love, love...)

8.

sex, sex, sex.
if your
man leave;
dry, dry, dry. (love, love, love...)

9.

flute, flute, flute.
if flute
split;
junk, junk, junk. (love, love, love...)

3. குயிலின் காதற் கதை

மோகனப் பாட்டு முடிவுபெறப் பாரெங்கும்
ஏக மவுன மியன்றதுகாண்; மற்றதிலோர்
இன்ப வெறியுந் துயரும் இணைந்தனவால்.
பின்புநான் பார்க்கப் பெடைக்குயிலஃ தொன்றல்லால்
மற்றைப் பறவை மறைந்தெங்கோ போகவுமிவ்

ஒற்றைக் குயில் சோக முற்றுத் தலைகுனிந்து
வாடுவது கண்டேன். மரத்தருகே போய்நின்று,
''பேடே! திரவியமே! பேரின்பப் பாட்டுடையாய்!
ஏழுலகம் இன்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்!
பீழையுனக் கெய்தியதென்? பேசாய்!'' எனக் கேட்டேன்.

மாயக் குயிலதுதான் மானுடவர் பேச்சினிலோர்
மாயச்சொல் கூற மனந் தீயுற நின்றேன்.
''காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லை யெனில்
சாதலை வேண்டிக் தகிக்கின்றேன்'' என்றதுவால்,
''வானத்துப் புள்ளெல்லாம் மையலுறப் பாடுகிறாய்.

ஞானத்திற் புட்களிலும் நன்கு சிறந்துள்ளாய்,
காதலர்நீ யெய்துகிலாக் காரணந்தான் யா'' தென்றேன்.
வேதனையும் நாணும் மிகுந்த குரலினிலே
கானக் குயிலிக் கதைசொல்ல லாயிற்று:-
''மானக் குலைவும் வருத்தமுநான் பார்க்காமல்,

உண்மை முழுதும் உரைத்திடுவேன் மேற்குலத்தீர்!
பெண்மைக் கிரங்கிப் பிழைபொறுத்தல் கேட்கின்றேன்
அறிவும் வடிவுங் குறுகி, அவனியிலே
சிறியதொரு புள்ளாய்ச் சிறியேன் பிறந்திடினும்,
தேவர் கருணையிலோ தெய்வச் சினத்தாலோ

3. The Kuyil's Story of Love

Her song stopped, and
the whole earth seemed cast
in a single silence.
A rush of joy
and a pain
were tied up
together. And when I looked
around I saw that all the birds
had disappeared, off somewhere.
There was only that
kuyil left. Her head
was bowed and she
looked miserable; she looked
wilted.

I went to her tree,
and I spoke;
        "O my treasure,"
said I,
        "You have sung the song
        of the Great Bliss!
        You light the Fires of Bliss
        in all seven worlds!
        This pain that has come to you-
        What is it? Tell me!"
I asked.

And that magic bird spoke
a magic word in

யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன்;
மானுடவர் நெஞ்ச வழக்கெல்லாந் தேர்ந்திட்டேன்:
கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்,
ஆற்று நீரோசை அருவி யொலியினிலும்,

நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்,
மானுடப் பெண்கள் வளமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
கண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,

வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.
நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்

பாவிமனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னையோ?
நெஞ்சத்தே தைக்க நெடுநோக்கு நோக்கிடுவீர்.
மஞ்சரே, என்றன் மனநிகழ்ச்சி காணீரோ?
காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்,
சாதலைத் வேண்டித் தவிக்கின்றேன்'' என்றதுவே.

the speech of men,
and my heart
caught fire.
She answered me:
"I want love, and I am
falling to pieces. If there is
none, I want death,
and I crave it."
I asked her,
"How can it be
that you have no lover!
when your singing bewitches
all the birds
of the sky; when
in wisdom, you
are so Magnificent?"
And in a voice full
of pain, and bashful,
the forest kuyil
came to tell her story:

"O high-born one,
I will tell you the whole
truth. It will degrade me
in your eyes, and it will
hurt, but I don't care.
I beg you to pity me,
a girl, and
to be patient
with my shortcomings
I know I was born
a bird on this earth,
and that I am short
in intelligence and size;

சின்னக் குயிலிதனைச் செப்பியவப் போழ்தினிலே,
என்னைப் புதியதோர் இன்பச் சுரங்கவர,
உள்ளத் திடையும் உயிரிடையும் ஆங்கந்தப்
பிள்ளைக் குயிலினதோர் பேச்சன்றி வேறற்றேன்;
''காதலோ காதலினிக் காதல் கிடைத்திலதேல்

சாதலோ சாதல்'' எனச் சாற்றுமொரு பல்லவியென்
உள்ளமாம் வீணைதனில், உள்ளவீ டத்தனையும்
விள்ள ஒலிப்பதால் வேறொர் ஒலியில்லை.
சித்தம் மயங்கித் திகைப்பொடுநான் நின்றிடவும்,
அத்தருணத் தேபறவை யத்தனையுந் தாந்திரும்பிச்

சோலைக் கிளையிலெலாந் தோன்றி யொலித்தனவால்,
நீலக் குயிலும் நெடிதுயிர்த்தாங் கிஃதுரைக்கும்,
'காதல் வழிதான் கரடுமுர டாமென்பார்;
சோதித் திருவிழியீர்! துன்பக் கடலினிலே
நல்லுதுறுதி கொண்டதோர் நாவாய்போல் வந்திட்டீர்;

அல்லலற நும்மோ டளவாளாய் நான்பெறுமிவ்
வின்பத் தினுக்கும் இடையூறு மூண்டதுவே;
அன்பொடு நீரிங்கே அடுத்தநான் காநாளில்
வந்தருளல் வேண்டும், மறவாதீர், மேற்குலத்தீர்!
சிந்தை பறிகொண்டு செல்கின்றீர் வாரீரேல்,

ஆவி தரியேன், அறிந்திடுவீர், நான் காநாள்.
பாவியந்த நான்குநாள் பத்துயுகமாகக் கழிப்பேன்,
சென்று வருவீர், என்சிந்தை கொடுபோகின்றீர்,
சென்று வருவீர்'' எனத் தேறாப் பெருந்துயரங்
கொண்டு சிறுகுயிருங் கூறி மறைந்ததுகாண்.

yet somhow by God's grace
-or thorugh His anger!-
I am able to understand
anyone's language.
I have looked into all
the habits of the human
heart. And
in the sounds of birds singing,
in the music
the wind plays
in trees,
in the sound
of river water, and
in the waterfall,
in the music
the great sea sings
with its forever waves,
in the honey-ocean
that pours out in love songs-
songs that
melt flesh -
burgeoning
in human girls,
in the music
of the water-lifter,
in the janglings of anklets
when women
pound rice,
in the delicious songs
of lime-powder pounders,

in all the songs
the farm girls sing,
in the sweet songs
girls sing while they dance
and clap, and bangles jingle,
and in song well performed
by men
in nations and jungles
with their mouths and hands
on flutes, veenas,
and all human instruments,
I lost
my heart.
Poor me.
And Oh! I try
to speak words
which make me tremble -
but my sinful mind snaps.

You pierce me
with your long stare.

Oh, man! Don't you see
what is happenning
in my heart?
I am dissolving;
I want love.
If none, I thirst;
I want death."

She stopped, and a new,
sweet fever covered

my heart and soul.
There no longer existed
anything
but that one refrain
of the child-bird:
“Love! Oh, if there be
no love, then
death! oh, death!”
That air of hers
played on the lute
of my heart, and
there was no other
sound.
As I stood there,
dazzled and swimming
in my mind,
birds appeared
again, on all the branches,
and chirped.
The little blue kuyil
heaved a sigh
and said,

“They say the way of love
is all knots and stumps.
But oh, you! You with

your bright, holy eyes!
You have come
as a boat with a promise
in an ocean of suffering!
But now, again;
even in this
joy I have
with you now, with you
who have felt my sadness,
we have hit a knot.

Four days from now,
come back here,
please, oh please
come in your love!
Don't forget!
Oh, high-born my heart
with you. If you don't
come, I will lose
my soul. Remember;
the fourth day. Oh, these four
days will be like ten aeons!
Go, and come then; you
are leaving with my heart!
Come back then."

As she spoke, her pain
was unbearable; then
she disappeared.

4. காதலோ காதல்!

கண்டதொரு காட்சி கனவுநன வென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபதுபேய் கொண்டவன்போல்
கண்ணும் முகமும் களியேறிக் காமனார்
அம்பு நுனிகள் அகத்தே அமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடிபல கோடியாய்

ஒன்றே யாதுவாய் உலகமெலாந் தோற்றமுற
சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி,
நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறுபடுமோ? யார் படுவார்?
நாளொன்று போயினது; நானு மெனதுயிரும்,

நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்,
சாயைபோ லிந்திரமா சாலம்போல் வையமுமா
மிஞ்சி நின்றோம். ஆங்கு மறுநாள் விடிந்தவுடன்,
(வஞ்சனை நான் கூறவில்லை) மன்மதனார் விந்தையால்,

புத்திமனஞ் சித்தம் புலனொன் றறியாமல்,
வித்தைசெயுஞ் சூத்திரத்தின் மேவுமொரு பொம்மை யென
காலிரண்டுங் கொண்டு கடுகவுநான் சோலையிலே
நீலிதனைக் காண வந்தேன், நீண்ட வழியினிலே
நின்றபொருள் கண்ட நினைவில்லை. சோலையிடைச்

சென்றுநான் பார்க்கையிலே, செஞ்ஞாயிற் றொண்கதிரால்
பச்சைமர மெல்லாம் பளபளென என்னுளத்தின்
இச்சை யுணர்ந்தனபோல் ஈண்டும் பறவையெல்லாம்
வேறெங்கோ போயிருப்ப வெம்மைக் கொடுங்காதல்
மீறலெனைத் தான்புரிந்த விந்தைச் சிறுகுயிலைக்

காணநான் வேண்டிக் கரைகடந்த வேட்கையுடன்
கோணமெலாஞ் சுற்றிமரக் கொம்பையெலாம் நோக்கி வந்தேன்.

4. Lovesick

I don't know if
it was a dream,
what I have seen,
or if it was true.
I don't even care.
I walked home,
not thinking; I was like
a man possessed
by twenty devils;
my eyes and face
were flushed,
and the points
of kama's arrows
sunk in my soul.
The world seemed
to be millions and
millions of forms
of that bird
on that branch.
As that day passed,
was there a rhythm
to all the situations
I was in? Were they
woven together? who
experienced them?
That day passed.
I and my soul, we
stood, with the blue
statue. Kama and the magic
blue kuyil with her
great, magic, sweet song,

escaped us;
like a shadow,
like a magician's trick,
the whole world
escaped us.
As soon as dawn broke
the next morning,
I hurried out
without my senses,
without my judgement,
descernment, mind -
thorugh Kama's magic -
like a marionette
on two legs:
I hurried
to the grove
to see the blue one.
I saw, but understood
nothing of the objects
along the way.
When I got to the grove,
all the green trees gleamed
in the red sun's clear rays.
And all the birds
had gone off somewhere
else, as though they knew
the desire in my heart.
I came with harsh desire,
overloaded with love,
to find the little kuyil
who had worked on me;
and I looked,
I looked in all the nooks
and all the branches
of all the trees.

5. குயிலும் குரங்கும்

மற்றைநாட் கண்ட மரத்தே குயிலில்லை,
சுற்றுமுற்றும் பார்த்தும் துடித்து வருகையிலே -
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனாம் பொய்த்தேவே!
நெஞ்சகமே! தொல்விதியின் நீதியே! பாழுலகே!
கண்ணாலே நான்கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்!

பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதலைப் போற்றுங் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையின் வீற்றிருந்தே
பாயும் விழி நீர் பதைக்குஞ் சிறியபுடல்

விம்மிப் பரிந்து சொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்.
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையுங் குரங்கினையும்

சிந்தக் கருதி உடைவாளிற் கைசேர்த்தேன்,
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்,
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறாருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே,

பேடைக் குயிலிதனைப் பேசியது: - ''வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே,

5. The Kuyil and the Monkey

There was no kuyil
in the tree
where i had seen her
the day before.
Then! :
I came closer,
and I saw...
I shook:
Liar! Woman!
Kama, you lying
god! Oh, heart!
Oh, justice of the ancient
laws! Oh, empty
earth.
How can I write
what I saw
with my own eyes?
Listen to me,
all you idiots,
whose judgement
has rotted
because of a
woman -
Listen to me,
all you
poets,
who praise
love -
Listen to me,
all you women -
and you listen
to me,

எண்ணிநின்றார் தம்மை; எனிலொருகால் ஊர்வகுத்தல்,
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்ற சில
வாயிலிலே, அந்த மனிதர் உயர்வெனலாம்.
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே,

வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிக ராவாரோ?
ஆன வரையும் அவர் முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப்படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்

ஆசை முகத்தினைப் போல லாக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குதிக்கும் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும் வேகமுறப் பாய்வதிலே

வானரர்போ லாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு கந்தைபோல்;
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?

சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும் -
வானரர் போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?
வானரர் தம்முள்ளே மணிபோல் உமையடைந்தேன்,
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்,
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினால்

தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்தி கொண்டேன்; தம்மிடத்தே
ஆவலினாற் பாடுகின்றேன். ஆரியரே கேட்டருள்வீர்!''
(வானரப் பேச்சினிலே மைக்குயிலி பேசியதை
யானறிந்து கொண்டுவிட்டேன், யாதோ ஒரு திறத்தால்)

Fate:
That cheating bird
was sitting on one
branch of a
tree, sobbing,
the tears just
flowing out
of her eyes,
and her little body
shook with
the sobs.

Her mouth spoke hot,
suffering words:
Oh, no! I saw her
there, She was saying
something
to another male
- a monkey! -
on another branch.
And she wept.

What is evil?
What is good?
What is clear action?

In that instant
I wanted to kill
both her and that monkey;
and my hand
reached the dagger
at my side.

காதல், காதல் காதல்;
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.
முதலியன (குயிலின் பாட்டு)
நீசக்குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்

ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே: -
காட்டின் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும்,
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்.
வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறிகொண் டாங்ஙனே

தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்
''ஆவி யுருகுதடி, ஆஹா ஹா'' என்பதுவும்,
கண்ணைச் சிமிட்டுவதும், காலாலுங் கையாலும்
மண்ணைப் பிறாண்டியெங்கும் வாரியிறைப்பதுவும்
''ஆசைக் குயிலே! அரும் பொருளே! தெய்வதமே!

பேச முடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்,
காதலில்லை யானாற் கணத்திலே சாதலென்றாய்;
காதலினாற் சாகுங் கதியினிலே தன்னை வைத்தாய்,
எப்பொழுதும் நின்னை இனிப்பிரிவ தாற்றுகிலேன்,
இப்போதே நின்னை முத்தமிட்டுக் களியுறுவேன்''

என்றுபல பேசுவதும் என்னுயிரைப் புண்செயவே,
கொன்றுவிட எண்ணிக் குரங்கின்மேல் வீசினேன்
கைவாளை யாங்கே! கனவோ? நனவுகொலோ?
தெய்வ வலியோ? சிறு குரங்கென் வாளுக்குத்
தப்பி முகஞ்சுளித்துத் தாவி யொளித்திடவும்,

The story of Love which the kuyil Related to the Money

But my heart stayed
my hand;
it wanted me to hear
what words that bird spoke,
before I killed them.
So I stepped behind
a great tree,
Where I couldn't be caught
by their eyes,
yet where I could hear.
And the little kuyil said:
"Oh, sir monkey!
Oh, your body is so
beautiful that I know
nothing to compare it to!
Oh, you are master of the
feminine, whatever species
we are born into!
Could your beauty
ever be frustrated?
Your presence commands
passions.
Man boasts himself
head of all earthly life,
and so be it in certain ways-
town planning, temple administration,
domestic government and such like!
but will man meet monkey
in physical beauty,
in the spoken word, or
in crouching?

ஒப்பிலா மாயத் தொருகுயிலுந் தான்மறைய,
சோலைப் பறவை தொகைதொகையாத் தாமொலிக்க,
மேலைச் செயலறியா வெள்ளறிவிற் பேதையேன்
தட்டுத் தடுமாறிச் சார்பனைத்துந் தேடியுமே,
குட்டிப் பிசாசக் குயிலையெங்கும் காணவில்லை.

Until he does,
even though he wear
eight kinds of clothing
to cover his body - that
body without your
silky fur -
even though he trim
his beard and moustache
to imitate the lusty face
of the monkey;
even though he gather together,
and drink, and dance,
and try to approach your
dancing and leaping;
even though, he climb
ladders (he can't
climb temples);
whatever he may try
in fast jumping will be ever
be like the monkey?
no matter how hard he tries?
And where will he go
for a tail? Will the tucked - in fold
of his wretched dhoti do?
Some turbans have tails;
but will they lift him up
and set him flying
when he jumps, the way
the sacred tail God gave you
does?
In this world of earth
there is but one lineage
like that of the monkey,
with his holy look

and pure vegetarian diet.
And I met you, you
jewel of a monkey,
even though I came to birth
as a beggar bird.
It must be through penances
I pursued in past lives
that I have the honour
of your love.
I sing out of desire
for you. O Noble One!
Listen! and accept me."
I must have had some special
power, as I understood
what that magic kuyil
said in the language of the monkey.
And that revolting bird sang,
a taste of fire in her voice,
seething with desire, and
of ambrosia:

The Song of the Kuyil

Love, love, love,
if love leave,
when love goes:
death, death, death.
etc., etc.
They say wild animals,
the babe in hand,
and even snakes
are charmed
by the sweetness of song;
and that dried-up old monkey
lost his mind - as though

he were drunk crazy.
he hopped and skipped,
beat out rhythms; he hollered:
"Oh, my soul is melting!
Oooh, aah, eeeh, hee!"
blinked his eyes,
and scratched up dirt
with both his hands, and both feet,
and threw it everywhere.
"You luscious kuyil!
Precious gem! My goddess!
I'm in love.
You said you wanted
death in a minute
if you could not have love.
But me! You have me dying
through love! I can never
leave you now, And now
I'm going to kiss you
in bliss!"
The monkey said all sorts of things
like that, and it hurt
my soul, I wanted to kill him.
I threw my dagger
at that monkey!
Was I dreaming? or was
it real? or was it
a divine monkey?
My sword missed
that little monkey;
he jumped, his face
was furious, and he hid.
And the incomparable
magic kuyil, too,.

disappeared. And then the birds
started up again, group
after group, and I stood there,
a fool, and I did not know
what to do. I was dismayed
and frustrated, and I looked everywhere
she might have gone. But I could not find
that devil kuyil.

6. இருளும் ஒளியும்

வான நடுவிலே மாட்சியுற ஞாயிறுதான்
மோனவொளி சூழ்ந்திடவும் மொய்ம்பிற் கொலுவிருந்தான்,
மெய்யெல்லாஞ் சோர்வு விழியில் மயக்கமுற,
உய்யும் வழியுணரா துள்ளம் பதைபதைக்க,
நாணுந் துயரும் நலிவுறுத்த நான்மீண்டு

பேணும்மனை வந்தேன்; பிரக்கினைபோய் வீழ்ந்துவிட்டேன்,
மாலையிலே மூர்ச்சைநிலை மாறித் தெளிவடைந்தேன்;
நாலுபுறமுமெனை நண்பர் வந்து சூழ்ந்துநின்றார்.
''ஏனடா மூர்ச்சையுற்றாய்? எங்கு சென்றாய்? ஏது செய்தாய்?
வானம் வெளிறுமுன்னே வைகறையி லேதனித்துச்

சென்றனை என்கின்றாரச் செய்தி என்னே? ஊணின்றி
நின்றதென்னே?'' என்று நெரித்துவிட்டார் கேள்விகளை,
இன்னார்க் கிதுசொல்வ தென்று தெரியாமல்,
''என்னாற் பலவுரைத்தல் இப்பொழுது கூடாதாம்.
நாளை வருவீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன் இவ்

வேளை எனைத்தனியே விட்டகல்வீர்'' என்றுரைத்தேன்.
நண்பரெல்லாஞ் சென்றுவிட்டார்; நைந்துநின்ற தாயார்தாம்
உண்பதற்குப் பண்டம் உதவிநல்ல பால்கொணர்ந்தார்,
சற்று விடாய்தீர்ந்து தனியே படுத்திருந்தேன்;
முற்றும் மறந்து முழுத்துயிலில் ஆழ்ந்து விட்டேன்.

பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும்,
மண்டு துயரெனது மார்பை யெலாங் கவ்வுவதே!
ஓடித் தவறி உடையனவாம் சொற்களெலாம்,
கூடி மதியிற் குவிந்திடுமாம் செய்தியெலாம்,
நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்

6. Darkness and Light

In the middle of the sky,
sending out his silent light,
the sun
was doing his service
in splendour and in strength.
And i was tired
all through my body, my eyes
blurred, and I knew
no way out. So again I went home.
I fainted
when I got home.
It was evening
when I came to,
and my friends were there,
standing all around me.
“Why did you
faint? Where
did you faint?
What did
you do? We heard
that you went off
alone to the woods
this morning before
dawn, before your
bath: what’s
going on? What’s this
going without food
all about?...”

They cracked question
after question;
but i didn’t know what

பேசு மிடைப் பொருளின் பின்னே மதிபோக்கிக்
கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதைவளர்க்கும்
விற்பனர்தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்,
மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்,
காரைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்.

தங்க முருக்கித் தழல் கறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?
கண்ணையினி தென்றுரைப்பார்; கண்ணுக்குக் கண்ணாகி

விண்ணை அளக்குமொளி மேம்படுமோர் இன்பமன்றோ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும்
மேலவரும் அஃதோர் விரியுமொளி என்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப் புளதோ?
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி

மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயுஞ் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்.
நாலு புறத்துமுயிர் நாதங்க ளோங்கிடவும்,
இன்பக் களியில் இயங்கும் புவிகண்டேன்.

துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ!

to say to whom.
So I said, “I can’t seem
to say much right now.
Come back tomorrow,
and I’ll tell you everything
that happened. But
Just leave me alone
for now.” And they all
left.
My injured mother brought me
milk and cake; I
devoured them,
and plummeted
into total sleep,
Even now as I sing
what happened back then,
a pressing pain grows
in my heart. Words run,
fail, and splinter;
and events clutter into
my brain. I am not one
who knows how to stop
a ruinous story in the middle,
and send my intellect off
at a tangent, to
demonstrate a detail
with subtle proofs and
intuition; I am not
of the learned ones
who can make a story
flourish and grow,
My mind is bashful;
it trembles even to tell

my story.
So I shall sing instead
in imagination
on the beauty
of the morning sun;

Melting gold, it lessened
the fire, and made honey -
did it not spread everywhere
a bliss? People sing
and praise the wonder of light
plundering the expanse of sky
and turning into sun-fire
all over; but do they find
a smile?
Is it not a bliss
that, while eyesight
is sweet, the eye of eyes,
the light which measures
the heavens, is higher still?
The Great Ones who mediate silently
on the Root of all Being
say it is a swelling light;
how can anything on earth
compare to that Good Light?

I woke up the next morning
and opened my eyes;
I worshipped
the astonishing Light
that makes grassblades laugh,
that turns a flower
into a surprise,
that cleans the earth,
that gives water its width,

that clears out the sky.
Soon sounds of living rose up
on all four sides, and
I saw the moving world
in a blaze of joy.

Now I will tell you the rest
of my painful story.
Listen...

7. குயிலும் மாடும்

காலைத் துயிலெழுந்து, காலிரண்டு முன்போலே
சோலைக் கிழுத்திட, நான் சொந்தவுணர் வில்லாமே
சோலையினில் வந்துநின்று, சுற்றுமுற்றுந் தேடினேன்.
கோலப் பறவைகளின் கூட்டமெலாங் காணவில்லை.
மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளியினிலே

நீலக் குயிலிருந்து நீண்ட கதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கிழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,
கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன்; நெஞ்சிலனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன், மெய்வெயர்த்தேன்;

கொல்லவாள் வீசல் குறித்தேன். இப் பொய்ப்பறவை
சொல்லுமொழி கேட்டதன்பின் 'கொல்லுதலே சூழ்ச்சி' யென
முன்போல் மறைந்துநின்றேன்; மோகப் பழங்கதையைப்
பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளும்
கொண்டு, குயிலாங்கே கூறுவதாம். 'நந்தியே!

பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே! மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ ?
மானுடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர் தமை
மேனுயுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.

காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர் ஆரியரே!
நீள முகமும், நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சுப் புறச்சுமையும், வீரத் திருவாலும்,
வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்,

7. The Kuyil and the Bull

I got out of bed, and
again my legs pulled me
to the mango grove. And
again I looked everywhere.
(I no longer had
my own good sense.)
I saw non of the clusters
of beautiful birds.
But then
I saw her,
the blue kuyil,
in a corner
of the grove.
She was telling her long story
to a decrepit
old bull.
The bull stood below her
and listened, all
rapt attention
and desire.
I got mad.
I got upset.
I got a fire
in my heart.
I was furious;
I roared;
my body
burned;
I imagined myself
throwing my dagger

ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
பார வடிவும் பயிலு முடல்வலியும்
தீர நடையும் சிறப்புமே இல்லாத

சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.
அல்லும் பகலுநிதம் அற்ப வயிற்றினுக்கே
காடெல்லாஞ் சுற்றிவந்து காற்றிலே எற்றுண்டு,
மூட மனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்,
சின்னக் குயிலின் சிறுகுலத்தி லேதோன்றி

என்னபயன் பெற்றேன்? என்னைப் போலோர் பாவியுண்டோ ?
சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன் வயிற்றில்
போற்றுமொளி, முத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?
நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே

சாதிப் பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை,
மூடமதியாலோ, முன்னைத் தவத்தாலோ,
ஆடவர்தம் முள்ளே அடியாளுமைத் தெரிந்தேன்.
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்

கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர் மேனிவிடாய்
எய்தி யிருக்க மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்;
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்,

again to kill.
But I hid
and stood as before:
it would be most fitting
to kill
after I had heard
what words
this cheating bird
would say.
And the kuyil told it
all over again, the
old lust story,
with a voice like gold
and words like new;
“Oh Nandi! Oh, you are
a magnet to the
iron mind of a woman,
Oh, Kama! Oh God
in the shape of a bull!
Is there anything on earth
as beautiful as a bull?
Even humans praise
their strong men
by comparing them to
bulls.
And you! you have
the greatest
dignity
of all bulls!
Oh, Noble one!
Many times have I watched
Your great long face,
Your erect horns,
your gigantic, sacred body,

வாலிலடி பட்டு மனமகிழ்வேன், ’மா’ வென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்,
மேனியுளே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்,
கானிடையே சுற்றிக் கழனியெலாம் மேய்ந்து, நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்

பக்கத்திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்,
காளை யெருதரே! காட்டிலுயர் வீரரே!
தாளைச் சரணடைந்தேன். தையலெனைக் காத்தருள்வீர்.
காதலுற்று வாடுகின்றேன். காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை என்றறிவேன்.

ஆனாலும் என்போல் அபூர்வமாங் காதல் கொண்டால்,
தானா வுரைத்தலின்றிச் சாரும் வழியுளதோ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்,
இத்தரையில் மேலோர்முன் ஏழையர்க்கு நாணமுண்டோ?
தேவர் முன்னே அன்புரைக்க சிந்தை வெட்கங் கொள்வ துண்டோ?

காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார்?
ஆசைதான் வெட்கம் அறியுமோ?’’ என்றுபல
நேசவுரை கூறி நெடிதுயிர்த்துப் பொய்க்குயிலி
பண்டுபோ லேதனது பாழடைந்த பொய்ப்பாட்டை
எண்டிசையும் இன்பக் களியேறப் பாடியதே;

காதல், காதல், காதல்;
காதல் போயிற் காதல் போயிற்,
சாதல், சாதல், சாதல்
முதலியன (குயிலின் பாட்டு)

பாட்டு முடியும்வரை பாரறியேன், விண்ணறியேன்;
கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்ற காவறியேன்!
தன்னை யறியேன்; தனைப்போல் எருதறியேன்;
பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரும் இன்பமொன்றே
கண்டேன், படைப்புக் கடவுளே! நான் முகனே!

your extra hump,
your holy, valorous tail,
your bellowing “MAA”
like thunder in the sky,
and the precision of your flexing
your tail and obliterating
any small bird who happens
to alight on your back;
and I have come
to a harsh passion.
I was born as a pebble-drop bird.
no big body, no physical strength,
no gallant carriage, no importance
at all.
What good is my low birth
in the mean family of kuyils -
kuyils who end up as food in
the stinking stomachs
of foolish men?
and I have to fight the wind
all night and day to feed
my own stupid stomach.
Is there a sinner
like me?
Everyone has heard of the lotus
in the mud, haven’t they?
or of the pearl
in a putrid oyster?
Can one foil desire blossoming
in the heart of one born low?
Does Kama admit the mountains
of birth or of caste? It’s no use
expanding, or going on talking.
May be it’s because of my poor sense,

பண்டே யுலகு படைத்தனைநீ என்கின்றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டி வைத்தாய்
நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்.
காற்றைமுன்னே ஊதினாய் காணரிய வானவெளி
தோற்றுவித்தாய், நின்றன், தொழில்வலிமை யாரறிவார்?

உள்ளந்தான் கவ்வ ஒருசிறிதுங் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள் போல் வானத்தில் அண்டங்கள்
எட்ட நிரப்பியவை எப்போதும் ஓட்டுகின்றாய்;
எல்லா மசைவில் இருப்பதற்கே சக்திகளைப்

பொல்லாப் பிரமா, புகுத்திவிட்டாய் அம்மாவோ!
காலம் படைத்தாய் கடப்பதிலாத் திக்கமைத்தாய்;
ஞாலம் பலவினிலும் நாடோ றுந் தாம்பிறந்து
தோன்றி மறையும் தொடர்பாப் பல அனந்தம்!
சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய், நான்முகனே!

சால மிகப்பெரிய சாதனைகாண் இஃதெல்லாம்!
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார் யார்?
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானா முதம்படைத்த காட்சிமிக விந்தையடா!
காட்டுநெடு வானம், கடலெல்லாம் விந்தையெனில்,

பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் நேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே,
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!

or may be it's because of past penance,
but of all the males in the world,
this slave-girl chose you.
Listen: after you, a god!
help those devils of men
raise rice for their stomachs,
and after you carry their
hunchbacks
through their towns,
rest your body:
poor little me will come
and I will sing
the sweetest songs
in your honey-ear.
And I will rejoice when
I am rapped
by your tail!
I will shout along
with you, "MAA"!
I will kill ticks
so they won't squirm
on your back.
And when you are done grazing
in all the fields and woods,
and you're chewing your cud,
I'll tell you lots
of stories.
Yound bull!
The greatest warrior
in the field!
I take refuge
at your feet.
Please watch over
me, a woman.
I am withering,

செத்தைக் குயில்புரிந்த தெய்விகத்தீம் பாட்டெனுமோர்
வித்தை முடிந்தவுடன், மீட்டுமறி வெய்திநான்
கையினில் வாயெடுத்துக் காளையின் மேல் வீசினேன்.
மெய்யிற் படுமுன் விரைந்துததுதான் ஓடிவிட,
வன்னக் குயில்மறைய மற்றைப் பறவையெலாம்

முன்னைப்போற் கொம்பு முனைகளிலே வந்தொலிக்க,
நாணமில்லாக் காதல்கொண்ட நானுஞ் சிறுகுயிலை
வீணிலே தேடியபின், வீடுவந்து சேர்ந்துவிட்டேன்.

* * *

எண்ணியெண்ணிப் பார்த்தேன் எதுவும் விளங்கவில்லை.
கண்ணிலே நீர்ததும்பக் கானக் குயிலெனக்கே

காதற் கதையுரைத்து நெஞ்சங் கதைத்ததையும்,
பேதைநா ளங்கு பெரியமயல் கொண்டதையும்,
இன்பக் கதையின் இடையே தடையாகப்
புன்பறவை யெல்லாம் புகுந்த வியப்பினையும்
ஒன்றைப் பொருள்செய்யா உள்ளத்தைக் காமவனல்

தின்றெனது சித்தம் திகைப்புறவே செய்ததையும்,
சொற்றைக் குரங்கும் தொழுமாடும் வந்தெனக்கு
முற்றும் வயிரிகளா மூண்ட கொடுமையையும்,
இத்தனைகோ லத்தினுக்கு யான்வேட்கை தீராமல்,
பித்தம் பிடித்த பெரிய கொடுமையையும்

எண்ணியெண்ணிப் பார்த்தேன். எதுவும் விளங்கவில்லை;
கண்ணிரண்டும் மூடக் கடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டேன்.

struck by love.
I know it's unusual
for the woman to declare
her love first... but, when
I have in me so uncommon
a love, how could I reach you
without telling you
myself?

There is a certain modesty
among equals; but
is a poor man modest
before the high ones
on this earth?
shall my heart feel shy
to declare its love
far its Lord? Won't slaves disclose
their wants to their masters?
Desire knows
no shame!"

Thus spoke
that cheating woman
kuyil, and she heaved
a great sigh.
Then she sang
as before:
she sang out
her false song,
the one that had
ruined me,
and all the Eight
Directions felt
the swoon of bliss:

The Song of the Kuyil

Love, love, love,
if love leave,
when love goes;
death, death, death.
Etc., etc.

Until the song stopped
I knew no earth,
I knew no sky,
I knew no grove of great trees,
I did not know myself, and
like myself, I did not know
the bull:
I knew only the golden voice
and a glowing bliss.
O God of Creation!
O Four-Faced Lord!
You it was, they say,
who created the Earth
way back then.
You made the waters
and you made the land;
you cooled the waters
in the ancient fires;
you blew the wind,
and brought out the sky,
the space difficult to see!
Who understands the fineness
of your work?
You drive worlds forever
like a million

juggling - balls, and
our hearts cannot comprehend
it all, not at all.
O sly Brahma you have
Forced the powers in such a way
That they stand hidden,
You created
time; and you made
the untranscendable Directions,
and all the infinite chains
of birth, appearing,
and disappearing
in all the worlds.
You fashioned all
our lives,
O Four-Faced One!
Look at all this,
this conjurer's feat!
Who is there alive
on Earth, able to
explain it all?
Yet
Of all your wonders
the most wonderful of all
is your creation of
the nectar of
music.
The woods, the great sky,
the ocean and all
are wonderful,
yet still
there is no wonder on earth
like a song.
Harmonizing the five elements
into a new creation

is a marvel;
but can it approach the bliss
of harmonizing sounds?
When I consider
the millions of marvels
that bring forth desires,
the joy of music
allows no simile.
But then the magic
ended, that magic
of the divinely sweet song
the worthless bird had sung,
and I came to.
I grabbed my dagger
and threw it
at the bull.
But he lumbered away just
before it could sink
into his body. And
the beautiful kuyil
disappeared.
And as before,
all the other birds
came back
and sounded off
on the branches.
And I, shameless
and in love,
searched the sky
for the little kuyil,.
And then I went home.
I pondered,
and I pondered, and
nothing made sense;

A wild kuyil telling me
her love-story, with tear-
drops in her eyes,
and dissolving my heart;
my falling in love
with a bird!
And those stupid little birds
breaking up her story of joy!
Her causing the fire of love
to eat out my heart,
my heart, that nothing
can touch! Her confusing
me; the smouldering cruelty
of the mad monkey and
the barnyard bull becoming
my utter enemies.
And still I pondered,
I pondered this immense
cruelty, this cruelty
caught in insanity;
and my desire
did not end.
Nothing made sense.
My eyes closed,
and I sank into deep sleep.

8. நான்காம் நாள்

நான் காம்நாள் என்னை நயவஞ் சனைபுரிந்து
வான்காதல் காட்டி மயக்கிச் சதிசெய்த
பொய்ம்மைக் குயிலென்னைப் போந்திடவே கூறியநாள்
மெய்ம்மை யறிவிழந்தேன். வீட்டிலே மாடமிசை
சித்தத் திகைப்புற்றோர் செய்கை யறியாமல்,

எத்துக் குயிலென்னை எய்துவித்த தாழ்ச் சியெலாம்
மீட்டும் நினைத்தங்கு வீற்றிருக்கும் போழ்தினிலே,
காட்டுத் திசையினிலென் கண்ணிரண்டும் நாடியவால்,
வானத்தே ஆங்கோர் கரும்பறவை வந்திடவும்
யானதனைக் கண்டே, 'இது நமது பொய்க்குயிலோ?'

என்று திகைத்தேன்; 'இருந்தொலைக்கே நின்றதனால்
நன்று வடிவம் துலங்கவில்லை; நாடுமனம்
ஆங்கதனை விட்டுப் பிரிவதற்கு மாக வில்லை.
ஓங்குந் திகைப்பில் உயர்மாடம் விட்டுநான்
வீதியிலே வந்துநின்றேன். மேற்றிசையில் அவ்வுருவம்

சோதிக் கடலிலே தோன்றுகரும் புள்ளியெனக்
காணுதலும், சற்றே கடுகி யருகே போய்,
'நாணமிலாப் பொய்க்குயிலோ', என்பதனை நன்கறிவோம்
என்ற கருத்துடனே யான்விரைந்து சென்றிடுங்கால்,
நின்ற பறவையுந்தான் நேராகப் போயினதால்.

யான் நின்றால் தான்நிற்கும் சென்றால் தான்செல்லும்;
மேனிநன்கு தோன்ற அருகினிலே மேவாது
வானி லதுதான் வழிகாட்டிச் சென்றிடவும்
யான்நிலத்தே சென்றேன் இறுதியில் முன்புநாம்
கூறியுள்ள மாஞ்சோலை தன்னைக் குறுகியந்த

8. The Fourth Day

The fourth day.
The day appointed
for my return
by that kuyil
who had trickled me,
who bewitched me
with her extraordinary
love. The fraud!
I sat on the roof-terrace
and lost my sense
of truth. I was
confused. I didn't know
anything; I thought over,
again, all the shame
that canting
had caused me.
While I sat there,
my eyes, wandered again
toward the grove
and I saw
a black
bird, there
in the sky.
it was too far away
to show up clearly,
and I wondered,
"Is this our
cheating kuyil!"
My struggling mind
was not prepared
to let it get away:

ஊரிலாப் புள்ளுமத னுள்ளே மறைந்ததுவால்,
மாஞ்சோலைக் குள்ளே மதியிலிநான் சென்றாங்கே
ஆஞ்சோதி வெள்ளம் அலையுமொரு கொம்பரின்மேல்
சின்னக் கருங்கயிலி செவ்வனே வீற்றிருந்து,
பொன்னங்குழலின் புதிய ஒளிதனிலே

பண்டைப் பொய்க்காதற் பழம்பாட்டைத் தாம்பாடிக்
கொண்டிருத்தல் கண்டேன், குமைந்தேன்; எதிரேபோய்,
'' நீசக் குயிலே, நிலையறியாப் பொய்ம்மையே,
ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்
எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை

நண்ணியிங்கு கேட்க நடத்திவந்தாய் போலுமெனை''
என்று சினம்பெருகி ஏதேதோ சொல்லுரைத்தேன்.
கொன்றுவிட நெஞ்சிற் குறித்தேன்; மறுபடியும்
நெஞ்ச மிளகி நிறுத்திவிட்டேன். ஈங்கிதற்குள்,
வஞ்சக் குயிலி மனத்தை இரும்பாக்கிக்

கண்ணிலே பொய்ந்நீர் கடகடவெனத் தானூற்றப்
பண்ணிசைபோ லின்குரலாற் பரவியது கூறிடுமால்;
'ஐயனே, என்னுயிரின் ஆசையே! ஏழையெனை
வையமிசை வைக்கத் திருவுளமோ? மற்றெனையே
கொன்றுவிடச் சித்தமோ? கூறீர், ஒருமொழியில்!

அன்றிற் சிறுபறவை ஆண்பிரிய வாழாது,
ஞாயிறுதான் வெம்மைசெயில், நாண்மலக்கு வாழ்வுளதோ?
தாயிருந்து கொன்றால் சரண்மதலைக் கொன்றுளதோ?
தேவர் சினந்துவிட்டால், சிற்றுயிர்கள் என்னாகும்?
ஆவற் பொருளே! அரசே! என் ஆரியரே!

so growing ever
more confused,
I came down off the roof
and stood in the
street. The form
was a black dot
in the ocean of light
to the west, and I
hurried after it.
I determined to know
for sure
whether or not that really was
our immodest kuyil;
so I hurried.
And so did
the bird.
When I stood still,
it stopped, and when
I started, it started.
But I never came close
enough for its body
to show up well.
I walked on the ground
with that dot in the sky alone
guiding my way.
Finally we came
to the mango grove,
and that loose bird
disappeared into it,
And stupid me! I
went into the grove.
There, on a tree branch
washed by waves of
flooding sunlight,

சிந்தையில் நீர் என்மேற் சினங்கொண்டால் மாய்ந்திடுவேன்
வெந்தழலில் வீழ்வேன், விலங்குகளின் வாய்ப்படுவேன்.
குற்றம்நீர் என்மேற்கொணர்ந்ததனை யானறிவேன்.
குற்றநுமைக் கூறுகிலேன்; குற்றமிலேன் யானம்ம!
புன்மைக் குரங்கைப் பொதிமாட்டை நான்கண்டு

மென்மையுறக் காதல் விளையாடி னேன்என்றீர்;
என்சொல்கேன்! எங்ஙனுய்வேன்! ஏதுசெய்கேன், ஐயனே!
நின்சொல் மறக்க நெறியில்லை; ஆயிடினும்
என்மேல் பிழையில்லை; யாரிதனை நம்பிடுவார்?
நின்மேல் சுமைமுழுதும் நேராகப் போட்டுவிட்டேன்.

வெவ்விதியே! நீ என்னை மேம்பாடுறச் செய்து
செவ்விதினிங் கென்னை என்றன் வேந்தனொடு சேர்த்திடினும்
அல்லாதென் வார்த்தை அவர்சிறிதும் நம்பாமே
புல்லாக எண்ணிப் புறக்கணித்துப் போய்விட, நான்
அக்கணத்தே தீயில் அழிந்துவிழ நேரிடினும்,

எக்கதிக்கும் ஆளாவேன்; என்செய்கேன்? வெவ்விதியே!

there was the little
black kuyil,
sitting nicely.
With the fresh sound
of a golden flute,
she sang the old song
of the old false love,
and I cringed.
I went up to her
and said, “You disgusting
kuyil! You ignorant lie!
So you have brought me here to listen
to you, while you dream
of your lusty monkey,
and your bull,
and sing your revolting
sonf of flesh.”
I thought of killing
her. But again
I stayed, in mercy.
The lying bird steeled
her heart, and
false tears
suddenly sprang into
her eyes. And that sinner
said, like refined music,
she said in her sweet voice,
“Lord! Desire of my soul!
Is it your holy wish
for me to live on
here on earth? Or
do you wish to kill
me? Tell me in one word!
When her mate leaves,

the little anril - bird dies.
When the sun scorches it,
can a water-lily live?
If a mother turn killer,
would ner son have any refuge?
If the gods turn angry,
what would become
of our little lives?
My desire!
My king!
My noble lord!
If you are angry
with me
in your heart,
I will
die. I will fall
into fire. I will
fall into the mouth
of a wild animal.
I know you have
found fault
with me.
I find no fault
with you.
And I
am faultless.
you will say
I softened up
and played love
when I saw
that foul monkey
and that pack-beast
bull. What
can I say?

How can I explain?
O my lord! What will
I do? There is no way
to refute your word.
And yet there is no fault
in me; but who
will believe this?
I put the whole burden
on you, O Fate!
I am ready;
whether you make
my lord love me
and respect me, or
whether he won't believe me,
thinks me foul, ignores me,
leaves me, and I fall
into fire, and die,
I am ready. What,
Harsh Fate, shall I do?"

9. குயில் தனது பூர்வ ஜன்மக் கதையுரைத்தல்

''தேவனே! என்னருமைச் செல்வமே? என்னுயிரே!
போவதன் முன்னொன்று புகல்வதனைக் கேட்டருள் வீர்!
முன்னம்ஒருநாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானும் தனியேயோர் சோலைதனில்
தாங்கிளையி லேதோ மனதிலெண்ணி வீற்றிருந்தேன்.

ஆங்குவந்தார் ஓர் முனிவர். ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன்; ஐயரெனை
ஆதரித்து வாழ்த்தி அருளினார். மற்றதன்பின்,
'வேத முனிவரே, மேதினியில் கீழ்ப்பறவைக்
சாதியிலே நான் பிறந்தேன், சாதிக் குயில்களைப்போல்

இல்லாமல், என்றன் இயற்கை பிரிவாகி,
எல்லாம் மொழியும் எனக்கு விளங்குவதேன்?
மானுடர்போல் சித்தநிலை வாயித்திருக்குஞ் செய்தியேன்?
யானுணரச் சொல்வீர்' என வணங்கிக் கேட்கையிலே,
கூறுகின்றாய் ஐயர்: 'குயிலே! கேள், முற்பிறப்பில்

வீறுடைய வெந்தொழிலார் வேடர் குலத்தலைவன்
வீர முருகனென்னும் வேடன் மகளாகச்
சேர வளநாட்டில் தென்புறத்தே ஓர்மலையில்
வந்து பிறந்து வள்ர்ந்தாய் நீ, நல்லிளமை
முந்து மழகினிலே மூன்றுதமிழ் நாட்டில்

யாரும் நினக்கோர் இணையில்லை என்றிடவே
சீருயர நின்றாய்; செழுங்கான வேடரிலுன்
மாமன் மகனொருவன் மாடனெனும் பேர்கொண்டான்,
காமன் கணைக்கிரையாய், நின்னழகைக் கண்டுருகி,
நின்னை மணக்க நெடுநாள் விரும்பி, அவன்

9. The Kuyil's Story of her Previous Birth

"My lord! O, my rare
treasure! my soul!
Before you leave me,
graciously hear me
once more:

One day long ago
I sat on a branch
in a mango grove near
the great Mount Potiyil;
I was musing over something
or other, when a holy
man appeared.
I was sure he was a great
personage, so I felt
at his feet and did obeisance.
The Master liked me,
and he blessed me,
'O holy sir,' I said,
I was born on earth
into a low caste
of birds, But why
do I understand
everyone's language?
Why am I so different
from ordinary kuyils?
Why do I have emotions
liken a human? Explain
this to me, please,
so that I may understand.'
and I bowed

பொன்னை மலரைப் புதுத்தேனைக் கொண்டுனக்கு
நித்தம் கொடுத்து நினைவெல்லாம் நீயாகச்
சித்தம் வருந்துகையில், தேமொழியே, நீயவனை
மாலையிட வாக்களித்தாய்; மையலினா லில்லை; அவன்
சால வருந்தல் சகிக்காமல் சொல்லிவிட்டாய்.

ஆயிழையே, நின்றன் அழகின் பெருங்கீர்த்தி
தேயமெங்குந் தான்பரவத் தேனமலையின் சார்பினிலோர்
வேடர்கோன், செல்வமும் நல் வீரமுமே தானுடையான்,
நாடனைத்தும் அஞ்சி நடுங்குஞ் செயலுடையான்,
மொட்டைப் புலியனுந்தன் முத்த மகனான

நெட்டைக் குரங்கனுக்கு நேரான பெண்வேண்டி,
நின்னை மணம் புரிய நிச்சயித்து, நின்னப்பன்
தன்னை யணுகி, ''நின்னோர் தையலையென் பிள்ளைக்குக்
கண்ணாலஞ் செய்யும் கருத்துடையேன்'' என்றிடலும்,
எண்ணாப் பெருமகிழ்ச்சி எய்தியே, நின்தந்தை

ஆங்கே உடம்பட்டான்; ஆறிரண்டு நாட்களிலே
பாங்கா மணம்புரியத் தாமுறுதி பண்ணிவிட்டார்,
பன்னிரண்டு நாட்களிலே பாவையுனைத் தேன்மலையில்
அன்னியன்கொண் டேகிடுவான் என்னும் அதுகேட்டு,
மாடன் மனம்புகைந்து மற்றைநாள் உன்னை வந்து

நாடிச் சினத்துடனே நானா மொழிகூற,
நீயும் அவனிடத்தே நீண்ட கருணையினால்,
''காயுஞ் சினந்தவிர்ப்பாய் மாடா, கடுமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக நேர்ந்தாலும்,
கட்டுப் படிஅவர்தங் காவலிற்போய் வாழ்ந்தாலும்

and listened.
The Master said,
'Kuyil, listen...
In an earlier life
you were born and grew up
on a mountain
in the south
of the prosperos Cera Kingdom,
You were the daughter
of a hunter named
Vira Murukan,
the chief
of a strong hunting clan.
As you grew, so did
your fame, for there was no one of your beauty
in all three Tamil kingdowms,
One of the most prosperous hunters,
and a cousin to you,
saw you
and melted, feed
for Kama's arrows.
His name was
Matan.
For months he wished he could marry you.
He came to you
everyday, and he
gave you gold,
flowers, and fresh honey.
You were all
his thoughts,
and his heart
sorrowed, o honey-words!
You promised to
place the garland

மாதமொரு மூன்றில் மருமம் சிலவெய்து
பேதம் விளைவித்துப் பின்னிங்கே வந்திடுவேன்;
தாலிதனை மீட்டுமவர் தங்களிடமே கொடுத்து
நாலிரண்டு மாதத்தே நாயகனா நின்றனையே
பெற்றிடுவேன்; நின்னிடத்தே பேச்சுத் தவறுவனோ?

மற்றிதனை நம்பிடுவாய் மாடப்பா'' என்றுரைத்தாய்;
காதலினா லில்லை, கருணையினால் இஃதுரைத்தாய்,
(மாதரசாய், வேடன் மகளான முற்பிறப்பில்,
சின்னக் குயிலியென்று செப்பிடுவார் நின்நாமம்)
பின்னர்ச் சிலதினங்கள் சென்றதன்பின் பெண்குயிலி,

நின்னொத்த தோழியரும் நீயுமொரு மாலையிலே
மின்னற் கொடிகள் விளையாடு தல்போலே
காட்டி னிடையே களித்தாடி நிற்கையிலே,
வேட்டைக் கெனவந்தான் வெல்வேந்தன் சேரமான்
தன்னருமை மைந்தன்; தனியே, துணைபிரிந்து,

மன்னவன்றன் மைந்தனொரு மானைத் தொடர்ந்துவரத்
தோழியரும் நீயும் தொகுத்துநின்றே ஆடுவதை
வாழியவன் கண்டுவிட்டான், மையல் கரைகடந்து
நின்னைத் தனக்காக நிச்சயித்தான்; மாது நீ
மன்னவனைக் கண்டவுடன் மாமோகங் கொண்டுவிட்டாய்.

நின்னையவன் நோக்கினான்; நீயவனை நோக்கி நின்றாய்;
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டீர்.
தோழியரும் வேந்தன் சுடர்க்கோலந் தான்கண்டே
ஆழியரசன் அரும்புதல்வன் போலு மென்றே
அஞ்சி மறைத்து விட்டார். ஆங்கவனும் நின்னிடத்தே.

around his neck; not
in passion, but
because you could not bear
his great sorrow.
Now, in the meantime, as
the great reputation
of your beauty
spread over all
the lands, it reached
the hunter-king
Mottai - Puliyan
on the slopes
of Honey Mountain.
He was rich and
of great valour, with deeds
to make all lands fear
and tremble; and he wanted
a good wife for his eldest
son, Nettai - Kurankan.
He settled on marrying
him to you, and approached
your father: 'I have in mind
the marriage of your daughter
to my son,' he said.
Your father's joy
was inconceivable,
and he agreed right there.

He promised to perform
a beautiful wedding
in twelve days.
Now when Matan heard
that in twelve days
a stranger

''வஞ்சித் தலைவன் மகன்யான்'' எனவுரைத்து,
''வேடர் தவமகளே! விந்தை யழகுடையாய்!
ஆடவனாத் தோன்றி யதன்பயனை இன்று பெற்றேன்;
கண்டதுமே நின்மிசைநான் காதல்கொண்டேன்'' என்றிசைக்க,
மண்டு பெருங்காதல் மனத்தடக்கி நீ மொழிவாய்;

''ஐயனே! உங்கள் அரமனையில் ஐந்நூறு
தையலருண் டாம்; அழகில் தன்னிகரில் லாதவராம்;
கல்வி தெரிந்தவராம்; கல்லுருகப் பாடுவராம்;
அன்னவரைச் சேர்ந்தே நீர் அன்புடனே வாழ்ந்திருப்பீர்,
மன்னவரே வேண்டேன், மலைக்குறவர் தம்மகள்யான்;

கொல்லு மடற்சிங்கம் குழிமுயலை வேட்பதுண்டோ ?
வெல்லுதிறல்மாவேந்தர் வேடருள்ளோ பெண்ணெடுப்பார்?
பத்தினியா வாழ்வதல்லாம் பார்வேந்தர் தாமெனினும்
நத்தி விரைமகளா நாங்கள்குடி போவதில்லை,
பொன்னடியைப் போற்றுகின்றேன், போய் வருவீர் தோழியரும்

என்னைவிட்டுப் போயினரே, என்செய்கேன்?'' என்று நீ
நெஞ்சங் கலக்கமெய்தி நிற்கையிலே, வேந்தன் மகன்
மிஞ்சுநின்றன் காதல் விழிக்குறிப்பி னாலறிந்தே,
பக்கத்தில் வந்து பளிச்சென் றுனது கன்னஞ்
செக்கச் சிவக்க முத்தமிட்டான் சினங்காட்டி

நீ விலகிச் சென்றாய் - நெறியேது சாமியர்க்கே? -
தாவி நின்னைவந்து தழுவினான் மார்பிறுக.
''நின்னையன்றி ஓர் பெண் நிலத்திலுண்டோ என்றனுக்கே?
பொன்னை, ஒளிர்மணியே. புத்தமுதே, இன்பமே,
நீயே மனையாட்டி, நீயே அரசாணி,

from Honey Mountain
would take you away,
his heart burned.
He came to you
the next day, and said
all kinds of things in his anger.
You answered him,
in deep compassion,
'Bring an end, Matan
to your burning anger.
Even though I happen
to become Nettai - Kurankan's
wife through this cruelty,
and though I go
to live with him,
in his care, as is
our custom,
in about three
months I will do
something to cause a difference
to arise between him
and me, and I will
come home. I will give
them back his tali,
and in six months
I will take you
as my lord.
Would my word to you
prove false? Believe
me, Matan!'
Not for love;
you said this,
out of compassion.
In that previous birth,

நீயே துணை எனக்கு. நீயே குலதெய்வம்.
நின்னையன்றிப் பெண்ணை, நினைப்பேனொ; வீணிலே
என்னை நீ ஐயுறுதல் ஏதுக்காம்? இப்பொழுதே
நின்மனைக்குச் சென்றிடுவோம்; நின்வீட்டி லுள்ளோர்பால்
என்மனதைச் சொல்வேன். எனதுநிரை யுரைப்பேன்.

வேத நெறியில் விவாகமுனைச் செய்துகொள்வேன்,
மாதரசே!'' என்று வலக் கைதட்டி வாக்களித்தான்.
பூரிப்புக் கொண்டாய் புளகம்நீ எய்திவிட்டாய்.
வாரிப் பெருந்திரைபோல் வந்த மகிழ்ச்சியிலே
நாணந் தவிர்த்தாய்; நனவே தவிர்ந்தவளாய்,

காணத் தெவிட்டாதோர் இன்பக் கனவிலே
சேர்ந்துவிட்டாய், மன்னன்றன் திண்டோ ளை நீயுவகை
ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்
சிந்தை கொண்டாய், வேந்தன் மகன், தேனில் விழும் வண்டினைப்போல்
விந்தையுறு காந்தமிசை வீழும் இரும்பினைப்போல்,

ஆவலுடன் நின்னை யறத்தழுவி, ஆங்குனது
கோவை யிதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையிலே, -
சற்றுமுன்னே ஊரினின்று தான்வந் திறங்கியவன்,
மற்றுநீ வீட்டைவிட்டு மாதருடன் காட்டினிலே
கூத்தினுக்குச் சென்றதனைக் கேட்டு குதூகலமாய்

ஆத்திரந்தான் மிஞ்சிநின்னை ஆங்கெய்திக் காணவந்தோன்,
நெட்டைக் குரங்கன் நெருங்கிவந்து பார்த்து விட்டான்.
''பட்டப் பகலிலே! பாவிமகள் செய்தியைப் பார்!
கண்ணாலங் கூடஇன்னுங் கட்டி முடியவில்லை
மண்ணாக்கி விட்டாள்! என்மானந்தொலைத்துவிட்டாள்.

when you were
the hunter's daughter,
the Queen of Women,
they called you
"Little Kuyil."

A few days later,
Little Girl Kuyili, you
were playing
with your girl friends
one evening
like little lightning streaks.
And while you were
having fun there
in the middle
of the forest,
who should appear but
the wonderful son
of the victorious
Cera King.
He had left his party,
and was chasing a deer
alone.
He saw you
and your girl friends.
His passion soared
out of bounds,
and he wanted you
for himself.
And you, woman,
when you saw
the prince,
you felt
desire.

'நிச்சய தாம்பூலம்' நிலையா நட ந்திருக்கப்
பிச்சைச் சிறுக்கி செய்த பேதகத்தைப் பார்த்தாயோ?''
என்று மனதில் எழுகின்ற தீயுடனே
நின்று கலங்கினான் செட்டைக் குரங்கனங்கே
மாப்பிள்ளைதான் ஊருக்கு வந்ததையும், பெண்குயிலி,

தோப்பிலே தானுந்தன் தோழிகளு மாச்சென்று
பாடி விளையாடும் பண்புகேட் டேகுரங்கன்
ஓடி யிருப்பதோர் உண்மையையும் மாடனிடம்
யாரோ உரைத்துவிட்டார்: ஈரிரண்டு பாய்ச்சலிலே
நீரோடும் மேனி நெருப்போடுங் கண்ணுடனே

மாடனங்கு வந்துநின்றான். மற்றிதனைத் தேன்மலையின்
வேடர்கோன் மைந்தன் விழிகொண்டு பார்க்கவில்லை.
நெட்டைக் குரங்கனங்கு நீண்ட மரம்போல
எட்டிநிற்குஞ் செய்தி இவன்பார்க்க நேரமில்லை.
அன்னியனைப் பெண்குயிலி ஆர்ந்திருக்குஞ் செய்தியொன்று

தன்னையே இவ்விருவர் தாங்கண்டார், வேறறியார்.
மாடனதைத் தான்கண்டான், மற்றவனும் அங்ஙனமே.
மாடன் வெறிகொண்டான், மற்றுவனும் அவ்வாறே.
காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையும் தானுமங்கு
தேவசுகங் கொண்டு விழியே திறக்கவில்லை.

ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த விழிநான்கு
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிகள் உதிர்க்கும் விழிநான்கு.
மாடனுந்தன் வாளுருவி மன்னவனைக் கொன்றிடவே

You faced him.
He looked at you;
you stood looking
at him.
In that look
you mixed
your souls.
Your girl friends
saw the prince's
royal robers,
and disappeared;
they were afraid
since hie was the
son of the king
of the sea-bounded earth
He said to you,
'I am the son
of the King of Vanci.'
He sang,
'O chaste hunter's daughter,
Your beauty is amazing!
Today I have found
the fruit of my birth
as a young man.
As soon as I saw you,
I loved you.'
You controlled
the immense love
in your heart,
and you said,
'Sire,
it is said that
in your palace
there are

ஓடிவந்தான்; நெட்டைக் குரங்கனும் வாளோங்கி வந்தான்;
வெட்டிரண்டு வீழ்ந்தனகாண் வேந்தன் முதுகினிலே.
சட்டெனவே மன்னவனும் தான்திரும்பி வாளுருவி
வீச்சிரண்டில் ஆங்கவரை வீழ்த்தினான்; வீழ்ந்தவர்தாம்
பேச்சிழந்தே அங்கு, பிணமாகக் கிடந்துவிட்டார்.

மன்னவனும் சோர்வெய்தி மண்மேல் விழுந்து விட்டான்,
பின்னவனை நீயும் பெருந்துயர்கொண் டேமடியில்
வாரி யெடுத்துவைத்து வாய்புலம்பக் கண்ணிரண்டும்
மாரி பொழிய மனமிழந்து நிற்கையிலே
கண்ணை விழித்துனது காவலனும் கூறுகின்றான்;

''பெண்ணே, இனிநான் பிழைத்திடேன்; சில்கணத்தே
ஆவி துறப்பேன், அழுதோர் பயனில்லை.
சாவிலே துன்பமில்லை; தையலே, இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம், பொன்னே, நினைக்கண்டு
காமுறுவேன்; நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்;

இன்னும் பிறவியுண்டு; மாதரசே இன்பமுண்டு,
நின்னுடன் வாழ்வினினி நேரும் பிறப்பினிலே!''
என்று சொல்லிக் கண்மூடி, இன்பமுறு புன்னகைதான்
நின்று முகத்தே நிலவுதர, மாண்டனன்காண்.
மாடனிங்கு செய்ததோர் மாயத்தால் இப்பொழுது

பீடையுற புள்வடிவம் பேதையுனக் கெய்தியது.
வாழி நின்றனன் மன்னவனும் தொண்டை வளநாட்டில்
ஆழிக் கரையின் அருகேயோர் பட்டினத்தில்
மானிடனாத் தோன்றி வளருகின்றான். நின்னையொர
கானிடத்தே காண்பான். கனிந்துநீ பாடும்நல்ல

five hundred women.
It is said that
there are none
to compare
with them
in beauty.
It is said that
they are educated.
It is said that
their singing will
melt a stone.
It is said that
they are well-versed
in many types of dance.
You must live
in love
with them.
I don't wish
for royalty.
I am a mountain
hunter's daughter,
will the mighty lion,
able to kill,
marry a ditch-rabbit?
Will the glorious emperor,
able to conquer kingdoms,
marry a hunters' girl?
We will live
as faithful wives,
but even if the
emperor of the earth
desired, we do not go
as wives of price.
I pray of your
golden feet,

பாட்டினைத்தான் கேட்பான். பழவினையின் கட்டினால்
மீட்டு நின்மேற் காதல்கொள்வான், மென்குயிலே!'' என்றந்தத்
தென் பொதியை மாமுனிவர் செப்பினார். ''சாமீ,
குயிலுருவங் கொண்டேன் யான், கோமானோ மென்மை
பயிலு மனிதவுருப் பற்றிநின்றான், எம்முள்ளே

காதலிசைந் தாலுங் கடிமணந்தான் கூடாதாம்.
சாதற் பொழுதிலே தார்வேந்தன் கூறியசொல்
பொய்யாய் முடியாயதோ?' என்றிசைத்தேன், புன்னகையில்
ஐயர் உரைப்பார்: 'அடி பேதாய்! இப்பிறவி
தன்னிலும் நீ விந்திகிரிச் சார்பினிலோர் வேடனுக்குக்

கன்னியெனத் தான் பிறந்தாய் கர்ம வசத்தினால்,
மாடன் குரங்கன் இருவருமே வன்பேயாக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டார்
நின்னையங்கே இப்பிறப்பில் நீயும் பழமைபோல்
மன்னனையே சேர்வையென்று தாஞ்சூழ்ந்து மற்றவரும்

நின்னைக் குயிலாக்கிநீ செல்லுந் திக்கிலெலாம்
நின்னுடனே சுற்றுகின்றார். நீயிதனைத் தேர்கிலையோ?''
என்றார். ''விதியே: இறந்தவர்தாம் வாழ்வாரை
நின்று துயருறுத்தல் நீதியோ? பேய்களெனைப்
பேதைப் படுத்திப் பிறப்பை மறப்புறுத்தி

வாதைப் படுத்தி வருமாயில், யானெனது
காதலனைக் காணுங்கால், காய்சினத்தால் ஏதேனும்
தீதிழைத்தால் என்செய்வேன்? தேவரே, மற்றிதற் கோர்
மாற்றிலை யோ?'' என்று மறுகி நான் கேட்கையிலே,
தேற்றமுறு மாமுனிவர் செப்பு கின்றார்; - 'பெண்குயிலே!

please leave.
My girl friends have all left
me and gone! What
shall I do?'
You said,
Your heart
was afraid.
But the king's son knew
your growing love
by the sign in your eyes.
He came to your side,
and pecked a kiss
that made your cheek
turn red. You showed
anger and moved away.
But what are manners
to lovers? He jumped
and came over to you,
and what he said
was heart-reding:
'Is there another girl
on this earth besides
you? O, my body!
Gold! Shinning jewel!
New nectar! Pleasure!
You are my only
wife! You are my
only queen! You
are my only help-mate.
You are my only
family goddess! Will
I ever think of any other
woman? How can you
doubt me? We
will go right now

தொண்டைவள நாட்டிலோர் சோலையிலே வேந்தன்மகன்
கண்டுனது பாட்டில் கருத்திளகிக் காதல்கொண்டு
நேசம் மிகுதியுற்று நிற்கையிலே, பேயிரண்டும்
மோசம் மிகுந்த முழுமாயச் செய்கைபல
செய்துபல பொய்த்தோற்றங் காட்டித் திறல் வேந்தன்.

ஐயமுறச் செய்துவிடும், ஆங்கவனும் நின்றனையே
வஞ்சகியென் றெண்ணி மதிமருண்டு நின்மீது
வெஞ்சினந்தான் எய்திநினை விட்டுவிட நிச்சயிப்பான்.
பிந்தி விளைவதெல்லாம் பின்னே நீ கண்டு கொள்வாய்.
சந்தி ஜபம் செய்யுஞ் சமயமாய்விட்ட' தென்றே

காற்றில் மறைந்து சென்றார் மாமுனிவர், காதலரே!
மாற்றி உரைக்கவில்லை. மாமுனிவர் சொன்னதெல்லாம்
அப்படியே சொல்லிவிட்டேன் ஐயா! திருவுளத்தில்
எப்படிநீர் கொள்வீரோ, யானறியேன், ஆரியரே!
காத லருள்புரிவீர், காதலில்லை யென்றிடிலோ

சாத லருளித் தமது கையால் கொன்றிடுவீர்!''
என்று குயிலும் எனதுகையில் வீழ்ந்ததுகாண்.
கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ? பெண்ணென்றால்
பேயு மிரங்காதோ? பேய்கள் இரக்கமின்றி
மாயமிழைத் தாலதனை மானிடனுங் கொள்ளுவதோ?

காதலிலே ஐயம் கலந்தாலும் நிற்பதுண்டோ ?
மாதரன்பு கூறில் மனமிளகார் இங்குளரோ?
அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்புவைத்து நோக்கிபின் மூண்டுவதும் இன்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்தைக் காணவில்லை.

to your house, and
I will speak my heart
to those of your house,
I will explain my state.
I will marry you
in the vedic way,
O queen of women!'
He tapped his right hand
and made it a vow.
You bubbled.
Your hair stood
on end. Like a
great ocean wave,
you lost your modesty
in the joy that
came to you then.
You felt as though you had slipped
into sleep, as though you passed
into a blissful dream.
You loved the prince's strong shoulders,
and you made up your mind
to taste the honey
of his lips. And
the emperor's son drew
to you, like a bee
to honey, like iron
to a magnet. He desired
you. But while he was drinking
your flower-petal lips;
'In broad daylight!
Look at this act
of the daughter
of sin!'
Nettai - Kurankan appeared.

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதமடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்விகமாம் காட்சியடா!
பெண்ணொருத்தி அங்குநின்றாள்; பேருவகை கொண்டு தான்
கண்ணெடுக்காதென்னைக் கணப்பொழுது நோக்கினாள்;

சற்றே தலைகுனிந்தாள், சாமீ! இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?
மீன விழியில் மிதந்த கவிதையெலாம்
சொல்லில் அகப்படுமோ? தூயசுடர் முத்தையொப்பாம் .

பல்லில் கனியிதழில் பாய்ந்த நிலவினை யான்
என்றும் மறத்தல் இயலுமோ? பாரின்மிசை
நின்றதொருமின் கொடிபோல் நேர்ந்தமணிப் பெண்ணரசின்
மேனி நலத்தினையும், வெட்டினையுங், கட்டினையும்
தேனி லினியாள் திருந்த நிலையினையும்.

மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ? ஓர் வார்த்தை
கற்றவர்க்குச் சொல்வேன் கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்

மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண் டாங்ஙனே
நண்ணித் தழுவி நறுங்கள் ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்தம் மயங்கிச் சிலபோழ் திருந்த பின்னே, .

He stammered,
‘Our engagement
was final,
and she has turned it
into dirt! She has
destroyed my honour!
Look at this exposure
of the beggar-girl,
she who is engaged!’
Fire rose
in his heart.
In two parts of leaps,
a body running sweat,
eyes running fire,
Matan came, too,
and stood still:
someone had told him
that Kurankan,
the bridegroom,
had come to the
village, and gone
to the woods to listen
to Kuyili sing and play.
But Matan did not see the son
of the hunter king
from Honey Mountains.
He did not see Nettai-Kurankan
standing there like a tall tree.
These two men saw
only the one act
of the woman Kuyili
enjoying a foreigner.
They knew nothing else.
Matan saw that alone,
and the other man

பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்
ஒக்க மறைந்திடலும், ஓஹோ! எனக்கதறி
வீழ்ந்தேன். பிறகு விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம், பழம்பாய் - வரிசையெல்லாம்

ஒத்திருக்க 'நாம் வீட்டில் உள்ளோம்' எனவுணர்ந்தேன்.
சோலை, குயில், காதல், சொன்னகதை யத்தனையும்,
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்கனையின் சூழ்ச்சியென்றே கண்டு கொண்டேன்.
ஆன்ற தமிழ்ப் புலவீர், கற்பனையே யானாலும்,

வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

-1914-1915 எழுதப்பட்டது. 1923ல் வெளியானது

saw so, too.
The son of the emperor
and that virgin girl
in true bliss
did not open one eye.
Closed, and enjoying
the nectar - joy
of soul-mixture,
there were four eyes;
and, set a fire
from seeing those eyes,
four more eyes.
lost their
senses.
Matan ran out,
drew his sword
to kill
the royal man;
Nettai-Kurankan, too,
brandished his sword.
See!
Two cuts fell
Upon the prince's back.
Instantly the kingly man
turned, drew his sword,
and in two puffs
he downed them there.
The fallen men lost
their speech
and lay there -
corpses.
And then the prince
groaned and fell.
And then you,

in great sorrow,
you lifted him up
on your lap.
Your mouth lamented;
your eyes rained;
your heart was wasted;
but your protector
opened his eyes
and said,
'O girl!
I will not live
any longer.
In a few moments
I will relinquish
my soul.
There is no use in
crying.
There is no pain in
dying.
Woman!
We will both
appear again
on earth!
O, gold!
When I see you,
I will love you!
I will live in
happiness
with you.
There will be
another
birth.
O queen
of women!

I am happy.
I will
live
with you. I
will be
born again.'
He closed
his eyes.
A smile of joy
stayed on his face.
The dead
man's face
shone.

You have become a bird
now, through a spell
Matan cast upon you.
But your prince
is a young man
in rich Tondai Nadu,
in a town near
the shore of the Deep.
He will find you
in a grove, and hear
the good song you sing
when you feel tender.

Through the bonds
of old deeds
he will love you
again,
little kuyil!
Thus spoke
the great saint

of Southern Potiyil
I spoke:
'Swami, I am
a kuyil, and
the prince
is a human
who does great
things. Even if
love joined us,
we could us,
we could never
marry.
The words spoken
by the garlanded
prince, when he lay
dying, won't prove
false,
will they?'
I asked.
The sage said,
'Little girl,
in this life as well
you were born the daughter
of a mountain hunter
on the slopes
of the Vindhyas.
But both Matan and Kurankan
were born ghosts of the forest.
They found you
and knew you would
marry the prince
in this life,
as of old;
and they changed you

into a kuyil.
They follow you now
wherever you go
didn't you know?'
I spun.
'O Fate!' I cried.
'Is it fair for those
who have died, to torment
those who are alive?
If those devils can make
me, a simple girl,
forget my own birth,
what will they do
when I see my lover?
O my lord! Can't this
be changed?'
And the great saint,
he who has certainty,
replied,
'Female kuyil,
in a grove
in the rich Tondai Land
the emperor's son will see
you. His reason
will melt in your song,
and he will fall
in love with you.
Now the two
devils will work
much magic, black magic, and
they will design a myriad
of false appearances.
They will make
your brave prince

doubt you, and
he will even think you
a cheat.
His mind will cloud
over; he'll be
horribly angry
with you, and he'll
decide to leave you.
And you will see then
what will happen next.
Now, it is time for
my evening rituals.'
Thus spoke the saint,
and he was gone
into the wind.
O, my lover!
I have not changed
this for the retelling.
I have told you all
that great saint said
as it was.
Oh, oh, oh!
How will you take it
in your holy heart?
I do not know,
O Noble One!
In love grant
me your grace;
or if you have
no love, then
grace me with death;
kill me by your
hand!
And she fell
into my hand

with those words.
See? How could my
mind to kill her
prevail? Won't devils,
even, pity
a woman?
Or if devils with no pity
work sorcery,
wouldn't any human
have pity?
Does doubt last
long, when mixed
with love?
When a woman declares
her love, is there
anyone here
whose heart wouldn't
melt?
With love, then,
I took that rare kuyil
in my hand.
I held it in front
of me and looked
at it, and I
kissed it,
drunk with a joy
that was catching
on fire.
Suddenly! No longer
did I see
a Kuyil!
Amazing!
Amazing, You could not
describe it!
The Nectar

of the Ocean of Desire!
A miracle!
Womanliness itself
became a goddess!
A woman stood there!
In joy
she looked straight
at me
for a split
second.
She bowed
her head a little
Oh Lord!
How can
I sing
her beauty
in Tamil?
Am I the one
to describe how
her two eyes
swallow
a man?
Will all the poems
floating in her eyes
be caught
in words?
Will I ever be able
to forget the moonlight
which spread
on her pure shining
white teeth
in her lips
like open fruit?
Could anyone else

describe the goodness
of her body, her modest
posture, her build,
and her dress,
this entreating jewel,
this woman, this
queen, this
girl,
sweeter
than honey?
Yet this will I say,
for the learned:
to the juice squeezed
from the fruit of poetry,
he added all the distillations
of music and of
the dance; he mixed in
the sweetest nectar
and warmed it in the sunshine
of love; and thus did Brahma create
the body of this woman.
I looked at her.
I drew to her,
and I hugged
her. I kissed her.
I kissed her fragrant
wine lips.
I was drunk
with passion,
and the jewel -
girl beside me,
the grove and all
disappeared, and I
fainted.

I came to, later.
In my sight,
when I opened
my eyes, were
my old schoolbooks,
my stylus, my pile
of old magazines,
the lines on my old
straw mat. They all
told me I was back
in the bouse
at home.
And then I knew
that the grove, the
kuyil, the love, the story
I have told and all that-
it was all an invention
of my imagination
in the beauty
of an evening.

O wise professors:
though this be fantasy,
might there be a little room
to expound it, philosophically?
Tell us its
meaning!

-David Buck

13.45. கண்ணன் பாட்டு

1. கண்ணன் - என் தோழன்

புன்னாகவராளி - திஸ்ரஜாதி ஏகதாளம்
வத்ஸல ரசம்

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவ தற்கே - இனி
என்ன வழியென்று கேட்கில், உபாயம்
இருகணத் தேயுரைப் பான்; - அந்தக்
''கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன் றில்லேன் - வந்திங்கு
உன்னை யடைந்தேன்'' என்னில் உபாயம்
ஒருகணத் தேயுரைப் பான். 1

கானகத்தே சுற்று நாளிலும் நெஞ்சிற்
கலக்க மிலாதுசெய் வான்; - பெருஞ்
சேனைத் தலைநின்று போர்செய்யும் போதினில்
தேர்நடத் திக்கொடுப் பான்; - என்றன்
ஊனை வருத்திடு நோய்வரும் போதினில்
உற்ற மருந்துசொல் வான்; - நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ்சொல்லி மாற்றிடு வான். 2

பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றாலொரு
பேச்சினி லேசொல்லுவான்;
உழைக்கும் வழிவினை யாளும் வழிபயன்
உண்ணும் வழியுரைப் பான்;
அழைக்கும் பொழுதினிற் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக் குள்வருவான்;
மழைக்குக் குடை, பசிநேரத் துணவென்றன்
வாழ்வினுக் கெங்கள்கண் ணன். 3

13.45. Kannan Pattu

1. Krishna - My Friend

Love-lorn I sought his help t'elope
With Subhadra golden-hued;
At once he cheered me up with hope
O'the wedding which ensued. 1

When up against that archer rare, -
Karna of matchless worth, -
He helped me out of my weak despair
To fell him to the earth. 2

Through all our wand'rings in the forest wide
He freed our minds from fear;
In the thick of the fight as my charioteer and guide,
He was without a peer. 3

When caught in the grip of sickness or pain,
He offers a certain cure;
But when distraught by worries vain,
His words are a tonic pure. 4

When empty pride my heart elates,
He humbles it to the dust;
The hypocrite he wholly hates,
And shuns him in disgust. 5

Where th'unclean heart like a stagnant pool
Is mantled o'er with green,
His grace like a flood of waters cool
Flushes it wholly clean. 6

கேட்டபொழுதில் பொருள் கொடுப்பான்; சொல்லுங்
கேலி பொறுத்திடு வான்; - எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான்; - என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை இஃதென்று
நான்சொல்லும் முன்னுணர் வான்; - அன்பர்
கூட்டத்தி லேயிந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுள ரோ? 4

உள்ளத்தி லேகரு வங்கொண்ட போதினில்
ஓங்கி யடித் திடுவான்; - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தைசொன் னாலங்கு
காறி யுமிழ்ந்திடு வான்; - சிறு
பள்ளத்தி லேநெடு நாளழு குங்கெட்ட
பாசியை யெற்றி விடும் - பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடு வான். 5

சின்னக் குழந்தைகள் போல்விளை யாடிச்
சிரித்துக் களித்திடு வான்; - நல்ல
வன்ன மகளிர் வசப்பட வேபல
மாயங்கள் சூழ்ந்திடு வான்; - அவன்
சொன்ன படிநட வாவிடி லோமிகத்
தொல்லை யிழைத்திடு வான்; - கண்ணன்
தன்னை யிழந்து விடில், ஐயகோ! பின்
சகத்தினில் வாழ்வதி லேன். 6

When the mood is on, like a child he plays
With unself-conscious glee;
Perchance if maidens on him gaze,
He holds their hearts in fee. 7

Who can hope t'exhaust the list
Of his graces versatile, -
As singer, painter, strategist,
Unique in theme and style, 8

He dwells in the hearts of Yogic seers,
The Vedas Him proclaim:
His Gita dispelled all my fears -
I'll glorify His name. 9

-P.Mahadevan

கோபத்தி லேயொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடு வான்; - மனஸ்
தாபத்திலே யொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான்; - பெரும்
ஆபத்தி னில்வந்து பக்கத்தி லேநின்று
அதனை விலக்கிடு வான்; - சுடர்த்
தீபத்தி லேவிடும் பூச்சிகள் போல்வருந்
தீமைகள் கொன்றிடு வான். 7

உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான்; - அருள்
வண்மையி னாலவன் மாத்திரம் பொய்கள்
மலைமலை யாவுரைப் பான்; - நல்ல
பெண்மைக் குணமுடை யான்; - சில நேரத்தில்
பித்தர் குணமுடை யான்; - மிகத்
தண்மைக் குணமுடை யான்; சில நேரம்
தழலின் குணமுடை யான். 8

கொல்லுங் கொலைக்கஞ்சி டாத மறவர்
குணமிகத் தானுடை யான்; - கண்ணன்
சொல்லு மொழிகள் குழந்தைகள்; போலொரு
சூதறி யாதுசொல் வான்; - என்றும்
நல்லவ ருக்கொரு தீங்கு நண்ணாது
நயமுறக் காத்திடு வான்; - கண்ணன்
அல்லவ ருக்கு விடத்தினில் நோயில்
அழலினி லுங்கொடி யான். 9

காதல் விளைய மயக்கிடும் பாட்டினில்
கண்மகிழ் சித்திரத் தில் - பகை
மோதும் படைத்தொழில் யாவினு மேதிறம்
முற்றிய பண்டிதன் காண்; - உயர்
வேத முணர்ந்த முனிவ ருணர்வினில்
மேவு பரம்பொருள் காண்; - நல்ல
கீதை யுரைத்தெனை இன்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடு வேன்.

-1917

2. கண்ணன் என் சீடன்

(ஆசிரியப்பா)

யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்,
என்னிலும் அறிவினிற் குறைந்தவன் போலவும்,
என்னைத் துணைக்கொண்டு, என்னுடை முயற்சியால்

என்னடை பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பா டெய்த வேண்டினோன் போலவும்,
யான்சொலுங் கவிதை என்மதி யளவை
இவற்றினைப் பெருமை யிலங்கின வென்று
கருதுவான் போலவும், கண்ணக் கள்வன்.

சீடனா வந்தெனைச் சேர்ந்தனன், தெய்வமே!
பேதையேன் அவ்வலைப் பின்னலில் வீழ்ந்து
பட்டன தொல்லை பலபெரும் பாரதம்;
உளத்தினை வென்றிடேன்; உலகினை வெல்லவும்,
தானகஞ் சுடாதேன் பிறர்தமைத் தானெனும்

சிறுமையி னகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்,
தன்னுள்ளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன்; இந்தச் சகத்திலே யுள்ள
மாந்தர்க் குற்ற துயரெலாம் மாற்றி
இன்பத் திருத்தவும் எண்ணிய பிழைக்கெனைத்

தண்டனை புரிந்திடத் தானுளங் கொண்டு,
மாயக் கண்ணன் வலிந்தெனைச் சார்ந்து,
புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்,
பல்வகை யால்அகப் பற்றுறச் செய்தான்;
வெறும்வாய் மெல்லுங் கிழவிக் கிஃதோர்

2. Kannan - My Chela

Me he is and also other than me
Which is not me; yet is he of me and them;
And, from me and these is he different;
He's something mystic and mysterious,
The illusive Kannan. As though he were

To me in intellect inferior
And so with my aid, effort, company
And words of instruction, he would achieve
Greatness, the thievish Kannan, my chela
Became; did he think that my poetry,

Intellect and logic were with glory
Full-fraught? O God! the witless fool that I am
To all into his trap! O all the woes
I underwent, do form and epic great!
'Conquest of self' I have not made alas!

But 'Conquest of world' I would long for;
Burnt have I not the desires of senses five,
But to stabilish all in Sivam would I
Try, ridding them of their selves' pettiness;
Inner clarity I lack and also

Am without happiness that tires not.
But sure would I dare quell the misery
Of men and keep them all in pleasance firm.
For this presumptuousness, O alas
He had meant sure, to punish me condign!

அவலாய்மூண்டது; யானுமங் கவனை
உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக் கவனாய்,
''இன்னது செய்திடேல், இவரோடு பழகேல்,
இவ்வகை மொழிந்திடேல் இனையன விரும்பேல்,
இன்னது கற்றிடேல், இன்னநூல் கற்பாய்,

இன்னவ ருறவுகொள், இன்னவை விரும்புவாய்''
எனப்பல தருமம் எடுத்தெடுத் தோதி,
ஓய்விலா தவனோ டுயிர்விட லானேன்.
கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
எதிர்செயும் மனைவிபோல், இவனும்நான் காட்டும்

நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே
நடப்பா னாயினன். நானிலத் தவர்தம்
மதிப்பையும் புகழுறு வாழ்வையும் புகழையும்
தெய்வமாக் கொண்ட சிறுமதி யுடையேன்,
கண்ணனாஞ் சீடன், யான் காட்டிய வழியெலாம்

விலகியே நடக்கும் விநோதமிங் கன்றியும்,
உலகினர் வெறுப்புறும் ஒழுக்கமத் தனையும்
தலையாக் கொண்டு சார்பெலாம் பழிச்சொலும்
இகழுமிக் கவனாய் என்மனம் வருந்த
நடந்திடல் கண்டேன்; நாட்பட நாட்படக்

கண்ணனும் தனது கழிபடு நடையில்
மிஞ்சுவா னாகி, வீதியிற் பெரியோர்
கிழவிய ரெல்லாம் கிறுக்கனென் றிவனை
இகழ்ச்சியோ டிரக்கமுற் றேளனம் புரியும்
நிலையும் வந்திட்டான். நெஞ்சிலே யெனக்குத்

So it was that he came voluntary
And praised me and did extol my muse great;
In ways various he fanned my self-love
To a munching hag though empty-mouthed
This in sooth was a bushel of beaten rice.

Him to uplift was my life's sole mission.
"Thou shalt not do these; thou shalt not with these
Mix; these thou shalt not speak; these thou shalt not
Covet; thou shalt not read these; these thou shalt
Learn; thou shalt not these cultivate; these thou shalt

Desire." With such righteous do's and don'ts, him
Did I ply constantly without respite.
Like the unruly housewife of the table
Acting contrary to her husband's word,
He too acted in utter defiance

Of my instructions. The honour by men
Of world accorded, the life of renown
And glory great are by me held sacred,
Though I do own I am illiberal.
Besides his novel ways of doing things

I forbid, he with gusto took to acts
That are deemed odious by men on earth.
Obloquy and infamy he did heap
On himself everywhere; this witnessing
I grieved; day by day he in his bad ways

தோன்றிய வருத்தஞ் சொல்லிடப் படாது.
முத்தனாக் கிடநான் முயன்றதோர் இளைஞன்
பித்தனென் றுலகினர் பேசிய பேச்சென்
நெஞ்சினை அறுத்தது; நீதிகள் பலவும்
தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்

சொல்லிநான் கண்ணனைத் தொளைத்திட லாயினேன்.
தேவ நிலையிலே சேர்த்திடா விடினும்,
மானுடந் தவறி மடிவுறா வண்ணம்,
கண்ணனை நானும் காத்திட விரும்பித்
தீயெனக் கொதித்துச் சினமொழி யுரைத்தும்,

சிரித்துரை கூறியும், செள்ளென விழுந்தும்,
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்
எத்தனை வகையிலோ என்வழிக் கவனைக்
கொணர்ந்திட முயன்றேன்; கொள்பய னொன்றிலை.
கண்ணன் பித்தனாய்க் காட்டா ளாகி,

எவ்வகைத் தொழிலிலும் எண்ணமற் றவனாய்,
எவ்வகைப் பயனிலுங் கருத்திழந் தவனாய்,
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்
யாதோ பொருளாய், எங்ஙனோ நின்றான்.
இதனால்,

அகந்தையும் மமதையும் ஆயிரம் புண்ணுற;
யான்கடுஞ் சினமுற்று 'எவ்வகை யானும்
கண்ணனை நேருறக் கண்டே தீர்ப்பேன்'
எனப்பெருந் தாபம் எய்தினே னாகி,
'எவ்வா றேனும் இவனையோர் தொழிலில்

The more revelled; women old and elders
Of the town deeming him a bedlamite
Fleered at him though with pity not unmixed.
My heart's sorrowing was beyond all words.
When the world at large called him a mad fool

Who was to have been into a Mukta
Wrought by me, my heart was pierced, to the quick,
I dinned into Kannan righteous sastras.
'Though he may not into an angel turn
He must not from the state of man fall down;

Him should I save.' Thus did I firm resolve.
So it was like fire I raged; words of wrath
At him I hurled; cajoled him with sweet smiles;
Fell foul on him; sneered at him; provoked him.
Aye, a myriad ways I tried on him,

Him to win to my way, oh... all in vain.
Kannan was mad and wild like a savage;
No work could ever claim his attention;
No aim or purpose could interest him.
Like a monkey, a bear fierce, a ghost

That haunts the cleft of a tree, or a something
Unknowable, he behaved, - hard to tell.
Wherefore were my ego and pride wounded
In a thousand ways.
In wrath did I rage;

ஓரிடந் தன்னில் ஒருவழி வலிய
நிறுத்துவோ மாயின் நேருற் றிடுவான்'
என்றுளத் தெண்ணி இசைந்திடு ஞ் சமயங்
காத்திருந் திட்டேன். ஒருநாள் கண்ணனைத்
தனியே எனது வீட்டினிற் கொண்டு,

''மகனே, என்பால் வரம்பிலா நேசமும்
அன்பும்நீ யுடையை; அதனையான் நம்பி,
நின்னிட மொன்று கேட்பேன்; நீயது
செய்திடல் வேண்டும்; சேர்க்கையின் படியே
மாந்தர்தஞ் செயலெலாம் வகுப்புறல் கண்டாய்.

சாத்திர நாட்டமும், தருக்கமும் கவிதையில்
மெய்ப்பொரு ளாய்வதில் மிஞ்சிய விழைவும்
கொண்டோ ர் தமையே அருகினிற் கொண்டு
பொருளினுக் கலையும் நேரம் போக
மிஞ்சிய பொழுதெலாம் அவருடன் மேவி

இருந்திட லாகுமேல் எனக்குநன் றுண்டாம்;
பொழுதெலாம் என்னுடன் போக்கிட விரும்பும்
அறிவுடை மகனிங் குனையலால் அறிந்திடேன்.
ஆதலால்,
என்பயன் கருதி, எனக்கொரு துணையாய்

என்னுடன் சிலநாள் இருந்திட நின்னை
வேண்டி நிற்கின்றேன், வேண்டுதல் மறுத்தே
என்னைநீ துன்பம் எய்துவித் திடாமே,
இவ்வுரைக் கிணங்குவாய்'' என்றேன். கண்ணனும்,
''அங்ஙனே புரிவேன். ஆயின் நின் னிடத்தே

'Surely will I and somehow correct him:'
Thus I vowed and longed to fulfil my vow.
'If I can somehow force him in some work
In a fixed place, he will reform himself;'
So thought I, and the right hour awaited.

To my house one day, I took him alone
And said: "Son! affection for me you have
And love unbounded; on this relying
I bid you do just as I direct you.
Acts of men are linked to what they are attached;

If with men devoted to the study
Of sastras great, mastery of logic,
Love immense for poetry coupled with
A longing for philosophical truth
Company is kept at all times, except

The few hours spent in earning, it will spell
Good to me; I know not any who will
With me remain constant but you, my son
Intelligent! So in my interest
As my succourer I do beseech you

To be with me for a few days; turn down
Not this request, steep me not in sorrow;
Say 'Yes' to what I said." Behold "Amen"
Said Kannan.
But then he said: "How could I

தொழிலிலாது யாங்ஙனம் சோம்பரில் இருப்பது?
காரிய மொன்று காட்டுவை யாயின்,
இருப்பேன்'' என்றான். இவனுடைய இயல்பையும்
திறனையுங் கருதி, ''என் செய்யுளை யெல்லாம்
நல்லதோர் பிரதியில் நாடொறும் எழுதிக்

கொடுத்திடுந் தொழிலினைக் கொள்ளுதி'' என்றேன்
நன்றெனக் கூறியோர் நாழிகை யிருந்தான்;
'செல்வேன்' என்றான்; சினத்தொடு நானும்
பழங்கதை யெழுதிய பகுதியொன் றினையவன்
கையினிற் கொடுத்துக் ''கவினுற இதனை

எழுதுக'' என்றேன்; இணங்குவான் போன்றதைக்
கையிலே கொண்டு கணப்பொழு திருந்தான்,
''செல்வேன்'' என்றான். சினந்தீ யாகிநான்
''ஏதடா, சொன்ன சொல் அழித்துரைக் கின்றாய்;
பித்தனென் றுன்னை உலகினர் சொல்வது

பிழையிலை போலும்'' என்றேன். அதற்கு,.
''நாளவந் திவ்வினை நடத்துவேன்'' என்றான்.
''இத்தொழி லிங்கே இப்பொழு தெடுத்துச்
செய்கின் றனையா? செய்குவ தில்லையா?
ஒருரை சொல்'' என்றுமினேன். கண்ணனும்

''இல்லை'' யென் றொருசொல் இமைக்கு முன் கூறினான்.
வெடுக்கெனச் சினத்தீ வெள்ளமாய்ப் பாய்ந்திடக்
கண்விசந் திதழ்கள் துடித்திடக் கனன்றுநான்
''சீச்சி, பேயே! சிறிதுபோழ் தேனும்
இனியென் முகத்தின் எதிர்நின் றிடாதே.

With you remain idle? Me if you can
In some work employ, with you will I be."
I did his ability and nature
Consider and then said: "You will do well
To copy afresh my poems daily."

"Very well" said he and there did remain
For a few moments; then said he; "I am
Going." In anger I took out a script
Of an old story and gave it to him
Saying: "Copy this now and let it be

Calligographic." As if obedient
He was there for a moment and then said
"I am going."
With rage was I afire.
"Sirrah! Are you to the winds your words' throwing?

I cannot blame the people that deem you
Demented." Thus I, and to this he said:
"I'll be here tomorrow to do this work."
"Are you or are you not doing this work
Here and now? Say it in a word" I roared.

"No" said Kannan ere one could even wink.
My wrath of fire began to rage like a flood;
My eyes grew ruddy and my lips trembled;
I was all fury. "Fie on you, you ghou!
Stand not before me even for a second!

என்றுமிவ் வுலகில் என்னிடத் தினிநீ
போந்திடல் வேண்டா, போ, போ, போ'' என்று
இடியுறச் சொன்னேன்; கண்ணனும் எழுந்து
செல்குவ னாயினன். விழிநீர் சேர்ந்திட
''மகனே! போகுதி வாழ்கநீ; நின்னைத்

தேவர் காத்திடுக! நின்தனைச் செம்மை
செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன்.
தோற்றுவிட்டேனடா! சூழ்ச்சிகள் அறிந்தேன்.
மறித்தினி வாராய், செல்லுதி வாழி நீ!''
எனத்துயர் நீங்கி அமைதியோ டிசைத்தேன்.

சென்றனன் கண்ணன். திரும்பியோர் கணத்தே
எங்கிருந் தோநல் லெழுதுகோல் கொணர்ந்தான்;
காட்டிய பகுதியைக் கவினுற வரைந்தான்.
''ஐயனே, நின்வழி யனைத்தையுங் கொள்ளுவேன்.
தொழில்பல புரிவேன், துன்பமிங் கென்றும்,

இனிநினக் கென்னால் எய்திடா'' தெனப்பல
நல்லசொல் லுரைத்து நகைத்தனன் மறைந்தான்.
மறைந்ததோர் கண்ணன் மறுகணத் தென்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவா னாயினன்:
''மகனே, ஒன்றை யாக்குதல் மாற்றுதல்

அழித்திட லெல்லாம் நின்செய லன்றுகாண்;
தோற்றேன் எனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய்; உலகினில் வேண்டிய தொழிலெல்லாம்
ஆசையுந் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க நீ'' என்றான். வாழ்கமற் றவனே!

-1917

Never more should you in all your life come
To me; get you gone go, go, out you go!"
I thundered thus. Up rose Kannan and walked
Away; my eyes were with tears suffused.
"O son! You are going; may you flourish!

May the immortal gods guard you! To make
You righteous and great a good many things
I devised; I but failed; O my darling
Of what avail is knowledge of strategems?
You will not come back; you are going away,

May you live long!" Thus I bemused, freed from
Sorrowing; gone was Kannan; but behold
He was back in a moment, with a quill
In hand, fetched from where I know not. He did
Beautifully wirte out the portion marked

By me and said: "Sir! I will sure abide
By you totally and do many tasks
I'll no longer be the cause of your worry."
These and words as these - as goodly - he spake;
As he spake he smiled and lo, he vanished.

Kannan who did from my presence vanish
Was at once found in my bosom enthroned
Whence intuiting me he spoke: "O my son!
It is not in your power to create
Or change or destroy aught; when you did say:

'Lo, I lost', you did in truth, aye, triumph.
Do whatever work your heart is after
But without attachment or anguish great.
May you flourish!" Thus did Kannan bless me.
May be flourish for ever and ever!

-T.N.Ramachandran

3. கண்ணன் - எனது சற்குரு

புன்னாகவராளி - திஸ்ர ஜாதி - ஏகதாளம்
ரசங்கள்: அற்புதம், பக்தி

சாத்திரங் கள்பல தேடினேன் - அங்கு
சங்கையில் லாதன சங்கையாம் - பழங்
கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் - பொய்மைக்
கூடையில் உண்மை கிடைக்குமோ? - நெஞ்சில்
மாத்திரம் எந்த வகையிலும் - சக
மாயம் உணர்ந்திடல் வேண்டுமே - என்னும்
ஆத்திரம்நின்ற திதனிடை - நித்தம்
ஆயிரந் தொல்லைகள் சூழ்ந்தன. 1

நாடு முழுதிலுஞ் சுற்றிநான் - பல
நாட்கள் அலைந்திடும் போதினில், - நிறைந்
தோடும் யமுனைக் கரையிலே - தடி
ஊன்றிச் சென்றாரோர் கிழவனார்; - ஒளி
கூடு முகமும், தெளிவுதான் - குடி
கொண்ட விழியும், சடைகளும், - வெள்ளைத்
தாடியும் கண்டு வணங்கியே - பல
சங்கதி பேசி வருகையில், 2

என்னுளத் தாசை யறிந்தவர் - மிக
இன்புற் றுரைத்திட லாயினர் -’’தம்பி,
நின்னுளத் திற்குத் தகுந்தவன், - சுடர்
நித்திய மோனத் திருப்பவன், - உயர்
மன்னர் குலத்தில் பிறந்தவன், - வட
மாமது ரைப்பதி யாள்கின்றான்; - கண்ணன்
தன்னைச் சரணென்று போவையில் - அவன்
சத்தியங் கூறுவன்’’ என்றனர். 3

3. Kannan - My Sad-Guru

A good many Sastras I sought after
But lo! they are with endless doubts replete;
Will ever truth lie hid in the false basket
Of fools who about gotras old blabber?
My heart ached for knowledge true of Maya
Universal; this I should sure come by,
Aye come by; such was my longing great
Whilst a thousand cares daily besieged me. 1

My quest pursuing I roamed many days
The whole country and came to the sacred banks
Of the Jumna where I beheld a man
Ripe with age walking with the aid of a stick.
Bright was his face; his eyes where an abode
Of clarity; his hair was all matted.
And milk-white was his beard; unto him
Obeisance I paid and conversed for long. 2

My longing did he sense and was well-pleased,
He said: “O my young brother, the person
That your heart yearns after is to me known.
He is the One of lustrous Silence eternal;
He is the Sovereign of Vada Mathura
He hails from a great and noble dynasty;
Go seek refuge in him, Kannan by name.
He will sure to you the great truth unfold. 3

மாமது ரைப்பதி சென்றுநான் - அங்கு
வாழ்கின்ற கண்ணனைப் போற்றியே, - என்தன்
நாமமும் ஊரும் கருத்துமே - சொல்லி
நன்மை தருகென வேண்டினன்; - அவன்
காமனைப் போன்ற வடிவமும் - இளங்
காளையர் நட்பும் பழக்கமும் - கெட்ட
பூமியைக் காக்குந் தொழிலிலே - எந்தப்
போதுஞ் செலுத்திடுஞ் சிந்தையும், 4

ஆடலும் பாடலும் கண்டுநான் - முன்னர்
ஆற்றங் கரையினில் கண்டதோர் - முனி
வேடந் தரித்த கிழவரைத் - கொல்ல
வேண்டுமென் றுள்ளத்தில் எண்ணினேன் - 'சிறு
நாடு புரந்திடு மன்னவன் - கண்ணன்
நாளுங் கவலையில் மூழ்கினோன்; - தவப்
பாடுபட் டோ ர்க்கும் விளங்கிடா - உண்மை
பார்த்திவன் எங்ஙனம் கூறுவான்?' 5

என்று கருதி யிருந்திட்டேன்; - பின்னர்
என்னைத் தனியிடங் கொண்டுபோய், - ''நினை
நன்று மருவுக! மைந்தனே! - பர
ஞான முரைத்திடக் கேட்பைநீ; - நெஞ்சில்
ஒன்றுங் கவலையில் லாமலே - சிந்தை
ஊன்ற நிறுத்திக் களிப்புற்றே தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில் - அங்கு
விண்ணை யளக்கும் அறிவுதான்! 6

To great Mathura did I soon repair
And called on Kannan, and him hailed full-well;
To him I revealed my name, town and aim
And humbly I sought his benediction.
In beauty he was a Manmath; he kept
Company with friends who were lads bull-like.
His mind was for ever pre-occupied
With the thought of ruling this madding world, 4

And with singing, dancing and junketing.
This seeing, overcome was I by a thought
To slay the pseudo-saint I late had met.
"A petty ruler of a small country!
This kannan is for ever in worries
Deep immersed; how can he, such as he is,
Ever come to know of aught of truth that is
Unknown aye, even to tapaswis great?" 5

Thus did I muse in sooth; then did Kannan
Take me to a place of strict secrecy
And said: "O my son, Gnothi Seauton;
Listen; I am expounding divine wisdom;
With your heart cleansed of sorrows, with chinta
Unwavering in joy planted, conquer
Self; but consciousness of conquest should not
Linger; then wisdom scales heaven itself. 6

சந்திரன் சோதி யுடையதாம்; - அது
சத்திய நித்திய வஸ்துவாம்; - அதைச்
சிந்திக்கும் போதினில் வந்துதான் - நினைச்
சேர்ந்து தழுவி அருள்செயும் -; அதன்
மந்திரத் தாலிவ் வுலகெலாம் - வந்த
மாயக் களிப்பொருங் கூத்துக்காண் -'இதைச்
சந்ததம் பொய்யென் றுரைத்திடும் - மடச்
சாத்திரம் பொய் யென்று தள்ளடா! 7

''ஆதித் தனிக்பொரு ளாகுமோர்; - கடல்
ஆருங் குமிழி உயிர்களாம்; - அந்தச்
சோதி யறிவென்னும் ஞாயிறு - தன்னைச்
சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம்; - இங்கு
மீதிப் பொருள்கள் எவையுமே - அதன்
மேனியில் தோன்றிடும் வண்ணங்கள்;- வண்ண
நீதி யறிந்தின்பம் எய்தியே - ஒரு
நேர்மைத் தொழிலில் இயங்குவார்; 8

''சித்தத்தி லேசிவம் நாடுவார், - இங்கு
சேர்ந்து களித்துல காளுவார்; - நல்ல
மத்த மதவெங் களிறுபோல் நடை
வாய்ந்திறு மாந்து திரிகுவார்; - 'இங்கு
நித்தம் நிகழ்வ தனைத்துமே - எந்தை
நீண்ட திருவரு ளால்வரும் - இன்பம்
சுத்த சுகந்தனி யாநந்தம்' - எனச்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே, 9

"Its lustre is Chandra's; sempiternal
Is it which is Truth everlasting; when you
This invoke, lo, down will it descend sure
And hold you in its embrace and grant grace;
It is by this mantra mighty, all these worlds
Are, and act as a grand play of Maya.
Fie on that sastra - the utterly false,
Which for ever tries this to falsify. 7

The one original Being is the ocean
And lives are but its bubbles; that Lustre
Of Wisdom is the sun; the rays emitted
Are indeed lives; the rest of things whatever,
Be it known, are but the colours that do
From that being emanate; they that know
This Law of Hues are with bliss, aye, blessed;
'T is they who in work righteous engage themselves. 8

"They that in their Chittha do Siva seek
Are here very happy and rule the world;
Like the elephant majestic they walk
The earth in godly strides of blissful pride;
Daily happenings all, they know to be
The outcome of our Father's grace of yore;
Everything is with pleasance, well-being and bliss
Tinct; so they are by worries never touched. 9

’சோதி அறிவில் விளங்கவும் - உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் - அற
நீதி முறைவழு வாமலே - எந்த
நேரமும் பூமித் தொழில்செய்து - கலை
ஓதிப் பொருளியல் கண்டுதாம் - பிறர்
உற்றிடுந் தொல்லைகள் மாற்றியே - இன்பம்
மோதி விழிக்கும் விழியினார் - பெண்மை
மோகத்தில், செல்வத்தில், கீர்த்தியில், 10

’’ஆடுதல், பாடுதல், சித்திரம் -கவி
யாதி யினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் - பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் - அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் - சில
நாளினில் எய்தப் பெறுகுவார் - அவர்
காடு புதரில் வளரினும் - தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம். 11

’’ஞானியர் தம்மியல் கூறினேன் - அந்த
ஞானம் விரைவினில் எய்துவாய்’’ - எனத்
தேனி லினிய குரலிலே - கண்ணன்
செப்பவும் உண்மை நிலைகண்டேன் - பண்டை
ஈன மனிதக் கனவெலாம் - எங்ஙன்
ஏகி மறைந்தது கண்டிலேன்; - அறி
வான தனிச்சுடர் நான்கண்டேன்! - அதன்
ஆட லுலகென நான் கண்டேன்! 12

-1917

“It is lustre that their wisdom informs,
It is the shrewdness that their intellect informs,
Never do they from righteousness deviate,
In worldly work they are ever engaged,
They take to art, master economics,
They relieve their worries and those of others,
They joy in the bewitching presence of women
Whose eyes do burgeon sweet with bubbling joy 10

“And also are they ever devoted to wealth,
Dance and song, painting, poetry and arts
Such as these; they thus live a goodly life;
The meanness of men they cannot endure.
All their longings in a short little time
Are for them well-fulfilled; these may, I say
Choose the bushes of a jungle to dwell in;
Behold, that very jungle is God’s Eden. 11

“I have the nature of men of wisdom
Explained; may you that wisdom soon attain.”
When thus mellifluously did Kannan
Speak, I was with knowledge of truth possessed.
My base old human dreams did vanish all;
I did not know how this happened at all;
I behold the pure flame of highest wisdom
Whose play it is, this Universe of ours. 12

-T.N.Ramachandran

4. கண்ணம்மா - என் குழந்தை

(பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு)
(ராகம் - பைரவி, தாளம் - ரூபகம்)

ஸ ஸ ஸ - ஸா ஸா - பபப
தநீத - பதப - பா
பபப -பதப - பமா - கரிஸா
ரிகம - ரிகரி - ஸா
என்ற ஸ்வர வரிசைகளை மாதிரியாக வைத்துக்கொண்டு
மனோவாபப்படி மாற்றி பாடுக.

சின்னஞ் சிறு கிளியே, - கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்! 1

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே - என் முன்னே
ஆடி வருந் தேனே! 2

ஓடி வருகையிலே - கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடீ!
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ! 3

உச்சி தனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளரு தடீ!
மெச்சி யுனை யூரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ! 4

4. Sri Krishna, the Little Daughter

My little, flitting bird;
My soul's dear treasure;
Thou dost uplift my life
To pride from misery. 1

Sweet infant dew of love!
Image of living gold!
Honey, that tripping comes
That I may thee enfold! 2

My soul leaps in delight
To see thee speed to me;
And flies out to embrace
Thee frisking merrily. 3

A kiss upon thy brow
With pride doth make me swell;
With thrills I listen, when
Of thee my neighbours tell. 4

கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ!
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா!
உன்மத்த மாகுதடீ! 5

சற்றுன் முகஞ் சிவந்தால் - மனது
சஞ்சல மாகு தடீ!
நெற்றி சுருங்கக் கண்டால் - எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ! 6

உன்கண்ணில் நீர்வழிந்தால் - என்நெஞ்சில்
உதிரம் கொட்டு தடீ!
என்கண்ணிற் பாவையன்றோ? - கண்ணம்மா!
என்னுயிர் நின்ன தன்றோ? 7

சொல்லு மழலையிலே - கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடு வாய்;
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கந் தவிர்த்திடு வாய். 8

இன்பக் கதைகளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே - உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ? 9

மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிக ளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ? 10

-1917

Thy cheek against my lips,
Is to my heart like wine.
Sweet frenzy 'tis to hold'
Thee close, O darling mine, 5

A flush upon thy face
On me doth sorrow cast;
Thy knitted brow doth make
My pained heart flutter fast. 6

A tear thou lettest fall
Is blood spilt from my heart;
Dear apple of mine eye,
My precious life that art! 7

With infant lisping sweet
Thou conquerest my woes;
Thy pearly smile doth being
My angered heart repose. 8

What wondrous lore of books
Is pleasant like to thee?
Thy love, is such love known
To any Deity? 9

What gem like thee is fair
To wear upon my breast?
What wealth, but thou, could bless
My life with love and rest? 10

-Hephzibah Jesudasan

5. கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை

நகேதாரம் - கண்டஜாதி - ஏகதாளம்
ரசங்கள்; அற்புதம் , சிருங்காரம்

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. (தீராத)

1

தின்னப் பழங்கொண்டு தருவான்; - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீராத)

2

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்;
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான்; (தீராத)

3

அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழஅழச் செய்துபின், ''கண்ணை மூடிக்கொள்;
குழலிலே சூட்டுவேன்'' - என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான். (தீராத)

4

பின்னலைப் பின்னின் றிழுப்பான்; - தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே - புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீராத)

5. Kannan My Playful Boy

A persistent playboy is Kannan
To the girls in his street a perpetual nuisance.

Fruits he will give me to eat,
Then snatch them to see my hopes foiled;
If I beg him, "My darling, my sweet,"
He will give them back, bitten and soiled! 1

Honey-Sweet things he will place
Out of my reach to annoy;
He will call me his gazelle of grace,
And a sharp pinch will shorten my joy. 2

With beautiful flowers he will tease,
Make me cry, tempt me no end,
"Close your eyes, you shall have these";
I do and they pass to my friend! 3

He will pull at my plait from behind,
I turn, he is out of my view;
Handful of dust most unkind
He has heaped on my sari brand new! 4

5

புல்லாங் குழல்கொண்டு வருவான்; - அமுது
பொங்கித் ததும்புநற் பீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம். (தீராத)

6

அங்காந் திருக்கும்வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகிலும் பார்த்த துண்டோ ? - கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ? (தீராத)

7

விளையாட வாவென் றழைப்பான்; - வீட்டில்
வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்;
இளையாரொ டாடிக் குதிப்பான்; - எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான். (தீராத)

8

அம்மைக்கு நல்லவன் கண்டீர்! - மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே,
எம்மைத் துயர்செய்யும் பெரியோர் - வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான். (தீராத)

9

கோளுக்கு மிகவும் சமர்த்தன்; - பொய்ம்மை
குத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்;
ஆளுக் கிசைந்தபடி பேசித் - தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான். (தீராத)

-1917

His magical flute he would play
And flood us with nectar divine;
Eyes closed, mouths open we would stay
And lap up that exquisite wine. 5

On us thus absorbed six or seven
Thick black ants he would loose
Was there ever on earth or in heaven
A mischief to rival this ruse? 6

We must turn up for play as he bids;
Our work is as nothing to his game;
He will run, jump, dance with the kids,
Steal home and hold us to blame. 7

Mama's darling is he, if you please,
Auntie Awful's too, Papa's ditto;
To those tormenting old folk this tease
Is a model most fair and fit, oh! 8

Expert in carrying tales,
He has no scruples, no fears;
His cunning, when he is caught, never fails,
And he sets us poor girls by our ears. 9

-P.S.Sundaram

6. கண்ணன் - என் - காதலன்

(காட்டிலே தேடுதல்)

ஹிந்துஸ்தானி தோடி - ஆதி தாளம்
ரசங்கள்: பயாநகம், அற்புதம்.

திக்குத் தெரியாத காட்டில் - உனைத்
தேடித் தேடி இளைத்தேனே. 1

மிக்க நலமுடைய மரங்கள், - பல
விந்தைச் சுவையுடைய கனிகள், - எந்தப்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள், - அங்கு
பாடி நகர்ந்து வரு நதிகள், - ஒரு 2 (திக்குத்)

நெஞ்சிற் கனல்மணக்கும் பூக்கள், - எங்கும்
நீளக் கிடக்குமலைக் கடல்கள் - மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள், - முட்கள்
மண்டித் துயர்பொடுக்கும் புதர்கள், - ஒரு 3 (திக்குத்)

ஆசை பெறவிழிக்கும் மான்கள், உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள், - நல்ல
நேசக் கவிதைசொல்லும் பறவை, - அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு, - ஒரு 4 (திக்குத்)

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம் - அதன்
சத்தத் தினிற்கலங்கு யானை அதன்
முன்னின் றோடுமிள மான்கள் - இவை
முட்டா தயல்பதுங்குந் தவளை - ஒரு 5 (திக்குத்)

கால்கை சோர்ந்துவிழ லானேன் - இரு
கண்ணும் துயில்படர லானேன் - ஒரு
வேல்கைக் கொண்டுகொலைவேடன் - உள்ளம்
வெட்கம் கொண்டொழிய விழித்தான் - ஒரு 6 (திக்குத்)

6. Kannan My beloved

(The Search in a Forest)

Looking for you in a forest
O how tired and lost was I! 1

Goodly trees all around
Laden with wonderful fruits,
Bamboo enclosures arow,
Streams that make music like lutes. 2

Flowers that set hearts aflame,
Oceans of scattered leaves,
Wide and tempting pools,
And bushes with thorny sheaves. 3

Long-eyed and lovely gazelles,
Tigers rehearsing their roar,
Birds with their friendly lays
And pythons stretched on the floor. 4

Lions striding like kings
Elephants a - tremble to hear them,
Young does scattering in front,
And frogs that wouldn't go near them. 5

Foor-sore and weary I stumbled,
My eyes through the gloom ceased to peer,
When suddenly stood there before me
A hunter with a spear and a leer! 6

''பெண்ணே உனதழகைக் கண்டு - மனம்
பித்தங்கொள்ளு'' தென்று நகைத்தான் - ''அடி
கண்ணே, எனதிருகண் மணியே - எனைக்
கட்டித் தழுவமனம் கொண்டேன். 7 (திக்குத்)

சோர்ந்தே படுத்திருக்க லாமோ? - நல்ல
துண்டக் கறிசமைத்துத் தின்போம் - சுவை
தேர்ந்தே கனிகள் கொண்டு வருவேன் - நல்ல
தேங்கள் ளுண்டினிது களிப்போம்.'' 8 (திக்குத்)

என்றே கொடியவிழி வேடன் - உயிர்
இற்றுப் போகவிழித் துரைத்தான் - தனி
நின்றே இருகரமுங் குவித்து - அந்த
நீசன் முன்னர் இவை சொல்வேன்: 9 (திக்குத்)

''அண்ணா உனதடியில் வீழ்வேன் - எனை
அஞ்சக் கொடுமைசொல்ல வேண்டா - பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணே - என்றன்
கண்ணாற் பார்த்திடவுந் தகுமோ?'' 10 (திக்குத்)

''ஏடி, சாத்திரங்கள் வேண்டேன்: - நின
தின்பம் வேண்டுமடி, கனியே, - நின்றன்
மோடி கிறுக்குதடி தலையை, - நல்ல
மொந்தைப் பழையகள்ளைப் போலே'' 11 (திக்குத்)

காதா லிந்தவுதை கேட்டேன் - 'அட
கண்ணா!' வென்றலறி வீழ்ந்தேன் - மிகப்
போதாக வில்லையிதற் குள்ளே - என்றன்
போதந் தெளியநினைக் கண்டேன். 12 (திக்குத்)

கண்ணா! வேடனெங்கு போனான்? - உனைக்
கண்டே யலறிவிழுந் தானோ? - மணி
வண்ணா! என தபயக் குரலில் -எனை
வாழ்விக்க வந்தஅருள் வாழி! 13 (திக்குத்)

-1917

"My girl, with your ravishing beauty
You have driven me carzy," he said:
"Darling, the apple of my eye,
I must hug you and take you to bed. 7

"How come you are tired and lost?
Good meat let us prepare and eat;
I will fetch you delicious fruits
And toddy divinely sweet." 8

So spoke that grim-eyed hunter,
His stare put my poor soul a - stretch;
On the rack, with folded hand,
I said these words to that wretch; 9

"My brother, I fall at your feet;
With evil words don't frighten me;
A woman, another man's wife,
Is it right you should even see?" 10

"Have done, I want no preaching;
It is pleasure I seek of your body;
Your dalliance makes my head whirl,
My dear, like frothy old toddy." 11

I heard those words and screaming
"Kannan" I swooned in my fear;
Not many moments since then
I awake and find you here. 12

O Kannan, where is that hunter?
Was it he that screamed, fell a-swoon?
My jewel, come to rescue me,
How bountiful is your boon! 13

-P.S.Sundaram

7. கண்ணம்மா - என் காதலி

(காட்சி வியப்பு)

செஞ்சுருட்டி - ஏகதாளம்
ரசங்கள் : சிருங்காரம், அற்புதம்

சுட்டும் விழிச்சுடர் தான், - கண்ணம்மா!
சூரிய சந்திர ரோ?
வட்டக் கரிய விழி, - கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் - தெரியும்
நக்ஷத் திரங்க ளடீ! 1

சோலை மல ரொளியோ - உனது
சுந்தரப் புன்னகை தான்
நீலக் கடலலையே - உனது
நெஞ்சி லலைக ளடீ!
கோலக் குயி லோசை - உனது
குரலி னிமை யடீ!
வாலைக் குமரி யடீ, - கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன். 2

சாத்திரம் பேசுகிறாய், - கண்ணம்மா!
சாத்திர மேதுக் கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே, - கண்ணம்மா!
சாத்திர முண்டோ டீ!
மூத்தவர் சம்மதியில் - வதுவை
முறைகள் பின்பு செய்வோம்;
காத்திருப் பேனோ டீ? - இதுபார்,
கன்னத்து முத்த மொன்று! 3

-1917

7. Kannamma - My Love

(Wonderment of Sight)

Kannamma! Kannamma!
Shining orbs are thine eyes -
Are they not sun and moon?
Black and round are thine eyes-
Are they not heavenly dark?
Silk-blue saree thou wearest
Woven with diamonds.
They indeed are the stars
Twinkling at the dead of night. 1

Kannamma! Kannamma!
Is not thy smile of beauty
The light and bloom of Eden?
The billows of ocean blue
Romp and dance in thy heart,
Koel's voice is sweet indeed;
Whose it is, but thine own
Virgin sempiternal
Oned with thee will I be. 2

Kannamma! Kannamma!
Sastras all from thee pour;
Why do you cite Sastras?
Where is need for them? I say.
When wings of love waft aloft
Sastras are set at naught.
Before all elders great
Our wedding we will have.
Wait I can no longer
Feel my kiss on thy cheek! 3

-T.N.Ramachandran

13.46 பாஞ்சாலி சபதம்

திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை

துச்சா தனன்எழுந்தே-அன்னை
துகிலினை மன்றிடை யுரித லுற்றான்.
அச்சோ, தேவர்க ளே! -என்று
அலறி அவ் விதுரனுந் தரைசாய்ந் தான்.
பிச்சே றியவனைப் போல்-அந்தப்
பேயனுந் துகிலினை உரிகையி லே,
உட்சோ தியிற் கலந்தாள்-அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமை யுற்றாள். 1

ஹரி, ஹரி, ஹரி என்றாள்; -கண்ணா!
அபய மபயமுனக் கபய மென் றான்.
கரியினுக் கருள்புரிந் தே-அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித் தாய்!
கரிய நன்னிற முடையாய்! -அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந் தாய்!
பெரியதொர் பொருளா வாய்! -கண்ணா!
பேசரும் பழமறைப் பொருளா வாய்! 2

சக்கர மேந்தி நின்றாய்! -கண்ணா!
சாரங்கமென் றொருவில்லைக் கரத்துடையாய்!
அட்சரப் பொருளா வாய்! -கண்ணா!
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்!
துக்கங்கள் அழித்திடுவாய்!-கண்ணா!
தொண்டர்கண் ணீர்களைத் துடைத்திடு வாய்!
தக்கவர் தமைக்காப் பாய், -அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்துவிட் டாய். 3

13.46. The Oath of Draupati

Draupati's Paryer to Lord Krishna

Duhshasana rose up and began
To disrobe the Mother in that Court;
"Alack-a-day, o ye gods!" cried Vidura
And fell on the floor in a terrible swoon.
Like one demented, as the ghoul
Busied himself in disrobing
She became one with the Inner Light;
Dead to the world, the Mother tuned into Oneness. 1

"Hari! Hari! Hari!" she exclaimed;
"I seek refuge in you" she cried.
"There in the past, bestowing grace on the Tusker
You smote in the lake, the crocodile
O God of dark hue! You once did dance
On the hood of monster Kalinga;
You are the Being infinite,
The essence of hoary Vedas ineffable. 2

"You wield the whirling disc, Kanna!
The Bow Sarang decks your hand!
You are the import of the Logos, Kanna!
You are the tender babe, the eater of sugared rice,
You'll quell all sorrows, oh Kanna!
You wipe the tears from devotee-eyes!
You succour the worthy, oh Kanna!
You are the creator of the four-faced Creator! 3

வானத்துள் வானா வாய, -தீ
மண், நீர், காற்றினில் அவையா வாய்;
மோனத்துள் வீழ்ந்திருப் பார்-தவ
முனிவர்தம் அகத்தினி லொளிர்தரு வாய்;
கானத்துப் பொய்கையி லே-தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்,
தானத்து ஸ்ரீ தேவி, -அவள்
தாளிணை கைக்கொண்டு மகிழ்ந்திருப் பாய்! 4

ஆதியி லாதி யப்பா! -கண்ணா!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொரு ளே!
சோதிக்குஞ் சோதி யப்பா! -என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடு வாய்!
மாதிக்கு வெளியினி லே-நடு
வானத்திற் பறந்திடும் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடு வாய், -கண்ணா!
சுடர்ப் பொருளே பே ரடற்பொரு ளே! 5

கம்பத்தி லுள்ளா னோ-அடா!
காட்டுன் றன் கடவுளைத் தூணிடத் தே!
வம்புரை செயு மூடா-என்று
மகன்மிசை யுறுமியத் தூணுதைத் தான்
செம்பவிர் குழலுடை யான்; -அந்தத்
தீயவல் லிரணிய னுடல்பிளந்தாய்!
நம்பிநின் னடிதொழு தேன்; -என்னை
நாணழி யாதிங்கு காத்தருள் வாய். 6

"You are the Space of Space, the heat of Fire;
The soul of Earth and Water; the force of Wind;
You blaze forth radiant in the souls
Of those immersed in Great Silence
On the lotus soft in the sylvan pool
She sits, there enthroned;
She is Sri Devi; you hold in your hands
Her feet twain in bliss unending. 4

"You are the beginninglies Beginning, Kanna!
You are the ethereal Being beyond buddhi!
You are the inner ray of light, oh Father!
Be pleased to hear me and grant grace!
In the vast skiey expanse wings Garuda;
You ride on him a blaze of light, Kanna!
Oh being ineffable oh puissance peerless! 5

"Does he in the pillar lurk? Sirrah,
Show me your God in this obelisk!
O fool of a rumour-monger vain!" So he roared
And smote the pillar with his foot,
He the copper-haired tyrant.
You did rive that Hiranya's frame,
I adore you in faith absolute;
Save me in grace from dire dishonour. 6

வாக்கினுக் கீசனை யும்-நின்றன்
வாக்கினிலசைத்திடும் வலிமையி னாய்,
ஆக்கினை கரத்துடை யான்-என்றன்
அன்புடை எந்தை! என் னருட்கடலே!
நோக்கினிற் கதிருடை யாய்! -இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள் வாய்!
தேக்குநல் வானமு தே! -இங்குச்
சிற்றிடை யாய்ச்சி யில் வெண்ணெ யுண்டாய்! 7

வையகம் காத்திடு வாய்! ; -கண்ணா!
மணிவண் ணா, என்றன் மனச் சுடரே!
ஐய, நின் பதமல ரே-சரண்.
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி! என்றாள்.
பொய்யர்தந் துயரினைப் போல், -நல்ல
புண்ணிய வாணர்தம் புகழினைப் போல்,
தையலர் கருணையைப் போல், -கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல். 8

பெண்ணொளி வாழ்த்திடு வார்-அந்தப்
பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல் போல்,
கண்ண பிரானரு ளால், -தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதி தாய்
வண்ணப்பொற் சேலைக ளாம்-அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தன வே!
எண்ணத்தி லடங்கா வே; -அவை
எத்தனை எத்தனை நிறத்தன வோ! 9

"You sway by your fiat of might
The Lord of Utterances!
The ruling disc your hand does wield,
O my sea of vast mercy!
Rays of grace from your eyes issue;
Save me from the wicked hundred;
O ethereal nectar inly surging,
Eater of butter in Gopi's homes. 7

"Protector of Earth, oh Kanna!
Oh gem-hued! Oh my lamp of mind!
Oh sire! I seek refuge in your flowery feet:
Hari, Hari, Hari, Hari, Hari!" she chanted.
Like the growing woes of base liars,
Like the endless renown of the righteous,
Like the limitless compassion of women,
Like the ceaseless waves of the sea; 8

Like the ever-increasing, wealth of them
That bless the domestic lamps, the women,
By the grace of Lord Kanna, even as the wretch
Continued to disrobe, robe after new robe
Grew and grew and grew on her,
They defied reckoning; many, oh many
Were their hues and poly-genitive. 9

பொன்னிழை பட்டிழை யும்-பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைக ளாய்
சென்னியிற் கைகுவித் தாள்-அவள்
செவ்விய மேனியைச் சார்ந்துநின் றே
முன்னிய ஹரிநா மம்-தன்னில்
மூளுநற் பயனுல கறிந்திட வே,
துன்னிய துகிற்கூட் டம்-கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட் டான். 10

தேவர்கள் பூச்சொரிந் தார்-ஓம்
ஜெயஜெய பாரத சக்திஎன்றே.
ஆவலோ டெழுந்து நின்று-மன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழு தான்.
சாவடி மறவரெல் லாம்-ஓம்
சக்திசக்தி சக்திஎன்று கரங்குவித் தார்.
காவலின் நெறிபிழைத் தான்-கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந் தான். 11

வீமன் செய்த சபதம்

வேறு

வீமனெழுந் துரைசெய் வான்:-இங்கு
விண்ணவ ராணை, பரா சக்தி யாணை;
தாமரைப் பூபினில் வந்தான்-மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை;
மாமகளைக் கொண்ட தேவன் எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் பதத்தாணை
காமனைக் கண்ணழ லாலே-சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடிமீதில் 12

Woven of gold and silk, many were they,
And many - new, for ever new,
From her frame divine did issue,
She raised her worshipping hands to her head.
Thus to the world was by her demonstrated
The greatness of Lord Hari's name.
As the robe was un unending continuum
Slave Duhshasana fell down undone, aye, utterly. 10

The Devas chantign "Om, Jaya Jaya
Bharata Sakti" rained flowers.
Up rose avidly the Arya Bhishma
And folded his hands in adoration.
The monarchs in court joining hands
Chanted: "Om Sakti! Sakti! Sakti!"
Down hung the head of him, the misruler,
The one whose flag is with serpent dight. 11

The Oath of Bhima

Rose Bhima and roared: "I swear
In the name of Devas, in the name
Of Parasakti, in the name of His holy feet,
The lotus-born proclaimer of Vedas,
In the name of the hallowed feet of Kanna,
The Lord of our race and Sri Devi,
In the name of the golden feet of Him
Whose eye gutted Kama with fire. 12

ஆணையிட் டிஃதுரை செய்வேன்:-இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் றன்னை,
பேணும் பெருங்கன லொத்தாள்-எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடைமீதில்
நாணின்றி வந்திருஎன்றான்-இந்த
நாய்மக னாந்துரி யோதனன் றன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே, -என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே, 13

தொடையைப் பிளந் துயிர் மாய்ப்பேன்-தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்; -அங்கு
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்,
நடைபெறுங் காண்பி ருலகீர்! -இது
நான்சொல்லும் வார்த்தைஎன் றெண்ணிடல் வேண்டா
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை-இது
சாதனை செய்க, பராசக்தி! என்றான். 14

அர்ஜுனன் சபதம்

பார்த்தனெழுந்துரை செய்வான்:-இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு-எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழ லாணை;
கார்த்தடங் கண்ணி எந்தேவி -அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை;
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய், -ஹே!
பூதலமே! அந்தப் போதினில்என்றான். 15

“This my terrible oath: “This Duryodhana,
The base braggart every inch the reverse of man,
This son of a dog that shamelessly barked
At our Queen Draupati - the great flame
Of pure chastity, to sit on his lap;
I’ll by my valour, in the arena of battle
Before kings who are forsaker, by renown.
Smite his thigh and slaughter him. 13

“There will I also tear limb by base limb
This fellow, Duhshasana of pseudo-valour
And drink his gushing blood like wine,
O ye of the world, you’ll this witness!
These aren’t words that I utter;
They are from the unfetterable Deity
And so, may Parasakti this fulfil.” 14

The Oath of Arjuna

Rose Partha and solemn swore;
“I’ll butcher this base Karna in the battle;
I swear this in the name of the hallowed feet
Of glorious Kanna, our friend and God Vishnu;
In the name of her darksome eyes - our Queen,
And in the name of Gandiv - my bow.
O world, you’ll sure behold at that hour
Horrendous marvels of warfare.” 15

பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்-ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர், -அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து-குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன் யான்; -இது
செய்யு முன்னே முடியேனென் றுரைத்தாள். 16

ஓமென் றுரைத்தனர் தேவர்; -ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சி உண்டாச்சு-விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று.
சாமி தருமன் புவிக்கே -என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்!
நாமுங் கதையை முடித்தோம்-இந்த
நானில முற்றும் நல் லின்பத்தில் வாழ்க! 17

-1912

The Oath of Draupati

Devi Draupati spake: “Om! I declare
The fiat of Goddess Parasakti;
The red blood of sinner Duhshasana
Must flow to meet the blood gushing from
Blasted Duryodhana’s body; at their confluence
I’ll soak my tresses, then bathe clean
And with odoriferous oil scent my hair
And gather it all into a bun, and not before.” 16

Devas chaunted: “Om, Om Om.”
Heaven rumbled its ‘Amen’
The earth did quake; a blizzard
Smote the sky with a storm of dust.
The elements five then attested;
“It is Dharma who is the Lord of Earth.”
Our mission stands fulfilled.
May this world fourfold be in bliss immersed. 17

-T.N.Ramachandran